Registered as a News Paper in Sri lanka

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு - 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 23 சனிக்கிழமை (08.08.2015) பக்கங்கள் 20 ஓசை - 3011




# கூட்டமைப்பு மீதான மக்களின் அதிருப்தியை வன்முறையால் மாற்ற முடியாது

## புங்குடுதீவு சம்பவம் குறித்து ஈ.பி.டி.பி கண்டனம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வன்முறை அரசியலை ஆரம்பித்திருக்கின்றனர்.

எமது மக்கள் வன்முறை அரசியலை விரும்பவில்லை எனவே இதுபோன்ற மக்கள் விரோத நடவடிக்கைகளை தேர்தல் தந்திரோபாயமாக கூட்டமைப்பு முன்னெடுப்பதை ஈ.பி.டி.பி. கண்டிக்கின்றது என புங்குடுதீவு சம்பவம் தொடர்பாக அக்கட்சி வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அதில மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

19 ஆம் பக்கம் பார்க்க

## 6 மாகாண சபை உறுப்பினர்களை நீக்கியது ஐ.ம.சு.முன்னணி

(கொழும்பு)

ஹிருணிகா பிரேமச்சந்திர, நிசாந்த சிறிவர்ணசிங்க உள்ளிட்ட ஆறு மாகாணசபை உறுப்பினர்களை

19 ஆம் பக்கம் பார்க்க

## சு.க.மத்திய குழுக் கூட்டத்தை கூட்டுவதற்கான தடை நீடிப்பு

(கொழும்பு)

கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் அனுமதியின்றி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டங்களை கூட்டுவதற்கு விதிக்கப்பட்ட தடை உத்தரவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று நீடித்துள்ளது.

கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் அனுமதியின்றி கூட்டங்களைக் கூட்டுவதற்கான தடையை நீடித்து நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

நடக்கவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தை கூட்டுமாறு மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் வலியுறுத்திவரும் நிலையில் இந்த தடை உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர் பிரசன்னா சோழன்கராச்சி தாக்கல் செய்த மனுவின்

19 ஆம் பக்கம் பார்க்க

## மாணவி சடலமாக கிணற்றிலிருந்து மீட்பு

(வவுனியா)

வவுனியா நெளுக்குளம் குகன் நகர் பகுதியிலிருந்து விபுலானந்தக் கல்லூரியில் கல்வி கற்கும் குணசேகரம் திவ்யா என்ற 19 வயது மாணவி பொதுக கிணறொன்றிலிருந்து சடலமாக நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் மீட்கப்பட்டு வவுனியா பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா விபுலானந்தாக் கல்லூரியில் கல்வி கற்று வந்த குறித்த மாணவி தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் பரீட்சை எழுதுவதற்கு தனது அனுமதி அட்டையினைப் பெறுவதற்காக பாடசாலை அதிபரிடம் சென்றுள்ளார்.

அதிபர் அனுமதி அட்டை கொழும்பிலிருந்து இரண்டு தினங்களில் வந்ததும் தருவதாக



கூறியுள்ளார். இரண்டு தினங்களின் பின்னர் தாயுடன் அனுமதி

19 ஆம் பக்கம் பார்க்க

## பொருத்தமானவர்களை தெரிவு செய்யுங்கள்

### ஜனாதிபதி அறிவுரை

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் நாடாளுமன்றத்துக்கு பொருத்தமானவர்களை மட்டுமே தெரிவு செய்ய வேண்டியது நாட்டில் உள்ள எல்லா வாக்காளர்களினதும் மிகப்பெரும் பொறுப்பாகும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

19 ஆம் பக்கம் பார்க்க

# போதைப்பொருட்களுடன் பிள்ளைகள் பிடிபட்டால் பெற்றோரும் கைதாவர்

## நீதிபதி இளஞ்செழியன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்படுபவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படும் அதேவேளை, பிள்ளைகள் பிடிபட்டால் அவர்களுடைய பெற்றோர்களும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தால் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள் என யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், நேற்று தெரிவித்தார்.

கஞ்சா வழக்கு தொடர்பிலான விசாரணை நேற்றையதினம் நடைபெற்றபோதே நீதிபதி இவ்விடயத்தை தெளிவுபடுத்தினார்.

போதைப்பொருள் பாவனையில் ஈடுபடும் பிள்ளைகளின் பெற்றோர்கள் கைது செய்யப்படுவார்கள். அவர்களுக்கு உணவு, அடைக்கலம் கொடுத்து அவர்களைத் தட்டிக்கொடுக்கும் பெற்றோர்கள், அவர்களை கைது செய்ததும் பிணை கேட்டு நீதிமன்றத்துக்கு வந்து

19 ஆம் பக்கம் பார்க்க






போதை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு வடமாகாண மதுவரித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் போதைப்பொருள் விழிப்புணர்வுப் பேரணி யாழ்.நகரில் நேற்று இடம்பெற்றபோது...

# பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வை மேம்படுத்துவதே எமது இலக்கு

## பூநகரி மக்கள் சந்திப்பில் முதன்மை வேட்பாளர் டக்ளஸ்

(பூநகரி)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது மக்களின் வாழ்வை பலப்படுத்தி, வளப்படுத்துவதே தமது நோக்கமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம் (கிளிநொச்சி) பூநகரி பள்ளிக்குடா, இறங்குதுறை பகுதி கடற்தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்தகால கோரயுத்தம் காரணமாக எமது மக்கள் பல்வேறு உயிர், உடமை இழப்புக்களைச் சந்தித்திருந்த அதேவேளை, அவர்களுக்கான வாழ்வாதாரம் அழிக்கப்பட்டதுடன், தொழில் மூலங்களும் அழிவடைந்திருந்தன.

குறிப்பாக, யுத்தத்தினால் நாளாந்த வாழ்வில் பல்வேறு இடர்பாடுகளைச் சந்தித்த எமது மக்கள் மீளவும் தமது இயல்பு வாழ்வைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவைப்பாடு முக்கியமாகவுள்ளது. அதனடிப்படையில், இன்று கிடைக்கப் பெற்றுள்ள இந்த அமைதிச் சூழலில் மக்கள் தமது இருப்பை உறுதி செய்ய வேண்டியதும் அவசியமாகின்றது.

குறிப்பாக, வடபகுதி கடற்றொழிலாளர்கள் உள்ளூர் மற்றும் இந்திய மீனவர்களின் அத்துமீறியதும், தடை செய்யப்பட்டதுமான தொழில் நடவடிக்கைகளால் நாளாந்தம் பல்வேறுபட்ட இடர்பாடுகளை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இருந்த போதிலும், கடந்த கால அரசுடனான எமது நல்லுறவின் ஊடாக நாம் பல்வேறுபட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களை யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் முன்னெடுத்துள்ளோம்.

இருந்த போதிலும், போதாத நிலையே காணப்படுகின்றது. எனவே, யுத்த பாதிப்புக்குள்ளான எமது மக்களின் வாழ்வை உறுதி செய்வதற்கு சரியான அரசியல் தலைமையை மக்கள் தெரிவு செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயமாக உள்ளது.

அந்த வகையில், பள்ளிக்குடா பகுதியில் வாழும் மக்களதும், கடற்றொழிலாளர்களதும் அடிப்படைத் தேவைகளுக்கும், ஏனைய பிரச்சினைகளுக்கும் நல்லதொரு தீர்வினைப் பெற்றுத் தருவதே எமது இலக்காகும்.

குறிப்பாக, குடிநீர், போக்குவரத்து, கடற்றொழில் சார்ந்த பிரசசினைகள், வாழ்வாதாரம் உள்ளிட்ட பிரச்சினைகளுக்குமான தீர்வு விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே, வருகின்ற சந்தர்ப்பத்தை உரியமுறையில் பயன்படுத்தி, அதன்மூலமான அனுகூலங்களைப் பெற்றுக் கொள்வதற்கு முன்வர, வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இதனிடையே, பள்ளிக்குடா இறங்குதுறையை பார்வையிட்ட செயலாளர் நாயகம் அதன் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பிலும் கவனம் செலுத்தினார்.

இதேபோன்று, பள்ளிக்குடா வளர்மதி இறங்குதுறையையும் டக்ளஸ் தேவானந்தா பார்வையிட்டதுடன், அங்கிருந்த கடற்றொழிலாளர்களுடனும் கலந்துரையாடி, அவர்களது தேவைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார். அத்துடன், முழங்காவில் சிறி செல்வயோக சித்தி விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற சிறப்புப் பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்ட டக்ளஸ தேவானந்தா தமது செயற்பாடுகளில் ஒன்றான அப்பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு சென்று, வர்த்தகர்களுடனும் கலந்துரையாடியுள்ளார்.

**நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015**



**ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன்**

(வடமராட்சி ஈ.பி.டி.பி. இணைப்பாளர்)

X 1

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

## கம்பன் விழா - 2015

(யாழ்ப்பாணம்)

கவியரசர் கம்பனின் பெயரால் கடந்த 35 ஆண்டுகளாக இயங்கிவரும் அகில இலங்கை கம்பன் கழகம் நடாத்தும் கம்பன் விழா நேற்று ஆரம்பமாகிய நிலையில் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளது.

இன்று காலை, மாலை என இரு அமர்வுகளாக இடம்பெறும் இந் நிகழ்வில் காலை நிகழ்வுகள் நல்லூர் கம்பன் கோட்டத்திலும், மாலை நிகழ்வுகள் நல்லூர் ஸ்ரீதுர்க்கதேவி மணி மண்டபத்திலும் இடம்பெறவுள்ளன.

இன்று காலை நிகழ்வுகள் பொது வைத்திய நிபுணர் எஸ். சிவன்சுதன் தம்பதியினரின் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும். நிகழ்வில் "தர்மத்தின் தீர்ப்பான்" எனும் பொருளிலான இலக்கிய பேருரையும் "இராமனுக்கு ஏற்பட்ட தர்மசங்களுங் தலையாயது ஏது?" எனும் தலைபபில் 'இலக்கியச்சுடர்' த.இராமலிங்கம் (தமிழ் நாடு) தலைமையில் விவாத அரங்கும் இடம் பெறவுள்ளது.

மாலை நிகழ்வுகள் வைத்திய நிபுணர் எஸ். பிறேம கிருஷ்ணா தம்பதியினரின் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும். "தவறிழைத்தும் தலைவனாய் பெரிதும் நிலைத்து நிற்பவன் யார்? தசரதனே! வாலியே, இராவணனே" எனும் தலைப்பிலான பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது. இதற்கு நடுவராக கம்பவாரிதி இ.ஜெயராஜ் கலந்து கொள்ளவுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை காலை நிகழ்வுகள் வைத்திய நிபுணர் ரி. கோபிசங்கர் தம்பதியினரின் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும் நிகழ்வில் சிறப்பு நிழ்வாக கலாநிதி ஸ்ரீ பிரசாந்தன் தலைமையில் கவியரங்கம் நடைபெறும். ஞாயிறு மாலை நிகழ்வுகள் வைத்திய நிபுணர் ரி. பேரானந்தராஜாவின் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்ப மாகும். மாவட்ட அரச அதிபர் மா. வேதநாயகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் தொடக்கவுரை யாற்றுவர். தொடர்ந்து பேராசிரியர் த.ராஜாராம் தலைமையிலான வழக்காடு மன்றம் இடம பெறும். (54)

## நீர்ப்பற்றாக்குறையால் அசௌகரியம்

(நெடுங்கேணி)

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து தரிப்பு நிலையத்தில் குடிநீருக்குத் தட்டுப்பாடு நிலவி வருவதாக ஊழியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முல்லைத்தீவு பேருந்து சாலையில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும் குடி தண்ணீர் மற்றும் வேறு தேவைகளுக்கான தண்ணீர் வசதிகள் இல்லாமையினால் ஊழியர்கள் கடும் சிரமத்தை எதிர் நோக்குவதாக ஊழியர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக அதிகாரிகளிடமோ மேலதிகாரிகளிடமோ முறையிட்டபோதிலும் எந்தவித பயனும் ஏற்படவில்லை.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்துக்கு கொண்டு வந்து இவ் ஊழியர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுத் தரும்படி கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)

**சிறு விளம்பரம்**

**வீடு விற்பனைக்கு**

சுதுமலை தெற்கில் ஒரு புதிய கல்வீடு விற்பனைக் குண்டு. தொடர்பு: ஏகாம்பரநாதன் (கடை), சம்பந்தர் ஒழுங்கை, சுதுமலை தெற்கு, சுதுமலை. (R/509)

**வாழ்க வளமுடன்**

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர்: த. நிரோஜன்

முகவரி: நல்லூர், யாழ்ப்பாணம்.




அகவை 4 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

# ஏமாற்றுவித்தை காட்டுபவர்களுக்கு மக்கள் நல்ல பாடம்புகட்ட வேண்டும்

## வேட்பாளர் ஜீவன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வெறும் துண்டுப்பிரசுரங்களை மட்டும் வழங்கி மக்களுக்கு ஏமாற்றுவித்தைகளை காட்டுபவர்களுக்கு மக்கள் நல்ல பாடம புகட்ட வேண்டும். அதுமட்டுமன்றி இவர்களுக்கு மத்தியில் கடந்த மூன்று தசாப்த காலத்தில் மக்களோடு மக்களாக இருந்து சேவை செய்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியை வடக்கில் வாழும் எந்த ஒரு தமிழ்மகனும் மறக்க மாட்டார் என நாடாளுமன்ற வேட்பாளரும் முன்னாள் வலி. மேற்கு பிரதேச சபை எதிர்க் கட்சி தலைவருமான சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்) தெரிவித்தார்.

வலி.மேற்கு பிரதேச சபைக் குட்பட்ட சுழிபுரத்தில் மாபெரும் மக்கள் சந்திப்பு இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட வலிகாமம் ஈ.பி.டி.பி.இணைப் பாளரும் முன்னாள் வலி.மேற்கு எதிர்க்கட்சித் தலைவருமான சிவ குருபாலகிருஸ்ணன் மேலும் தெரிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் வாழும் மக்கள் ஒன்றிணைந்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கு வாக்களிக்க துணிந்து நிற்கின்றனர்.

மக்கள் முன்சேவை செய்யாதவர்களும், மக்களுக்கு அறி முகமில்லாதவர்களும் இன்று வாக்குக்கேட்டு துண்டுப்பிரசுரங் களை மக்களுக்கு வழங்குகின்றனர்.

நாம் கடந்த 30 வருட்ங்களாக பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை பாரிய அளவில் முன்வைத்து ஆயிரக் கணக்கான மக்களினதும், இளைஞர்களினதும் வாழ்வில் ஒளி யேற்றி உள்ளோம்.

இன்றும் மக்களுக்கு நாம் தொடர் வாழ்வாதார உதவி, குடி தண்ணீர், மின்சாரம் மற்றும் உட் கட்டுமான சேவைகளை முன் வந்து வழங்கி வருகின்றோம்.

எம்மைப்போன்று இதுவரை எந்தக் கட்சிகளும், எந்த சுயேட்சைக் கட்சிகளும் சேவைகளோ உதவித் திட்டங்களோ செய்யாது வெறும் "நோட்டீஸ்" கொடுத்து மக்களை ஏமாற்றுகின்றனர்.

இவ்வாறு ஏமாற்று வித்தை காட்டுபவர்களுக்கு எதிர்வரும் 17 ஆம் திகதி மக்கள் பாடம் புகட்ட வேண்டும் என வேட்பாளர் சிவகுருபாலகிருஸ்ணன் கேட்டுள்ளார். (92)

# ஒலி எழுப்பி ஆபத்தான முறையில் வாகனம் ஓட்டியவருக்கு அபராதம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நீதிமன்றத்தின் செயற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது, ஒலியை எழுப்பியவாறு மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றதுடன் ஆபத்தான முறையில் வாகனம் ஒன்றை முந்திச் சென்ற நபருக்கு 4,500 ரூபா அபராதம் விதித்து கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.ஐ.வகாப்தீன் தீர்ப் பளித்தார்.

மேலும், குற்றவாளியின் சாரதி அனுமதிப்பத்திரத்தை 3 மாத காலங்களுக்கு இடைநிறுத்தியும் நீதவான் உத்தரவிட்டார்.

கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இந்த நபருக்கு எதிராக 2 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதுடன், ஆபத்தான முறையில் வாகனத்தை முந்திச் சென்றமைக்கு 1,500 ரூபாவும் ஒலி எழுப்பியமைக்காக 3000 ரூபாவும் சாரதி அனுமதிப்பத்திர இடைநிறுத்தியும் தண்டனைகள் விதிக்கப்பட்டன.

# மலசலகூட வசதி இல்லாதோரின் விபரங்களை திரட்டுகிறது வேள்ட்விசன்

(வரணி)

வடவரணி ஜே/339 கிராம அலுவலர் பிரிவில் மலசல கூடவசதி இல்லாதோர் விபரம் வேள்ட்விசன் நிறுவனத்தால் தற்போது திரட்டப்பட்டுவருகிறது.

இப்பிரிவில் உள்ள அதிகமான வீடுகளில் மலசல கூட வசதி இல்லா திருப்பதால் குறிப்பாக பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் பெரும் இடையூறுகளை அனுபவித்து வருகின்றனர்.

இதேவேளை மலசல கூட வசதிகளற்ற பல குடும்பங்கள் இவ் விபரம் திரட்டல் நடவடிக்கையில் ஆர்வத்துடன் தமது பதிவுகளை மேற்கொண்டு வருவதைக் காண முடிகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கேதீஸ்வரம் கிணற்றை அகழ நீதிமன்றம் உத்தரவு



(மன்னார்)

மன்னார், திருக்கேதீஸ்வரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி அமைந்திருந்த பகுதியிலுள்ள கிணற்றை அகழ்ந்து சோதனையிடுவதற்கு மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றம், கடந்த புதன்கிழமை அனுமதி வழங்கியது. இதற்கமைய, மேற்படி கிணறு எதிர்வரும் 19ஆம் திகதி அகழ்வுக்கு உட்படுத்தப்படவுள்ளது.

காணாமற்போனவர்களின் சடலங்கள், குறித்த கிணற்றில் காணப்படலாம் எனவும் அதனால் மேற்படி கிணற்றை அகழ்வதற்கான அனுமதியினை வழங்குமாறு காணாமற்போனவர்களின் உறவினர்கள் சார்பாக ஆஜரான சட்டத்தரணிகள் வேண்டுகோள் விடுத்ததை அடுத்தே, அதற்கான அனுமதியினை நீதிமன்றம் வழங்கியது.

மன்னார், திருக்கேதீஸ்வரம் பகுதியில் கடந்த 2013ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி, கடந்த வருடம் மார்ச் மாதம் வரையான 32 தினங்கள் தொடர்ந்து தோண்டப்பட்டதை அடுத்து, 83 மனித மண்டை ஓடுகளும் எச்சங்களும் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஒஸ்மானியாக்கல்லூரியின் அதிபர் விடயத்தை வலியுறுத்தி கவனயீர்ப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியில் நீண்ட காலமாக நிலவி வரும் நிரந்தர அதிபர் விடயத்தை வலியுறுத்தி யாழ்.கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனம் ஏற்பாடு செய்த கவனயீர்ப்பு போராட்டம் நேற்று காலை 7.30 மணியளவில் நடைபெற்றது.

இதன் போது போராட்டத்தில் கலந்துகொண்ட பாடசாலை மாணவர்கள் பல்வேறு சுலோகங்களை ஏந்தி தங்களிற்கான நிரந்தர அதிபர் விடயத்தை வலியுறுத்தினர்.

ஆனால் இப்போராட்டம் நீண்ட நேரம் நிலைக்கவில்லை. காரணம் இப்போராட்டத்தை அப் பாடசாலை ஆசிரியர்கள் சிலர் மாணவர்களை மீள அழைத் தமையாகும். இதனை அடுத்து ஆசிரியர், பெற்றோர்களிற்கிடையே முறுகல் நிலை தோன்றியது. இதன் பின்னர் பாடசாலை மாணவர்கள் அனைவரும் பாடசாலைக்கு செல்ல நிர்ப்பந்திக் கப்பட்ட நிலையில் பெற்றோர்கள் மீண்டும் அதே கருத்துள்ள சுலோகங்களுடன் கவனயீர்ப் பினை மேற்கொண்டு நீண்ட கால அதிபர் பிரச்சினைக்கு தீர்வினை வழங்குமாறு கோரினர்.




தொடர்ந்து மாணவர்கள் அமைதியான முறையில் கலைந்து சென றதுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய கவனம் எடுக்க தவறும் பட்சத்தில் போராட்டத்தை தொடர உள்ளதாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி பாடசாலை அதிபர் பிரச்சினை தொடர்பாக கருத்து தெரிவித்த பலரும் அரசியல் காழ்ப்புணர்வு தான் முக்கிய காரணம் என சுட்டிக்காட்டினர். (105)


# வல்வெட்டி உதயசூரியன் அணைக்கட்டு பணிகள் துரிதம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை உதயசூரியன் கடற்கரையை கடல் அரிப்பில் இருந்து பேணிப் பாதுகாக்கும் நோக்குடனும், அழகுபடுத்தும் நோக்குடனும் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டுவரும் அணைக் கட்டு வேலைகளில் சுமார் 65 வீதம் பூர்த்தியடைதுள்ளன. தொடர்ந்து கட்டுமானப்பணிகள் முன் னெடுக்கப்பட்டுவருகின்றன.

இந்த அணைத்திட்டமானது ஜனாதிபதி மைத்திரிபாலவின் 100 நாள் திட்டத்தின் கிராம சேவகர்களுக்குரிய நிதிப்பங்கீட்டுடனும் பருத்தித்துறை பிரதேச செயலகம், வல்வெட்டித்துறை நகரசபை ஆகியவற்றின் அனுமதியுடன் வல்வை உதயசூரியன் விளையாட்டுக்கழக அங்கத்தவர்களின் நிதிப் பங்கீட்டுடனும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த அணைக்கட்டு கட்டுமானத்திற்கான அடிக் கல் நாட்டும் வைபவம் கடந்த மே மாதம் 29 ஆம் திகதி இடம்பெற்றது. தற்பொழுது உள்ள திட்டத் துக்கு அமைய உருவாகும் அணையின் மொத்த நீளம் சுமார் 105 மீற்றர்கள் (345 அடிகள்) ஆகும்.



வல்வையில் ஏற்கனவே இவ்வாறானதொரு அணைக்கட்டு, ரேவடி கடற்கரைப் பகுதியில் ரேவடி ஐக்கிய இளைஞர் விளையாட்டுக் கழகத் தினரால் கடந்த வருடம் கட்டி முடிக்கப்பட்டு தற்பொழுது மக்கள் பாவனையில் உள்ளதுடன் அதிக வரவேற்பையும் பெற்றுள்ளது.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015




(ஈ.பி.டி.பி. வலிகாமம் கிழக்கு இணைப்பாளர்)




ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

காவலரே வேடமிட்டால் கள்வர்களும் மாற்றுருவில கண் முன்னே தோன்றுவது சாத்தியமே....

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## விதைப்பதே விளையும்!

இவ்வளவு தூரம் வளர்ச்சிபெற்று வந்துவிட்ட இனப்பிரச்சினைக்கு தீர்வு எப்படி வரும் என்பதற்கு நம்மிடையே உள்ள பதில்களை இரண்டு பிரதான பிரிவுகளாக வகுத்துக் கொள்ளலாம்.

ஒன்று, வெளிநாடுகள் ஆலோசனைகளை வழங்கலாம் அனுசரணை வழங்கலாம் ஆனால் உள்நாட்டுக்குள் சம்பந்தப்பட்ட தரப்புகள்தான் இதைப் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பது.

இரண்டாவது, உள்நாட்டுக்குள் இதைத் தீர்த்துக்கொள்ளக் கூடிய சூழல் முற்றாகச் சிதைந்துவிட்டது. சமூகங்கள் ஒன்றையொன்று நம்ப முடியாதவாறு துருவப்படுத்தப்பட்டு விட்டன. வெளித்தரப்பின் தலையிடல்தான் எமது பிரச்சினையைத் தீர்த்துவைக்க முடியும் என்கிற பார்வை.

தமிழ் மக்களின் குரலாகச் சொல்லப்படுகிற பெரும்பாலான தலைவர்களும் ஊடகங்களும் இந்தப் பார்வையைத்தான் வலியுறுத்தி வருவதையும், வெளித்தரப்பு தலையிடும் அந்த நாள் கனிவதற்குக் காத்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதையே ஒரே பற்றுக்கோடாய் மக்களுக்குத் தந்துவருவதையும் நாம் காணலாம்.

தமிழ் மக்களும் இதை நம்பியே தீர்வுக்கான வழிமுறைத் திட்டம் என்ன என்பதை, வாக்குக் கேட்டு வருவோரிடம் கேளாமலே, ஒற்றுமையைக் காட்டுதற்கு வாக்குகளை அளித்துவிட்டால் சரி என்றே இதுகாலவரை செயற்பட்டு வந்திருக்கிறார்கள்.

உள்நாட்டுக்குள்ளேயே நாம் பேசித் தீர்த்துக்கொள்வதில் நம்பிக்கையற்றுப்போக நாம் வைத்திருக்கும் காரணங்கள் எவை?

சிங்கள மக்களிடம் பேரினவாதத்தை ஊட்டியே பதவிக்கு வரும் அரசுகள் தமிழ் மக்களின் அபிலாசைகளை ஒருபோதும் தீர்த்து வைக்க முடியாது. அதுபோல் இனவாதச் சேற்றுக்குள் அமிழ்த்தப்பட்ட சிங்கள மக்களும் தமிழ்மக்களுக்கான அரசியலுரிமைகளை விட்டுத்தருவதற்கு ஒருநாளும் ஒப்புக்கொள்ளப் போவதில்லை....

இவைதான் சொல்லப்படும் பிரதான காரணங்கள்.

இது மனிதர்களிடமும் மனிதத்திடமும் நம்பிக்கை கொள்ளமுடியாத விரக்தி மனப்பான்மையில் இருந்து வருவதாகத்தான் இருக்க முடியும். சகமனிதர்கள் என்போரிடம் நமது நியாயங்களைப் புரிய வைக்க முடியவில்லை என்றால் அதில் நமது குறைபாடுகளும் தானே இருக்க வேண்டும்.

நம்மிடமுள்ள இனத்தனித்துவ – மேன்மை எண்ணங்களும், மற்றவர்கள் என்போரிடம் நெருங்க முடியாத விலகல் மனப்பான்மையும் கூட காரணங்களாக இருக்க முடியும்.

நம்மைவிட சிறுபான்மையினராக உள்ள இனக்குழுக்களிடம் நம்மால் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதும், அவர்களைச் சகிக்க முடியாத போக்குகளை நாம் வெளிக்காட்டியிருப்பதும், இன்றும் அவர்கள் நம்மை நம்பி நம்முடன் நெருங்கிச் செயற்பட முடியாதவாறுதான் நாமிருக்கிறோம் என்பதும் ஊன்றி யோசிப்பவர்களுக்கு எங்கள் தன்மையை வெளிப்படுத்தும்.

ஒப்பீட்டளவில் சிங்கள மக்களிடம் இருக்கும் சகிப்புத்தன்மை அளவையும்விட குறைவான சகிப்புத்தன்மைகளையே நாம் கொண்டுள்ளோம் என்பதையும் விளங்கிக்கொள்வது கஷ்டமல்ல.

அவர்கள் சமஷ்டியைக்கூடத் தரத் தயாராயிருந்தார்கள் என்பதும், அதையெல்லாம் நாடாளுமன்றத்திலேயே ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூடி எரித்துவிட்டு வீரம் பேசியவர்கள் நாங்கள் என்பதும் மறந்துவிடக் கூடியவைதானா?

தமிழர்களுக்குப் பிரச்சினை இருக்கிறது, உரிய அதிகாரங்களைப் பகிர்ந்து அது தீர்க்கப்பட வேண்டும் என்று சிங்கள மக்களிடம் சொல்லியே பதவிக்கு வரவில்லையா சந்திரிகா குமாரதுங்க அவர்கள்?

நாங்கள் பேசவே முடியாத காட்டுமிராண்டிகள் என்பது போல சிங்கள மக்களைச் சித்தரிப்பது எவ்வளவு அநியாயம்?

தேவை என்னவென்றால், இந்த நாட்டின் சகோதர இனமக்களுடன் பேசி, தீர்வைக் காணமுடியும் என்று சொல்கிறவர்களை தமிழ்மக்கள் தங்கள் பிரதிநிதிகளாகக் காண்பிக்க வேண்டும். அப்போது நம்மைவிடப் பெருந்தன்மையை சிங்கள மக்கள் காட்டுவார்கள் என்பதை நாம் காணமுடியும். - ஆசிரியர்.

# அரசின் பொதுச்சேவை நிறுவனங்களில்

# 7500 பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு

(கொழும்பு)

அரசின் பொதுச் சேவை நிறுவனங்களிலுள்ள வெற்றிடங்களை நிரப்பும் முகமாக 7500 பட்டதாரிகளை உள்வாங்கி வேலைவாய்ப்பினை வழங்கவுள்ளதாக அரசு தீர்மானித்துள்ளது.

ஏற்கனவே தகுந்த அமைச்சரவை அமைச்சர்களால் இது தொடர்பில் எடுக்கபட்ட முடிவுகளைத் தொடர்ந்து எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு பின்னர் இந்த உள்வாங்கல்கள் இடம் பெறவுள்ளது என நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பினை வழங்குவது தொடர்பில் வெளியிட்ட அறிக்கையில் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சு இவ்வாறு தெரிவித்துள்ளது.

அந்த வகையில் 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்கு முனனர் தமது பட்டப்படிப்பினை முடித்த அனைத்து பட்டதாரிகளும் இதற்கு விண்ணப்பிக்க முடியும். அத்துடன் கடந்த கால்ங்களில் நிலவிய சில கட்டுப்பாட்டு காரணங்களால் தமது பதிவினை மேற்கொள்ள முடியாதவர்களும் தற்போது புதிய அரசாங்கத்திடம் கோரிய வேண்டுகோளுக்கிணங்க அவர்களும் விண்ணப்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ள வெற்றிடங்களில் ஆகஸ்ட் 17 ஆம திகதிக்கு பின்னர் தேர்தலுக்கு பின்னர் இந்த நியமனங்கள் மேற கொள்ளப்படும்.

நியமனம் செய்யப்படுகின்ற அனைத்து பட்டதாரிகளும் ஒரு வருட பயிற்சி நெறிக்குட்படுத்தப்பட்டு அதன் பின்னர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் முற்போக்கு கூட்டணி பேரம் பேசும் சக்தியாக மாறும்

## மனோ கணேசன் உறுதி

(கொழும்பு)

தமிழ் முற்போக்கு கூட்டணி ஒருபலமான பேரம் பேசும் சக்தியாக அடுத்த அரசாங்கத்துக்கு உள்ளே செயற்படும் என தமிழ் முற்போக்கு கூட்டணி ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பு மாளிகாவத்தையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

யானைச் சின்னம் வென்றால் மட்டும் போதாது. யானை அரசாங்கம் அமைந்தாலும் போதாது. யானையுடன் சேர்ந்து நாமும் வெற்றிபெற வேண்டும். நாமும் அந்த அரசில் பங்காளியாக இருக்க வேண்டும் அதுதான் முழுமையான வெற்றி. அதுதான் எங்கள் வெற்றி.

யானை வந்து விட்டால் எல்லாம் சரி என்று எண்ணி விடாதீர்கள்.அப்படி நினைதது யானைச் சின்னத்துக்கு வாக்களித்துவிட்டு, உங்கள் விருப்பு வாக்குகளை அவருக்கு, இவருக்கு என்று தாராள மனசுடன் அள்ளி வீசி விடாதீர்கள். யானைக்கு வாக்களிப்பது எவ்வுளவு முக்கியமோ, அதைவிட முக்கியத்துடன் கவனமாக விருப்பு வாக்குகளை வழங்குங்கள். உங்கள் விருப்பு வாக்குகளை, எங்கள் விருப்பு வாக்கு இலக்கங்களுக்கு வழங்குங்கள்.

இதை நாம் புரிந்து கொண்டு வாக்களித்தால், தமிழ முற்போக்கு கூட்டணி ஒருபலமான பேரம் பேசும் சக்தியாக அடுத்த அரசாங்கத்துக்கு உள்ளே செயற்படும். அதுமட்டுமல்ல, வட-கிழக்கில் இருந்து வெற்றி பெற்று வரும் அணியுடன் இணைந்து ஒரு ஐக்கிய அணியாக செயற்படும். இது காலத்தின் கட்டாயம்

நமது வாக்காளர்கள், யானைச சின்ன பட்டியல்களின் உள்ளே ஒவ்வொரு மாவட்டத்திலும் போட்டியிடும் தமிழ் முற்போக்கு கூட்டணி வேட்பாளர்கள் யார் என்பதையும், அவர்களின் விருப்பு வாக்கு இலக்கங்களையும் தேடி அறிந்து வாக்களிக்க வேண்டும். நாங்கள் கொழும்பு, நுவரெலியா, கண்டி, பதுளை, இரத்தினபுரி, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் போட்டியிடுகிறோம். உங்கள் விருப்பு வாக்குகளை யானைச்சின்னத்தில் போட்டியிடும் மாற்று இன வேட்பாளர்களுக்கு வழங்கி விட்டால், யானை வெல்லும். அவர்களும் வெல்வார்கள். நாம் வெல்ல மாட்டோம்.

# இரு பிரதான கட்சிகளாலும் 113 ஆசனங்களைப் பெறமுடியாது

(கொழும்பு)

இரண்டு பிரதான கட்சிகளினாலும் 113 ஆசனங்களைப் பெற்று ஆட்சி அமைக்க முடியாது என ஐக்கிய மக்கள் சுதந்திரக் முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜ்யந்த தெரிவித்துள்ளார்.

பி.சி. சந்தேசயவிற்கு வழங்கிய நேர்காணலில் அவர், நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் ஐக்கிய தேசிய முன்னணி ஆகிய இரண்டு பிரதான கட்சிகளும் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி அமைக்கக்கூடிய ஆசன எண்ணிக்கையை பெற்றுக்கொள்ள சாத்தியமில்லை.

மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய இரண்டு கட்சிகளும் சுமார் 25 ஆசனங்களுக்கு அதிகமாக கைப்பற்றக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. எனவே எஞ்சியுள்ள 200 ஆசனங்களில் பிரதான இரண்டு கட்சிகளினாலும் 113 ஆசனங்களைப் பெற்று ஆட்சி அமைப்பது சவாலானது. இலங்கையில் ஸ்திரமற்ற ஆட்சி நிலவுவதனை மேற்குலக நாடுகள் விரும்புகின்றன.

இதன் காரணமாகவே கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ரத்து செய்யப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்தும் சக்திகளை அடையாளம் கண்ட காரணத்தினால், 19 ஆம் திருத்தச் சட்டத்துடன் 20 ஆம் திருத்தச் சட்டமும் அமுல்படுத்தப்பட வேண்டியது அவசியம் என எமது கட்சி கோரியது எனத் தெரிவித்துள்ளார்.

# தேசிய பாடசாலை ஆசிரியர்கள் 15600 பேருக்கு பதவி உயர்வுகள்

புதிய ஆசிரிய சேவை யாப்புக்கு அமைய 15,600 தேசிய பாடசாலை ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்று அமைச்சின் செயலாளர் உபாலி மாரசிங்க தெரிவித்துள்ளார்.

அதற்கமைய நாட்டிலுள்ள 2,25,000 ஆசிரியர்களின் புதிய ஆசிரிய சேவை யாப்புக்கு இணங்க உள்வாங்கல் நடவடிக்கைகள் 75 வீதம் பூர்த்தி பெற்றுள்ளன. மாகாண மட்ட ஆசிரியர்களுள் 65 வீதமானோரின் பதவி உயர்வுகளையும் வழங்க இயலுமாகியுள்ளது.

ஏனைய பதவி உயர்வுகளை ஆகஸ்ட் 31 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கி பூர்த்தி செய்யுமாறு கல்வி அமைச்சு சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளது. சில ஆசிரியர்களின் ஒழுக்காற்று உத்தரவுகள், சம்பளம் அற்ற விடுமுறை, விடுவிப்பு போன்ற காரணங்களால் பதவி உயர்வுகள் விடயத்தில் நீண்ட காலம் அவசியமாகிறது.

பதவி உயர்வு தொடர்பாக மாகாண மட்டத்தில் இரண்டாம் கட்ட பயிற்சி சுற்றுக்களை ஜூலை 14 முதல் 30 வரை மாகாணங்களில் நட்த்தி அடையாளம் காணப்ப்ட்ட பிரச்சினைகளுக்கு சரியான ஆலோசனைகளை வழங்கி பதவி உயர்வு நடவடிக்கைகளுக்கான பின்னணியும் உருவாக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கையை இந்தியா தக்கவைத்துக் கொள்ள முடியுமா?

— கேணல் ஹரிகரன் கட்டுரையிலிருந்து

இலங்கையிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகள் மத்தியிலும் தேர்தல் பரப்புரை சூடுபிடித்துள்ளது. பொதுத்தேர்தலின் மூலம், இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஆட்சிப்பீடத்தில் ஏற வேண்டும் என சீனாவும் கடவுளை வேண்டுகிறது.

ஆகஸ்ட் 17, 2015 இல் இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்று நாட்டின் பிரதமராகப் பதவியேற்க வேண்டும் என்பது சீனாவின் விருப்பாகும்.

கடந்த ஜனவரி மாதம் இலங்கையின் ஜனாதிபதியாக, மகிந்தவைப் புறக்கணித்து விட்டு, மைத்திரிபால சிறிசேனவை இலங்கையர்கள் தேர்ந்தெடுத்த போது, சீனாவின் பல்வேறு இராஜதந்திர முயற்சிகளும் இடைநிறுத்தப்பட்டன. இதனால் சீனா அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது.

ராஜபக்ஷ ஜனாதிபதியாக இரண்டாவது தடவையாக ஆட்சி செய்த காலத்தில் சீனாவுடன் மேற்கொள்ளப்பட்ட 1.4 பில்லியன் பெறுமதியான கொழும்புத் துறை முக நகரத் திட்டமானது சிறிசேன அரசாங்கத்தால் இடைநிறுத்தப்பட்டது.

இத்திட்டம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஊழல் மோசடிகளே இதற்கான காரணமாகும். எவ்வாறெனினும், சீனாவின் மிகப் பாரிய திட்டங்கள் இடைநிறுத்தப் பட்டால் சீனா மற்றும் இலங்கை ஆகிய இரண்டு நாடுகளுக்கும் பாதகம் ஏற்படும் என்பதை இவ்விரண்டும் புரிந்து கொள்ள முயற்சித்தன.

அதாவது இலங்கை சீனாவிடமிருந்து பெரும் தொகையான கடனைப் பெற்றுள்ளது. அத்துடன் சீனாவும் இலங்கையில் அதிக முதலீட்டை மேற்கொண்டுள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதி சிறி சேனவும் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீரவும் சீனாவிற்கான தமது உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டனர். இதன் மூலம் இலங்கையுடனான முறிந்து போன உறவு மீளவும் கட்டியெழுப்பப்படும் என சீனா நம்பிக்கை கொண்டது.

இதன் பின்னர், இலங்கையில் தனது செல்வாக்கைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்ள முடியும் என சீனா நம்பியது. சீனாவிற்கு ஆதரவு வழங்கும் மகிந்த ராஜபக்ஷ மீண்டும் நாடாளுமன்றத் தேர்தலில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் சீனாவின் சில திட்டங்கள் மீண்டும் இலங்கையில் தொடரப்பட் டுள்ளன. இவை அனைத்தும் இலங்கை மீண்டும் சீனாவுடனான தனது உறவைப் புதுப்பித்துக் கொள்ள விரும்புவதையே சுட்டிக்காட்டுகின்றது.

சீனாவின் நிதியுதவியுடன் மாத்தறை-அம்பாந்தோட்டை அதிவேகப் பாதை அமைக்கும் திட்டம் கடந்த மாதம் 07ஆம் திகதி ஜனாதிபதி சிறிசேனவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இத்திட்ட மானது காலியின் ஊடாக கொழும்பு - மாத்தறை அதிவேகப் பாதை யுடன் தொடர்பை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டதாகும்.


இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் உள்நாட்டு மக்கள் பலர் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொண்டுள்ளதாகவும் இதனால் தாம் திருப்தி கொள்வதாகவும் கொழும்பிற்கான சீனத் தூதுவர் நேர்காணல் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

காலி - மாத்தறை அதிவேகப் பாதைத் திட்டத்திற்காக சீனாவின் எக்சிம் வங்கி 180 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது. இதேபோன்று அம்பாந்தோட்டை துறைமுகத் திட்டத்தின் இரண்டாம் கட்டமும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் மூலம் ஒரே தடவை யில் 12 கப்பல்கள் தரித்து வைக்க முடியும். தற்போது இரண்டு கப்பல்கள் மட்டுமே தரித்து நிறுத்த முடிவதாக கூறப்பட்டுள்ளது.

பாதுகாப்பு விவகாரங்களை நோக்கில் சீன-இலங்கை ஒத்துழைப்பு மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. சீனா மற்றும் இலங்கையின் சிறப்புப் படைகள் மற்றும் படையணிகள் “பட்டுப்பாதை 2015” என்கின்ற மூன்று வார பயிற்சித் திட்டத்தைத் பூர்த்தி செய்துள்ளன. இதன் மூலம் இவ்விரு நாட்டு இராணுவ வீரர்களின் கூட்டுச் சிறப்பு நடவடிக்கைகள் மேலும் முன்னேற்றப்படும்.

கடந்த மாதம், மேஜர் ஜெனரல் ஒரு-வரின் தலைமையில் சீன இராணுவக் குழு ஒன்று இலங்கைக்குப் பயணம் செய்திருந்தது. இந்தக் குழுவினர் தியத்தலாவையிலுள்ள இலங்கை இராணுவக் கல்லூரியில் சீன நிதியு தவியுடன் அமைக்கப்படும் அரங்கத் தைப் பார்வையிட்டு இத்திட்டம் தொடர்பாக மீளாய்வு செய்திருந்தது.



**சீனாவின் சில திட்டங்கள் மீண்டும் இலங்கையில் தொடரப்பட்டுள்ளன. இவை அனைத்தும் இலங்கை மீண்டும் சீனாவுடனான தனது உறவைப் புதுப்பித்துக் கொள்ள விரும்புவதையே சுட்டிக்காட்டுகின்றது. சீனாவின் நிதியுதவியுடன் மாத்தறை-அம்பாந்தோட்டை அதிவேகப் பாதை அமைக்கும் திட்டம் கடந்த மாதம் 07ஆம் திகதி ஜனாதிபதி சிறிசேனவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. திட்டத்திற்காக சீனாவின் எக்சிம் வங்கி 180 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது. இதேபோன்று அம்பாந்தோட்டை துறைமுகத் திட்டத்தின் இரண்டாம் கட்டமும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

இலங்கையின் கிராமிய மட்ட மக்களுடன் நல்லுறவைக் கட்டி யெழுப்ப வேண்டும் என்பதையும் சீனா உணரத் தவறவில்லை. சீனத் தொடர்பாடல் நிறுவனத்தின் கொழும்பு துறைமுக நகரத் திட்டம் மற்றும் சீனத் துறைமுக நிறுவனம் போன்றன போரால் பாதிக்கப்பட்ட இலங்கையின் வடக்கிலுள்ள புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் நான்கு குடிநீர்க் கிணறு களை அமைப்பதற்கான 14,400 டொலர் நிதியை நன்கொடையாக வழங்கியிருந்தன.

இலங்கையின் முன்னைய அரசாங்கத்தால் கைச்சாத்திடப்பட்ட கொழும்பு துறைமுக நகரத் திட்டம் மீளாய்வு செய்யப்பட்ட பின்னரே தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுவதற்கு அனுமதி வழங்கப்படும் என யூன் 20, 2015 அன்று இலங்கையின் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ அறிவித்திருந்தமை சீனாவுக்கு ஆச்சரியத்தை அளித்திருக்காது.

இலங்கை மீதும் அதன் அயல்நாடுகளான குறிப்பாக இந்தியா போன்றன மீதும் இத்திட்டத்தால் எதிர்விளைவுகள் ஏற்படுவதைத் தடுப்பதற்காகவே கொழும்பு நகரத் திட்டம் மீளாய்வு செய்யப்படுவதாக நீதி அமைச்சர் அறிவித்திருந்தார்.

கொழும்புத் துறைமுகத்தில் இந்தியாவானது கிட்டத்தட்ட 70 சதவீத செயற்பாடுகளை மேற்கொள்கிறது. இந்நிலையில் இத்துறைமுகம் மீது சீனாவின் செல்வாக்கு அதிகரிப்பதானது இந்தியாவின் மூலோபாய நலன்களுக்கு ஆபத்தை விளைவிப்பதாக இந்தியா சுட்டிக்காட்டியிருந்தது.

சிறிசேன அரசாங்கத்துடன் நெருங்கிய தொடர்பைப் பேணும் அமெரிக்காவும் சீனாவைப் போன்றே இலங்கையில் தனது மூலோபாய நலன்களை அடைந்து கொள்ள விரும்புகிறது. சிறிசேன அரசாங்கம் சீனாவுடன் உறவைத் தக்கவைத்துக் கொள்வதாக உறுதி தெரிவித்திருந்தாலும் கூட, இவர்களுக்கிடையில் ஏற்கனவே முறிந்து போன உறவானது மீளவும் நெருக்கமாவதற்கு சில காலங்கள் எடுக்கும். ஏனெனில் சீனாவில் தங்கி யிராத வெளியுறவுக் கோட்பாட்டை அமுலாக்க இலங்கை விரும்புகிறது.

இதனை வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர, ஜப்பானுக்கு பயணம் செய்திருந்த போது வழங்கிய நேர்காணலில் தெரிவித்திருந்தார். சீனா வில் தங்கியிருக்கக் கூடிய வெளி யுறவுக் கோட்பாட்டை முன்னாள் ஜனாதிபதி வரைந்துள்ளார் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஆனாலும் தனது அரசாங்கமானது சீனா உட்பட அனைத்து நாடுகளிடமும் சமமான் வெளியுறவுக் கோட்பாட்டைப் பேண விரும்புவதாக மங்கள சமரவீர சுட்டிக்காட்டியிருந்தார்.

சீனாவின் அதிக வட்டியுடன் கூடிய கடன்களிலிருந்து இலங்கை தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கு மிகக் குறைந்த வட்டியிலான கடன்களைப் பெற முயற்சிக்கிறது. இந்த அடிப்படையில், அம்பாந்தோட்டை துறைமுகத் திட்டத்தை இலங்கை அரசாங்கம் மீளாய்வு செய்வதாகவும் கொழும்பிலுள்ள துறைமுகம் மற்றும் விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய முயற்சிப்பதாகவும் பொரு ளாதாரக் காரணங்களுக்காகவே இவ்வாறானதொரு தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாகவும் இலங்கையின் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் அண்மையில் தெரிவித்திருந்தார்.

ராஜபக்ஷ, பிரதமரானால் மீண்டும் சீனாவுடனான உறவை வலுப்படுத்த முயற்சிப்பார். சீனாவுடனான உறவு தொடர்பாக மகிந்த ராஜபக்ஷவிடம் வினவப்பட்டபோது இதனை அவர் உறுதிப்படுத்தியிருந்தார்.

பிரதமரானால் சீனாவுடனான உறவைப் புதுப்பித்துக் கொள்வாரா என அண்மையில் நேர்காணல் ஒன்றில் மகிந்தவிடம் வினவப்பட்டது. அதன் போது “சீனாவுடன் மட்டுமல்ல, மேற்குலகம் உட்பட அனைத்து நாடுகளுடனும் நல்லுறவைப் பேணுவதற்கான நகர்வுகள் முன்னெடுக்கப்படும்” என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

இலங்கையுடனான மோடியின் நல்லு றவானது சிறிசேன அரசாங்கம் சீனா வுடன் தனது உறவை சமப்படுத்திக் கொள்வதற்கு ஏதுவான சாதகமான நிலையை உருவாக்க வழிவகுத்துள்ளது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இந்தியப் பிரதமர் மோடி இலங்கைக்கான தனது பயணத்தை மேற்கொண்டிருந்த போது மேற்கொள்ளப்பட்ட வாக்குறுதிகளை இந்தியா எதிர்காலத்தில் பின்பற்றுவதிலேயே இலங்கையின் சீன உறவு தங்கியுள்ளது.

ஆனால் கடந்த காலத்தில், இந்தியாவானது தன்னால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளைக் குறித்த காலஅவகாசத்திற்குள் நிறைவேற்றத் தவறியுள்ளது.

சீனா ஒருபோதும் இலங்கையைக் கைவிடப் போவதில்லை. இந்திய மாக்கடலிலும் தென்னாசியாவிலும் சீனா மிகப் பாரிய மூலோபாய நலனைக் கொண்டுள்ளது. இந்திய மாக்கடலில் சீனாவின் அதிகாரத்தை நிலைநிறுத்துவதில் இலங்கை மையமாக விளங்குகிறது.

இதேபோன்று சீன ஜனாதிபதியின் 20ஆம் நூற்றாண்டு கால கடல்சார் பாதை களைப் பலப்படுத்துவதற்கான திட்டங்களை வெற்றி கொள்ளச் செய்வதற்கான சீனாவின் முதலீட்டு மையமாக இலங்கை விளங்குகிறது. இந்திய மாக்கடலில் இந்தியத் தீபகற்பத்தின் பாதுகாப்பிற்கும் அதன் அதிகார வலுவுக்கும் இலங்கை முதன்மைப் பங்காற்றுகிறது.

இலங்கைத் தீவின் ஆட்சியில் எவர் அமர்ந்தாலும் இந்தியாவானது தொடர்ந்தும் இலங்கையுடன் வெற்றியளிக்கும் உறவைத் தக்கவைத்துக் கொள்ள முடியும் என சாதாரணமாக எடைபோடக் கூடாது.

# தோல்விக்கு அஞ்சிய மகிந்த இனவாதத்தை தூண்டுகிறார்

## பிரதமர் ரணில் குற்றச்சாட்டு



தோல்விக்கு அஞ்சும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இனவாதத்தைத் தூண்டி வருவதாக பிரதமர் ரணில்விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தம்பதெனிய மற்றும் மீரிகம ஆகிய பிரதேசங்களில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். 2005ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திட்டு புலிகளுக்கு 200 மில்லியன் ரூபா பணம் வழங்கியே மகிந்த தேர்தலில் வெற்றியீட்டினார்.

பிரபாகரன் எனக்கும் ஓர் தகவலை அனுப்பி வைத்திருந்தார். மகிந்தவை விடவும் அதிகளவு பணம் வழங்கினால் எனது வெற்றியை உறுதி செய்ய முடியும் என பிரபாகரன் எனக்கு தகவல் அனுப்பியிருந்தார். கூடுதல் பணத்தை வழங்கி ஒப்பந்தமொன்று கைச்சாத்திட்டால் வெற்றிக்காக செயற்படத் தயார என பிரபாகரன் கூறியிருந்தார்.

தோல்வியைக் கண்ட மகிந்த இன்று இனவாத அடிப்படையில செயற்படுகின்றார். வடக்கு கிழக்கை துண்டாக பிளவடையச் செய்ய நான் ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளதாக மகிந்த கூறுகின்றார்.

2005 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின் போது மகிந்த பணம் வழங்க இணங்கியுள்ளார். நீங்கள் அதனை விட பணம் வழங்கினால் ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றியடையச் செய்ய முடியும் என பிரபாகரன் தகவல் அனுப்பி வைத்திருந்தார். பிரதமராக கடமையாற்றிய காலத்தில் நான் பிரபாகரனுக்கு கடிதம் அனுப்பக்கூட கையொப்பமிட்டதில்லை.

மகிந்தவின் கோரிக்கைக்கு அமைய அப்போதைய பிரதமரின் சார்பில் மங்கள சமரவீர மற்றும் ஸ்ரீபதி சூரியாராச்சி ஆகியோர் பிரபாகரனுடன் பேசினார்கள். ஒப்பந்தமொன்று கைச்சாத்திட்டு 200 மில்லியன் வழங்கப்பட்டது. இதன் அடிப்படையில் பிரபாகரன் தமிழ் மக்கள் 2005 ஆம் ஆண்டு தேர்தலில் வாக்களிப்பதனை தடுத்தார். நான் பிரபாகரனுடன் ஒப்பந்தம் கைச்சாத்திட விரும்பவில்லை. தோல்வி அடைந்தாலும் பரவாயில்லை என நான் எனது கொள்கைகளுடன் இருந்தேன்.

புலிகளுடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்டது யார் என்பதனை காலையில் எழுந்து கண்ணாடியின் எதிரில் சென்று பார்த்தால் குற்றம் சுமத்துவோருக்கு தெரியும் யார் குற்றவாளிகள் என்பது.

மகிந்த ராஜபக்ஷ ராடா நிறுவனத்தின் ஊடாக 2000 மில்லியன் புலிகளுக்கு வழங்கினார்.

மாவிலாறு போர் ஆரம்பித்த போதிலும் பணம் வழங்கப்பட்டது.

2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கோத்தாபய ராஜபக்ஷ மீது தாக்குதல் நடாத்தப்பட்டதனைத் தொடர்ந்து பணம் வழங்குவது நிறுத்தப்பட்டது.

ராஜபக்ஷ குடும்பம் மீது கைவைக்க மாட்டார்கள் எனக் கருதியே பிரபாகரனுக்கு பணம வழங்கப்பட்டது. மாவிலாறில் மக்கள் இறக்கும் போது மகிந்த தரப்பிற்கு அது பிரச்சினையாக தென்படவில்லை. மாவிலாற்றில் போர் ஏற்படும் என அவர்கள் கருதவில்லை. சம்பிக்க, ரத்ன தேரர் போன்றவர்கள் கடுமையான நிலைப்பாட்டை வெளிப் படுத்தியதன் காரணமாகவே போர் ஆரம்பிக்கப்பட்டது என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

# குண்டு துளைத்த காருடன் பொன்சேகா பிரசாரம்



(கொழும்பு)

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில், ஜனநாயகக் கட்சியின் தலைவரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா விடுதலைப் புலிகள் தன்மீது மேற்கொண்ட தற்கொலைத் தாக்குதலின் போது சேதமடைந்த வாகனத்தை பிரசாரத்திற்காக பயன்படுத்துகின்றார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை திருகோணமலை நகரசபை மண்ட பத்தில், ஜனநாயகக் கட்சியின் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்ட சரத்பொன்சேகா தாக்குதலுக்கு இலக்கான குறித்த வாகனத்தையும் கொண்டு சென்றிருந்தார்.

அதுமாத்திரமன்றி தற்கொலைத் தாக்குதலின் போது, குண்டுகளால் துளைத்த அந்தக் காரை வைத்து சரத்பொன்சேகா ஒவ்வொரு மாவட்டமாகவும் பரப்புரையில் ஈடுபீடவுள்ளார்.

கடந்த 2006ஆம் ஆண்டு கொழும்பில் இராணுவத் தலைமையகத்தில் வைத்து விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதலுக்கு இலக்கான சரத்பொன்சேகா ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று உயிர்தப்பியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# 14 ஆம் திகதி நள்ளிரவுடன் பிரசார நடவடிக்கைகளுக்கு தடை

பொதுத் தேர்தலுக்கான பிரசாரப் பணிகள் யாவும் எதிர்வரும் 14 ஆம் திகதி நள்ளிரவுடன் முடிவடைவதால் சகல கட்சிகளின் தேர்தல் காரியாலயங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பிரசாரப் பலகைகள் யாவும் 15ஆம் திகதி காலை 8 மணிக்கு முன்னர் அகற்றப்பட வேண்டும் என தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய சகல கட்சிகளின் செயலாளர்களுக்கும் அறிவித்தலொன்றை விடுத்துள்ளார். தேர்தல் மாவட்டத்திற்காக நிறுவப்பட்டுள்ள ஒரேயோரு மத்திய அலுவலகத்தில் மாத்திரம் கட்சியின் பெயர் மற்றும் கட்சியின் சின்னத்துடன் கூடிய பிரசார பலகை காட்சிப்படுத்த முடியும் என்றும் கூறியுள்ளார். வேட்பாளர்களின் இலக்கங்களுடன் கூடிய சகல பிரசாரங்களும் 15ஆம் திகதி காலை 8 மணிக்கு முன்னர் நீக்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார்.

# எனக்கும் கோத்தாபயவிற்கும் முரண்பாடுகள் எதுவுமில்லை

## மறுக்கின்றார் பசில்



எனக்கும் எனது சகோதரர் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவுக்கும் இடையில் முரண்பாடுகள் நிலவுவதாகவும் அதனால் ஏற்பட்ட விரக்தியில் நான் ஒதுங்கியிருப்பதாகவும் கூறப்படுவதில் எந்த உண்மையும் இல்லை என்று முன்னாள் அமைச்சர் பஷில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பஷில் ராஜபக்ஷவுக்கும் அவரது சகோதரர் கோத்தாபய ராஜபக்ஷவுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றமை குறித்து விபரிக்கையிலேயே அவர் மேற கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எனக்கும் எனது சகோதரரான முன்னாள் பாதுகாப்புச் செயலாளருக்கும் பிரச்சினைகள் இருப்பதாகவும், அதனால் நான் விரகதியுடன் இருப்பதாகவும் கூறப்படுவதில் எந்தவிதமான உண்மையும் இல்லை. இது வேண்டுமென்று சிலர் பொய்ப்பிரசாரங்களை வெளியிடுகின்றனர். கருத்து வேறுபாடுகள் யாருக்கும் இருகலாம். அது சகோதரர்களுக்கிடையிலும் தந்தை மகனுக்கிடையிலும் இருக்கலாம். அவ்வாறு எனக்கும் எனது சகோதரருக்குமிடையில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். அதற்காக நாங்கள் இருவரும் விரிசலுடன் இருக்கின்றோம் என்பது தவறான கருத்தாகும்.

எவ்வாறெனினும் நான் இம்முறை தேர்தலில் போட்டியிடாமல் இருப்பதற்கு அதிக காரணங்கள் இருக்கின்றன. அவற்றை தற்போது கூறிக்கொண்டிருக்க முடியாது. என்னைப் பாதித்த ஒரு சில காரணங்களினால் நான் தேர்தலில் போட்டியிடவில்லை.

எனினும் மக்களுக்கான எனது சேவையை நான் வழங்குவேன். அதனை விடுத்து எனது சகோதரர் கோத்தாபய ராஜபக்ஷவுடனான பிரச்சினையில் நான் ஒதுங்கியிருப்பதாக கூறுவதில் எவ்வித உண்மையும் இல்லை.

# தேர்தல் பிரசாரத்திற்கு சம்பிக்க 1400 இலட்சம் செலவு

## கம்மன்பில குற்றச்சாட்டு



நல்லாட்சி அரசாங்கம் என்றும் தன்னை ஒரு தூய்மையான அரசியல்வாதி என்றும் கூறும் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்காக 1400 இலட்சம் ரூபாவினைச் செலவிடுவாக பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில குற்றம் சுமத்தியுள்ளார்.


அத்துடன், இந்த பணம் அவருக்கு எங்கிருந்து கிடைத்தது என்று அவர் இந்த நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

பிவித்துரு ஹெல உறுமயவின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,


“நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்காக ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் தேர்தலில போட்டியிடும் சம்பிக்க ரணவக்க, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசிய க்கட்சி என்பவற்றில் பிரசார செலவிற்காக அதிக பணத்தை செலவிடும் வேட்பாளராக திகழ்கின்றார்.

இதற்கமைய நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்காக அமைச்சர் சம்பிக்க ரணவக்க 1400 இலட்சம் ரூபாவினைச் செலவிடுகின்றார். நல் லாட்சிக்கான ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டதாகக் கூறுவதுடன், தூய்மையான அரசியலவாதி என தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் சம்பிக்க ஓர் வர்ததகரோ, வியாபாரியோ அல்ல. அவ்வாறான ஓர் நிலையில் அவர் எவ்வாறு இவ்வளவு பெரிய தொகையை தேர்தலுக்காக செலவிடுகின்றார்? இவ்வளவு பெரிய தொகை பணம் அவருக்கு எவ்வாறு கிடைககப்பெற்றது என்பதனை இந்த நாட்டு மக்களுக்கு அம்பலப்படுத்த வேண்டும்” என்றும் கூறினார்.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



‘சொல்லின் செல்வர்’
இரா.செல்வவடிவேல்



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

## முரசின் இன்றைய பலன்

**08.08.2015 சனிக்கிழமை**

மன்மத வருஷம் ஆடி மாதம் 23 ஆம் திகதி.
அமிர்த யோகம் / நவமி திதி
கார்த்திகை நட்சத்திரம் முன்இரவு - 10.54 வரை பின் ரோகினி
இராகுகாலம் 9.04 - 10.34 வரை சுப நேரம் 3.04 - 4.34 வரை



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** — காப்புறுதி நஷ்ட ஈட்டுப் பணம் கைக்கெட்டும்செய்தி வந்தடைதல்

**ரிஷபம்** — பிள்ளைகளின் நடவழிக்கைக ளில் கண்ணோட்டம் செலுத்து வதைக் கைவிட வேண்டாம்

**மிதுனம்** — இயன்ற வரை பொருட்களின் கொளவனவை முன்னிட்டு காசோ லைகளை வாங்க வேண்டாம்

**கடகம்** — நண்பரின் கருணையால் மத்திய கிழக்கு நாடொன்றில் வேலை வாய்ப்பினைப் பெறுதல்

**சிம்மம்** — இழுபட்டுக் கொண்டிருக்கும் விவாகம் ஈடேற கிரக சாந்தி கள் செய்ய உத்தேசித்தல்

**கன்னி** — வியாபாரப் போட்டியினால் சக நிலையத்தாருடன் முரண்பாடும முறுகல்நிலையும்தக்க வைத்தல்

**துலாம்** — பழையதை மெருகூட்டிப் புதி தாக விற்க முயல்வதில் எச் சரிக்கையாக இருத்தல்

**விருச்சிகம்** — பழம் நழுவிப் பாலில் விழுந்த கதைபோல இன்று தொட்ட தெல்லாம் துலங்கும்

**தனுசு** — நடப்பு மகாதிசாபுத்தி ஆரோக் கியமாக இருப்பின் புதிய விட யத்தை ஆரம்பிக்கலாம்


**மகரம்** — இடைத்தங்கல் நாட்டில் இருப்போர் இலக்கினை எட்டுதல்

**கும்பம்** — மழிக்கனினி மூலம் பொருத தமான மண மக்களைத் தேடுதல்

**மீனம்** — பிரயாணத்தின் போது ஆவணங் களைச் சரிபார்த்து எடுத்துச் செல்லவும்

# தமிழர்களின் உரிமைப் போராட்டம் இன்னும் நிறைவடையவில்லை

## மன்னார் ஆயர் இல்லம் தெரிவிப்பு



(மன்னார்)

தமிழர்களின் உரிமைப் போராட்டமானது, அகிம்சைப் போராட்டமாக ஆரம்பித்து பின்னர் அது ஆயுதப் போராட்டமாக மாறி, கடந்த 2009 இல் முடிவுக்கு வந்தது. போர் முடிவடைந்தாலும் தமிழர்களின் உரிமைப் . போராட்டம் முடிவடையவில்லை. தற்போது தமிழர்களாகிய நமக்கு இருக்கும் ஒரே நம்பிக்கை நமது ஜனநாயக பலம்தான் என்று மன்னார் மறைமாவட்ட ஆயர் இல்லம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில், மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை சார்பாகவும் அவரது ஆலோசனை மன்றத்தின் சார்பாகவும் மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு. ஏ.விக்டர் சூசை அடிகளாரால் நேற்று முன்தினம் வியாழக்கிழமை விடுக்கப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

'நமக்கு இருக்கக்கூடிய ஜனநாயக உரிமைகளை உரிய விதத்தில் பயன்படுத்தி, நமது உரிமைகளை வென்றெடுக்கும் வழிவகைகள் பற்றி அதிக சிரத்தையோடு சிந்திக்கவும் செயலாற்றவும் அழைக்கப்படுகின்றோம். குறிப்பாக நமது கையில் இருக்கும் வாக்குச் சீட்டை, சரியான வழியில் பயன்படுத்துவதன் மூலம் நமது உரிமைகளை நாம் உத்தரவாதப்படுத்த முடியும்.

நமது வாக்களிக்கும் உரிமையை நிதானமாகச் சிந்தித்து செயற்படுத்துவதன் மூலம் நமது அரசியல் உரிமைகள் மற்றும் வாழ்வாதார, அடிப்படை உரிமைகளை நாம் வென்றெடுக்க முடியும்.

குறிப்பாக இன்றைய இலங்கை அரசியல் சூழ்நிலையில் பெரும்பான்மைக் கட்சிகள் சம பலத்தோடு போட்டியிடும் நிலையில், சிறுபான்மை மக்களாகிய நாம் நமது வாக்குகளைப் பயன்படுத்தி தமிழ்த் தேசிய நலன்களை முன்னிறுத்தக்கூடிய பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதன் மூலம், இலங்கை அரசியலைத்தீர்மானிக்கும் சக்தியாக எம்மால் விளங்க முடியும்' என்று அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இ.போ.ச. பேருந்து மீது இனந்தெரியாதோர் தாக்குதல்




பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி மண்டான் ஊடாக யாழ்ப்பாணத்திற்குச் சென்று கொண்டிருந்த இ.போ.சபைக்குச் சொந்தமான பேருந்தின் மீது மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இருவர் இரும்புப் பொருள் ஒன்றை வீசித் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். இதில் பேருந்தின் பின் பக்கக் கண்ணாடிகள் நொருங்கியுள்ளன.

இச் சம்பவம் குறித்து பருத்தித்துறை இ.போ.ச. டிப்போவின் குறித்த பேருந்தின் சாரதியால் நெல்லியடிப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பேருந்து நிலையத்திலிருந்து நேற்று முன்தினம் அதிகாலை 5 மணிக்குப் புறப்பட்ட பேருந்து வண்டி 5.30 மணியளவில் மண்டான் சந்தியை நெருங்கிய போது மோட்டார் சைக்கிளில் பின்னால் வந்து கொண்டிருந்தவர்கள் இரும்புப் பொருள் ஒன்றை வீசித் தாக்குதல் நடாத்தியுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நெல்லியடி பொலிஸார் இச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி, மண்டான் ஊடான போக்குவரத்துச் சேவை மிக அண்மையிலேயே ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மகான்களைப் பெற்ற யாழ்ப்பாணம் சிறந்த புண்ணிய பூமியாகும்

## தம்பிரான் சுவாமிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பல சான்றோர்களையும் மகான்களையும் பெற்றுத் தந்ததால் யாழ்ப்பாணம் ஒரு புண்ணிய பூமியாக விளங்குகிறது என தமிழகத்தைச் சேர்ந்த ஸ்ரீமத் மௌன குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள் தெரிவித்துள்ளார்.


அகில இலங்கை இந்து மாமன்றத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட இந்து ஆராய்ச்சி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சுவாமிகள் இக் கருத்தினைத் தெரிவித்திருந்தார். அவர் மேலும் அங்கு உரையாற்றியதாவது

யாழ்ப்பாணப் பூமியானது ஒரு புண்ணிய பூமியாகும். ஏனெனில் இம் மண்ணிலிருந்து சான்றோர்கள் பல அற்புதமான நூல்களை எழுதியிருக்கின்றனர்.

மேலும் இம் மண்ணிலே போடப்படுகின்ற சமய, சமூக, அரசியல் விதைகள் எதுவாக இருந்தாலும் அவை பெரு விருட்சமாக மாறும் என்பதற்கு பல சான்றுகள் உள்ளன.

உலகமெங்கும் உள்ள தமிழர்கள் தமது கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை கைவிட்டுவிடாமல் பேணிக்காப்பதற்கு யாழ்ப்பாணத்து தமிழர்களே தம்மை அர்ப்பணித்து வருகிறார்கள். இதனோடு இவர்களது தெய்வீக ஈடுபாடும் சமய ஈடுபாடும் எம்மை மெய்சிலிர்க்க வைத்ததாலேயே என்னை தாய் திருநாட்டில் இருந்து இங்கே வரவழைத்துள்ளது என்றார்.

# கண்ணிவெடி அகற்றும் பணி உருத்திரபுரத்தில் முன்னெடுப்பு



கிளிநொச்சி, உருத்திரபுரம் பகுதியில் தற்போது கண்ணிவெடி அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கிளிநொச்சி, கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள உருத்திரபுரம் கிராம அலுவலர் பகுதியில் வெடிபொருட்கள் அடையாளம் காணப்பட்ட பகுதியில் ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தினால் கண்ணிவெடி அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பூநகரி - பரந்தன் வீதியின் செருக்கன் மற்றும் நீவில் உள்ளிட்ட பகுதிகளில் யுத்த காலத்தில் அமைக்கப்பட்ட மண் அணைகள், காவல் அரண்கள் உள்ள பகுதிகளில் இந்த வெடிபொருட்கள் அகற்றும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



யோகேஸ்வரி பற்குணராஜா

(யாழ்.மாநகர முன்னாள் முதல்வர்)



X 5

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# உலக கால்பந்து அணிகளின் தரவரிசை

## கால்பந்து சம்மேளனத்தால் வெளியீடு



உலக கால்பந்து அணிகளின் தர வரிசைப் பட்டியலை சர்வதேச கால்பந்து சம்மேளனம் (பிபா) நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது. இதன்படி ஆர்ஜென்டினா அணி தொடர்ந்து முதலிடத்தில் இருக்கிறது.

நடப்பு உலக சம்பியனான ஜேர்மனி 2ஆவது இடத்தில் இருந்து 3ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. பெல்ஜியம் அணி 3ஆவது இடத்தில் இருந்து 2ஆவது இடத்துக்கு முன்னேறி உள்ளது. கொலம்பியா அணி 4ஆவது இடத்தில் தொடருகிறது. பிரேசில் அணி 6ஆவது இடத்தில் இருந்து ஒரு இடம் ஏற்றம் கண்டு 5ஆவது இடத்தை பிடித்துள்ளது.

போர்த்துக்கல், ருமேனியா, இங்கிலாந்து, வேல்ஸ், சிலி அணிகள் தலா ஒரு இடம் முன்னேற்றம் கண்டு முறையே 6ஆவது 7ஆவது, 8ஆவது, 9ஆவது, 10ஆவது இடத்தை பிடித்துள்ளன. மெக்சிக்கோ அணி 14 இடங்கள் முன்னேறி 26ஆவது இடத்தையும், ஜமைக்கா அணி 21 இடங்கள் முன்னேறி 55ஆவது இடத்தையும் பிடித்துள்ளன. இந்திய அணி 156ஆவது இடத்தில் நீடிக்கிறது.

# வசிம் அக்ரம் மீது மோதியது இனம் தெரியாதோரின் வாகனம்

## வாகன இலக்கம் போலியானது



பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் வசிம் அக்ரம். இளம் வேகப்பந்து வீரர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக நேற்று முன்தினம் காரில் கராச்சி மைதானத்துக்குச் சென்று கொண்டிருந்தார்.

அப்போது மர்ம நபர் ஒருவர் வசிம் அக்ரம் கார் மீது துப்பாக்கியால் சரமாரியாக சுட்டு விட்டு தப்பி ஓடிவிட்டார். இதில் அவர் எந்தவித காயமுமின்றி உயிர் தப்பினார்.

வசிம் அக்ரமை குறி வைத்து துப்பாக்கிச் சூடு தாக்குதல் சம்பவம் நடக்கவில்லை.

வாசிம் அக்ரமை கொலை செய்ய இந்தத் தாக்குதல் நடத்தப்படவில்லை. கண்காணிப்பு கமராக்கள் மூலம் மர்ம நபர் வந்த காரைக் கண்டுபிடித்து விட்டோம். விரைவில் அவன் பிடிபடுவான் என்று கராச்சி பொலிஸ் தெரிவித்தது.

வசிம் அக்ரம் கார் குறித்து விசாரிக்கப்பட்டது. அந்தப் பகுதியில் உள்ள சி.சி.டி. டி.வி.யில் அந்த காரின் நம்பர் பதிவாகி இருந்தது.

அதை வைத்து விசாரித்த போது அது போலி இலக்கம் என்று தெரியவந்துள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. இதனால் இது திட்டமிட்ட தாக்குதலா என்று சந்தேகம் எழுந்துள்ளது. இதுகுறித்து கராச்சி பொலிஸார் விசாரித்து வருகிறார்கள்.

# வில்வித்தை நட்சத்திரங்களுக்கு பாபா ராம்தேவ் யோகா பயிற்சி



டென்மார்க் தலைநகர் கோபன்ஹேகனில் சமீபத்தில் உலக வில்வித்தை சம்பியன்ஷிப் தொடர் நடந்தது. இதில் பெண்கள் 'ரிகர்வ்' பிரிவு இறுதியில் தீபிகா குமாரி, லட்சுமிராணி, ரிமில் புருய்லி அடங்கிய இந்திய அணி 4–0 என, முன்னிலை பெற்றது. இதன் பின் வழக்கம் போல கடைசி நேரத்தில் சொதப்ப, ரஷ்யா அணி 5–4 என, அசத்தி தங்கம் தட்டிச் சென்றது.

இதுகுறித்து இந்திய வில்வித்தை சங்கத் தலைவர் வி.கே.மல்கோத்ரா கூறியதாவது,

வில்வித்தைப் போட்டி என்பது மனநிலை சம்பந்தப்பட்டது. மிகவும் அமைதியாகவும், மனதை ஒருமுகப்படுத்தியும் செயற்பட்டால் தான் வெற்றி கிடைக்கும்.

இதனால் மத்திய விளையாட்டுத்துறை மற்றும் இந்திய விளையாட்டு ஆணையம் இணைந்து, வில்வித்தை நட்சத்திரங்களுக்கு 'யோகா' பயிற்சி கொடுக்க முடிவுவெடுத்துள்ளன. இதுகுறித்து இந்தியாவின் 'நம்பர்–1' யோகா குரு பாபா ராம்தேவிடம் விரைவில் பேசவுள்ளேன். இவர் இந்திய வில்வித்தை நட்சத்திரங்களுக்கு கட்டாயம் உதவுவார் என உறுதியாக நம்புகிறேன்.

இவ்வாறு வி.கே.மல்கோத்ரா கூறினார்.

இந்திய வீராங்கனை தீபிகா குமாரி கூறுகையில்,'' வில்வித்தை மனநிலை சம்பந்தப்பட்டது என்பது உண்மை தான். தற்போது யோகா கற்கவுள்ளது இன்னும் சிறப்பாகச் செயற்பட உதவும்,'' என்றார். மற்றொரு வீராங்கனை ரிமில் புருய்லி கூறுகையில்,'' ஒருவேளை ராம்தேவ் தான் எங்களுக்கு யோகா கற்றுக் கொடுக்கவுள்ளார் என்றால், அதைவிட எங்களுக்கு வேறென்ன வேண்டும்,'' என்றார்.

# சிட்டி ஒப்பன் ரென்னிஸில் குஸ்னெட்சொவா விலகல்



வோஷிங்டனில் சிட்டி ஒப்பன் ரென்னிஸ் போட்டி நடை பெற்று வருகிறது. இதில் நடப்பு சம்பியன் ஸ்வெட்லானா குஸ்னெட்சொவா காயம் காரணமாக விலகியுள்ளார்.

இதுகுறித்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்துள்ள ஸ்வெட்லானா "இந்த முடிவு எடுத்ததற்கு நான் மிகவும் வருந்துகிறேன். என்னுடைய உடல்நிலை தொடர்ந்து விளையாடுவதற்கு ஒத்துழைக்காததால் இந்த முடிவை எடுத்தேன்" எனத் தெரிவித்துள்ளார்.

ஸ்வெட்லானா கடந்த புதன்கிழமை நடைபெற்ற போட்டியில் சனாஸ் மராதை நேர் செட்டில் எளிதில் வென்று 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார். இவர் வெளியேறியதால் ஸ்லோயனே ஸ்டீபன்ஸ் காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார்.

ஸ்வெட்லானா இரண்டு முறை ஒற்றையர் பிரிவில் கிராண்ட்ஸ்லாம் சம்பியன் பட்டம் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

விளையாட்டுச் செய்திகள்

# ஆசிய செஸ் தொடர் சேகர் கங்குலி வெற்றி



ஐக்கிய அரபு எமிரேட்சில் (யு.ஏ.இ.,), ஆசிய கான்டினென்டல் செஸ் சம்பியன்ஷிப் தொடர் நடக்கிறது.

இதன் மூன்றாவது சுற்றில் இந்தியாவின் சூர்ய சேகர் கங்குலி, உஸ்பெகிஸ்தானின் ஜகாங்கிர் வாகிதோவை வீழ்த்தினார். மற்றொரு போட்டியில் இந்தியாவின் விஷ்ணு பிரசன்னா, சகவீரர் லலித் பாபுவை தோற்கடித்தார்.

மற்ற 3ஆவது சுற்றுப் போட்டி களில் இந்தியாவின் அபிஜீத் குப்தா, தீப் செங்குப்தா, [illegible] பெற்றனர். இந்தியாவின் கொனேரு ஹம்பி, ரத்னாகரண் மோதிய 3வது சுற்றுப் போட்டி 'டிரா'வில் முடிந்தது.

மூன்று சுற்றின் முடிவில் தலா 3 புள்ளிகளுடன் இந்தியாவின் சூர்யசேகர் கங்குலி, விஷ்ணு பிரசன்னா முதலிடத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

மூன்றாவது இடத்தை சீனாவின்லின் சென், வாங் சென், இந்தியாவின் விதித் சந்தோஷ், அபிஜீத் குப்தா, சந்திபன் உள்ளிட்டோர் தலா 2.5 புள்ளிகளுடன் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

# அரையிறுதியில் விஷ்ணுவர்தன்

தாய்லாந்தில் நடக்கும் ஐ.டி.எப., ரென்னிஸ் தொடரின் அரையிறுதிக்கு இந்தியாவின் விஷ்ணுவர்தன் முன்னேறினார்.

தாய்லாந்தில் ஆண்களுக்கான ஐ.டி.எப்., ரென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் இந்தியாவின் விஷ்ணுவர்தன், ஜப்பானின் உகமுராமை சந்தித்தார்.

முதல் செட்டை 6–3 என கைப்பற்றிய விஷ்ணுவர்தன், அடுத்த செட்டையும் 6–4 என தன்வசப்படுத்தினார். முடிவில், விஷ்ணுவர்தன் 6–3, 6–4 என்ற நேர் செட் கணக்கில் வென்று, அரையிறுதிக்குள் நுழைந்தார்.

இதன் இரட்டையர் பிரிவு அரையிறுதியில் இந்தியாவின் விஷ்ணுவர்தன், ஸ்ரீராம் ஜோடி 6–7, 6–7 என அவுஸ்ரேலியாவின் மிட்சல், தாம்சன் ஹோமயிடம் வீழ்ந்தது.


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



பசுபதி சீவரத்தினம்
(ஈ.பி.டி.பி. தேசிய அமைப்பாளர்)



X 6

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)




சிகரம் பவுண்டேஷனின் அனுசரணையுடன் வவுனியா வடக்கு வலய ஓமந்தை கோட்ட முன்பள்ளிகளுக்கிடையிலான மழலைகள் திறனாய்வு விளையாட்டுப் போட்டி நேற்று முன்தினம் முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் ச.இராஜேஸ்வரன் தலைமையில் தரணிக்குளம் தர்ணிச்சுடர் மைதானத்தில் இடம்பெற்ற போது....

# டெஸ்ட் கிரிக்கெட்டில் ஓய்வு பெறும் சங்கக்கார

## டெஸ்ட் தொடரை வென்று பரிசாக கொடுப்பதே விருப்பம்-மத்தியூஸ்



இலங்கை கிரிக்கெட்டின் தூண்களில் ஒருவரான 37 வயதான சங்கக்கார இந்தியாவுக்கு எதிரான 2ஆவது டெஸ்டுடன் கிரிக்கெட்டில் இருந்து முழுமையாக விடைபெறுகிறார். கொழும்பு பி.சாரா ஓவல் மைதானத்தில் ஆகஸ்ட் 20 முதல் 24ஆம் திகதி வரை நடக்கும் 2ஆவது டெஸ்டே அவர் விளையாடும் கடைசி சர்வதேச போட்டியாகும். இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியுடன் கிரிக்கெட் வாழ்க்கையை நிறைவு செய்யும் 17ஆவது இலங்கை வீரர் சங்கக்கார ஆவார்.

இதையொட்டி இலங்கை கப்டன் மத்தியூஸ் அளித்த பேட்டியில், இந்தியா-இலங்கை அணிகள் கடைசியாக சந்தித்த டெஸ்ட் தொடர் (2010 ஆம் ஆண்டு) எங்கள் எல்லோருக்கும் மறக்க முடியாததாக அமைந்தது. ஏனெனில் அந்த



தொடருடன் 800 விக்கெட் சாதனையுடன் சுழற்பந்து வீச்சு ஜாம்பவான் முத்தையா முரளிதரன் ஓய்வு பெற்றார். இப்போது இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரின் போது மிகச்சிறந்த வீரரான சங்கக்கார ஓய்வு பெறப்போகிறார்.

இது இலங்கையினர் அனைவருக்கும் சிறப்பு வாய்ந்த நிகழ்வாக இருக்கப் போகிறது. டெஸ்ட் தொடரை வெல்வதே சங்கக்காரவை வழியனுப்புவதற்கான மிகச்சிறந்த பரிசாக இருக்கும்' என்றார்.

# மென்பந்து சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் இரண்டு மென்பந்து சுற்றுத் தொடர்களை நடாத்த திட்டமிட்டுள்ளது.

அதன் அடிப்படையில் முதற் கட்டமாக 5 பந்து பரிமாற்றங்கள் 6 நபர் கொண்ட சுற்றுத் தொடர் எதிர்வரும் 15 ஆம் சனிக்கிழமை ஆரம்பிக்க உள்ளதால் பங்கேற்க விரும்பும் கழகங்கள் முற்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளுமாறு நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தினர் கேட்டுக் கொள்கின்றார்கள்

இப்போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு முதல்பரிசாக வெற்றிக் கிண்ணமும் 6000 ரூபா ரொக்கப் பணமும், இரண்டாம் பரிசாக வெற்றிக் கிண்ணமும் 3000 ரூபா ரொக்கப் பணமும் வழங்கப்படவுள்ளது.

விளையாட்டு செய்திகள்

# ஹொக்கியில் அசத்தும் இந்தியா

ஐரோப்பிய சுற்றுப்பயணம் சென்றுள்ள இந்திய ஆண்கள் கொக்கி அணி பிரான்சுக்கு எதிராக 2 போட்டியில் விளையாடியது.

முதல் போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் வென்ற நமது அணி, நேற்று முன்தினம் நடந்த 2ஆவது போட்டியிலும் 4:1 என்ற கோல் கணக்கில் வென்றுள்ளது அடுத்ததாக எதிர்வரும திங்கட்கிழமை ஸ்பெயின் அணிக்கு எதிராக அந்நாட்டில் இந்திய அணி விளையாட உள்ளது.



# பொலிகை பாரதி உதைபந்து யங்கம்பன்ஸ் அணி வெற்றி



பொலிகை பாரதி விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் யாழ் மாவட்ட ரீதியான 7 நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் கடந்த புதன் கிழமை இடம்பெற்ற போட்டியில் சக் கோட்டை சென்சேவியர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

இவ் ஆட்டத்தில் மிகவும் சிறப்பாக விளையாடிய யங்கம்பன்ஸ் 5-0 என்ற கோல் கணக்கில் சென் சேவியர்ஸ் விளையாட்டுக்கழகத்தை வெற்றிகொண்டது. யங்கம்பன்ஸ் சார்பாக தர்சன்-3 கோல்களையும் பிரகாஸ் மற்றும் கமாலி 1 கோலினையும் பெற்றனர்.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக யங்கம்பன்ஸ் அணி வீரர் தர்சன் தெரிவுசெய்யப்பட்டார்.

இவ் போட்டி மாலை 4:30 மணியளவில் பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றது.

# சிங்கர் வெற்றிக்கிண்ண கிரிக்கெட் போட்டி

## - மகாஜனக் கல்லூரி வெற்றி -

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தால் சிங்கர் வெற்றிக் கிண்ணத்துக்காக பாடசாலைகளின் 15 வயது பிரிவு 3 அணிகளுக்கிடையில் நடாத்தி வரும் 50 ஓவர்கள் மட்டுப படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி ஒரு ஓட்டத்தால் அதிர்ஷ்டவசமாக வெற்றியீட்டியது.

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற போட்டியில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி அணி 39.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றது. எஸ்.சதுர்சன் 29, எம்.பகீரதன்



20 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் ஸ்கந்தவரோதயா அணி சார்பாக ஆர்.டிலுக்சன் 3, எல்.டனுசன், கே.சோபிகன் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயா அணி மிகுந்த போராட்டத்தை வெளிப்படுத்தி வெற்றியைப் பெறமுயற்சித்த போதும் அது கைகூடவில்லை. இறுதியில் 48.2 ஓவர்களில் 142 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. எஸ்.நிகந்தன் 38 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்துவீச்சில் மகாஜனக் கல்லூரி சார்பாக ஆர்.றேனுகன் 3, என்.பகீரதன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



முருகேசு சந்திரகுமார்

(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)




X 7

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)



# முன்னோக்கிய திசையில்...

– சுகு-ஸ்ரீதரன் –



**இ**லங்கையின் அரசியல் அதிகார கட்டமைப்பில் மாற்றங்கள் தொடர்ச்சியாக நிகழ்ந்தேயாக வேண்டும்.

இலங்கையின் நாடளாவிய அரசியலிலும் உள்ளூர் அரசியலிலும் திருடர்கள் மற்றும் அதிகார போதை கொண்டோர் ஆதிக்கம் வகிப்பதால் முன்னேற்றம் என்பது மிகமிகச் சவாலான பயணம்.

பெருவாரியான மக்களுக்கு பாதுகாப்பான வாழ்க்கை உத்தரவாதம் இல்லை.

இனமுரண்பாடுகள் - பெண்கள் சிறுவர்கள் மீதான பயங்கரவாதம்,

போதைவஸ்து வியாபாரம் மற்றும் சமூகச் சீரிழிவு நாச வேலைகள்,

சுற்றாடல் பேரழிவு வர்க்க ஏற்றத்தாழ்வு அதிகரித்துச் செல்வது போன்றவற்றை தடுத்து நிறுத்துவதற்கான சமூக அரசியல் இடைவெளி குறைவாகவே காணப்படுகிறது.

ஒன்றோ பலவோ ஆன சமூக நீதி மற்றும் நாம் வாழும் இயற்கைச் சூழல் மீது அக்கறை கொண்ட இயக்கங்கள் தேவைப்படுகின்றன.

அர்ப்பண உணர்வு கொண்ட சமூக இயக்கங்கள் தேவைப்படுகின்றன.

1977 இற்குப் பிந்திய அரசியல் பாரிய அளவில் குண்டர் மயப் பட்டிருக்கிறது.

இந்த குண்டர் மயத்தனால் ஐதேக -ஸ்ரீலசுக இற்றை வரை மெருகேறி வந்திருக்கின்றன.

இந்த சக்திகள் செயற்படுவதற்கான இடைவெளி அதிகரித்து நியாயமான சமூக செயற்பாட்டிற்கான இடைவெளி குறைவடைந்துள்ளது.

ஆயுதங்கள் பரவலாக புழக்கத்திற்கு வந்ததும் பெயர் பெற்ற கிரிமினல்கள் அரசியல் சமூக வாழ்வில் வெவ்வேறு மட்டங்களில் செயற்படுவதும் நிதர்சனம்.

இந்த பிரதான கட்சிகளின் அரசியல் வாதிகளின் பிள்ளைகள் 5 நட்சத்திர ஹோட்டல்களிலிருந்து தெருக்கள் வரை நடத்தும் சண்டித்தனங்கள் -மரணம் விளைவிப்பது- பெண்கள் மீதான அத்துமீறல்கள் பலதடவை ஊடகங்களில் பதிவாகியிருக்கின்றன.

விசேட அதிகாரம் பயங்கரவாத தடைச்சட்டம் உள்ளிட்டவை குண்டர்கள் அதிதீவிர வன்முறைத் தேசியவாதிகளுக்கான கதவுகளைத் திறந்து விடுகின்றன.

ஆட்சியாளர்கள் -ஆட்சிக்கு அப்பாற்பட்ட இயக்கங்களினாலும் இந்த வன்முறை அரங்கேற்றப்பட்டு வந்தது.

போதைவஸ்து கடத்தல்- மாபியா வியாபாரிகள் ஊழல்வாதிகளுக்கு கூழைக்கும்பிடு போட்டு பதவிகளைப் பெறுவோருக்கு இருக்கும் சுதந்திரம் கல்வியாளர்கள் சுயமரியாதை கொண்ட மனிதர்களுக்கில்லை.

இத்தகைய நிலைமை கல்வியாளர்களை நாட்டை விட்டு ஓட வைத்திருக்கிறது.

ஜனநாயக வாழ்வொன்று ஸ்தாபிக்கப்படுவதிலேயே இந்த நாடு சமூக பொருளாதார முன்னேற்றத்தை எட்ட முடியும்.

மனிதர்களின் நடமாடும் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் உறுதிப் படுத்தப்பட வேண்டும்.

இத்தகைய போக்குகளை கண்ணியமான இந்த நாட்டின் பெருவாரியான மக்கள் சகிக்கவில்லை.

ஐதேக வலதுசாரி -ஸ்ரீலசுக இடது முற்போக்கு என்ற கதைகள் எல்லாம் காலாவதியானவை.

நவதாராளவாத உலகில் தேசிய அரசுகள் என்பனவெல்லாம் அரிதிலும் அரிது.

1977 இல் ஜே.ஆர் அறிமுகப் படுத்தியவற்றை மிக விஸ்தாரமாக எடுத்துச் சென்றவர் தான் ராஜபக்ஷ.

உலக வங்கி சர்வதேச நாணய நிதியத்தின் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுவதாகத்தான் இவை அமைந்தன.

உள்ளக கட்டமைப்பு வசதிகள் இவ்வளவு விரிவாக செய்யப்பட்டது மக்களுக்குப் பயன் அளிக்கும் த்ன்மைகள் ஒருபுறமிருக்க நவதாராளவாத உலக ஒழுங்கமைப்பின் அம்சங்களாகவும் அமைகின்றன. மூலவளங்களை ஒன்று திரட்டல் என்பதே அது.

இது உலகம் முழுவதுமான வேகமான நிகழ்வு.

எவ்வாறு தொழிலாளி வர்க்கத்திற்குத் தேசமில்லையோ, அதேபோல் முதலாளி வர்க்கத்திற்கும் தேசம் இல்லை.

உலகைப் பங்கு போடுவதில் இன்று அமெரிக்க சீன முரண்பாடு நிலவுகிறது.

அந்த முரண்பாடுகளுக்கிடையில் தான் ராஜபக்ஷ பிரச்சினை வருகிற தேயொழிய ஜனநாயகம் மனித உரிமை மீறல் எல்லாம் இங்கு ஒரு பொருட்டே அல்ல.

ராஜபக்ஷாக்கள் தமிழ்பாசிசத்தை தோற்கடித்ததன் பின்னர் பாசிச கூறுகளுடன் இராணுவமயப்பட்ட அதிகாரக் கட்டமைப்பை நிறுவிக் கொண்டிருந்தார்கள் என்பது சந்தேகத்திற்கிடமற்ற உண்மை. அதிகாரபோதை கொண்ட அரசியல்வாதிகள் அந்த யுகம் மீட்கப்பட வேண்டும் என்று அவாவுறுகிறார்கள். இது மிகவும் ஆபத்தானது. 1980களின் இறுதியில் ஜனநாயகவாதியாக காணப்பட்ட ராஜபக்ஷ 2009 இன் பின்னர் ஒரு கடும் சீற்றக்காரராக மாறியிருந்தார். அவருடைய சகோதரர்கள் பல உற்ற சுற்றத்தினர் அவ்வாறு தான் எல்லோரையும் எடுத்தெறிந்தார்கள்.

குடும்பம் உற்ற சுற்றத்தின் சாம்ராச்சியம் ஒன்றை நிறுவினார்கள்.

இராணுவ சர்வாதிகாரத்தின்- பாசிசத்தின் சாயல் அதில் அப்பட்டமாகவே படிந்திருந்தது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட சட்டபூர்வமான ஆட்சி இருண்ட யுகத்தின் சாயல்களைக் கொண்டிருந்தது.

ஐதேகவின் லும்பன் மற்றும் கனவான் அரசியல்வாதிகள் பலர் மகிந்தவுடன் ஆரோகணித்தார்கள்.

பல்லினங்களின் நாடென்ற உணர்வு -ஜனநாயகம் இங்கு நெருக்கடிக்குள்ளாகி இருந்தது.. அதன் பிரதிபலிப்புத்தான் ஜனவரி 8 தேர்தலில் நிகழ்ந்தது.

எதிரும் புதிருமாக அரசியல்வாதிகளின் பாய்ச்சலில் சம்பிரதாயமான எல்லைக் கோடுகள் தகர்ந்தன.

உறுதியற்ற பலரையும் அனுசரித்து இயங்கவேண்டிய பாராளுமன்றம் என்பன இலங்கையின் எதிர்காலத்திற்கு நல்லது.

19 ஆவது திருத்த சட்டமூலத்திற்கப்பால் இன்னும் பெருந்திரளான சீர்திருத்தங்கள் தொடராக நிகழவேண்டியிருக்கிறது.

ஜனநாயக சீர்திருத்த திசையில் இலங்கை செல்வதாக இருந்தால் பரஸ்பரம் அனுசரித்துப் போக நிர்ப்பந்திக்கும் பாராளுமன்றமே தேவைப்படுகிறது.

யாருக்கும் ஏகபோக அதிகாரங்கள் என்பது மிக ஆபத்தானது என்பது எமது 4 தசாப்த அனுபவமுமாகும்.

பாரம்பரிய இடதுசாரிகள் வரலாற்றில் என்றைக்குமில்லாதளவிற்கு பலவீனமடைந்தது எதனால் என்பதை சுயவிமர்சன அடிப்படையில் நோக்க வேண்டும். ஏனெனில் எமது அரசியல் தளத்தில் மக்கள்நேயமுள்ள ஜனநாயக சக்திகள் பலப்பட வேண்டும்.

---



# பசலைக் கீரைப் பயன்கள்!

பசலைக் கீரையில் கொடிப் பசலை, குத்துப் பசலை, வெள்ளைப் பசலை என பல வகைகள் உண்டு. .

இதனை நீரிழிவு நோயாளிகளும், உடல் எடை குறைக்க விரும்புபவர்களும், எண்ணெய் அதிகம் - சேர்க்காமல், கடையல் செய்து சாப்பிடலாம்.

உணவில் பசலைக் கீரையை அடிக்கடி சேர்த்துக் கொண்டால், மலச்சிக்கல் பிரச்சினை நீங்கும்.

பசலைக் கீரையில் தண்ணீர் சேர்த்து வேக வைத்துச் சாப்பிடுவது காமாலை மற்றும் கல்லீரல் பிரச்சினை உள்ளவர்களுக்கு மிகுந்த பலன் கிடைக்கும்.

இந்தக் கீரையைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் உடலில் சூடு குறைந்து, குளுமை பெறும், குடல் நோய்கள் வராது.


உடலில் உள்ள வெப்பம் காரணமாக ஏற்படும் தலைவலி நீங்க, பசலை இலையை அரைத்து, நெற்றியின் மீது பற்றுப் போட்டால் தலைவலி நீங்கும்.

அக்கி நோயால் அவதிப்படுபவர்கள்; பசலை இலையை நன்றாக நசுக்கி, அக்கியின் மீது தொடர்ந்து தடவி வந்தால், அக்கி குணம் ஆகும்.

பசலைக் கீரையின் தண்டை அரைத்து, வேர்க்குரு கை, கால்களில் ஏற்படும் தோல் எரிச்சலுக்குப் பற்றுப் போடலாம்.

---

# முதல் மரத்தான்



**கி**ரேக்க நாட்டில், கி.மு., .490 இல் மரத்தான் என்ற இடத்தில், நடைபெற்ற பெரும் போரில், பெர்ஷியர்களை வென்று விட்ட நற்செய்தியை, ஏதென்ஸ் நகரத்திற்கு சொல்ல கிரேக்க இராணுவ வீரன் பெடிபைட்ஸ் ஓட்டமாக ஓடினான். ஏதென்ஸ் நகர எல்லையை அடைந்ததும், குற்றுயிராய்க் கீழே விழுந்தவன், “வெற்றி வெற்றி... நாம் வென்று விட்டோம் கொண்டாடுங்கள்!” என்று கூறி, இறந்து விட்டான். வெற்றிச் செய்தியைக் கூற, அவன் ஓடி வந்த தூரம், 40 கி.மீ.,!

கடந்த 1896 இல் முதன் முதலில் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி நடைபெற்ற போது, அந்த வீரனுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், மரத்தானிலிருந்து, ஏதென்சுக்கு ஓட்டப் பந்தயம் நடத்தப்பட்டது. இதுதான், முதல் மரத்தான் ரேஸ்! அதன்பின் நடந்த மரத்தான் ஓட்டம், 42 கி.மீ., தூரமாக அதிகரிக்கப்பட்டது.

---

# விஷயத்திற்கு அப்பால் பேசாதீர்கள்!



**மு**தன் முதலில், தமிழில் சுயமுன்னேற்ற நூல்களை எழுதிப் புகழ் பெற்றவர் அப்துர் ரகீம். “வாழ்வைத் துவங்கு” நூலில் இவர் எழுதியது:

வெற்றி பெறுபவனின் மேலான குணம் எதுவென்றால்; சுற்றி வளைக்காமல், நேரடியாக விஷயத்தைக் கூறுவது தான். அவன், ஒரு விஷயத்தின் மேலேயும் செல்ல மாட்டான் கீழேயும் செல்ல மாட்டான் சுற்றி வளைத்துக் கொண்டும் செல்ல மாட்டான். நேரடியாக அதைத் துளைத்துக் கொண்டு செல்வான்.


வியாபார மன்னரான, வானோ மேக்கர் கூறுகிறார்... “ஒரு இளைஞனை முன்னுக்கு வரவிடாமல் தடுக்கக் கூடியதில் முக்கியமானது, அதிகமாகப் பேசுவது தான். இது, என் அனுபவ பாடம். எவன் அதிகமாக சிந்தித்து, குறைவாகப் பேசுகிறானோ, அவனே வெற்றி பெறுகிறான்...” என்கிறார்.

இதை அறியாத பலர், அதிகம் பேசினால் தன்னைக் கெட்டிக்காரர் என்று உலகோர் நினைப்பர் என எண்ணி, எப்போதும் பேசிக் கொண்டே யிருப்பர்.

நீங்கள் எழுதவோ, பேசவோ ஆரம்பித்தால், எங்கு முடிக்க விரும்புகிறீர்களோ, அதற்கு வெகு அண்மையிலிருந்தே ஆரம்பியுங்கள்! சொல்ல வேண்டியதை ஆணித்தரமாகச் சொல்லுங்கள். சொன்னதும் முடித்துக் கொள்ளுங்கள்.

# தமிழ்த் தேசியத்துள் வாக்கு அரசியல்

- புருஜோத்தமன் தங்கமயில் கட்டுரையிலிருந்து.



சுதந்திரத்துக்குப்(!) பின்னரான இலங்கையில் ஆட்சியதிகாரங்களை நோக்கி நகர்வதற்கான கருவியாக வாக்கு அரசியல் முன்னிலைப்படுத்தப்பட்ட காலத்திலிருந்து இனமான அரசியல் கோலோச்சத் தொடங்கியது. பௌத்த சிங்கள பேரினவாதம் தமிழ்- முஸ்லிம் சமூகங்களை தங்களின் இருப்புக்கான அச்சுறுத்தலாக காண்பித்து வாக்கு அரசியல் செய்ய ஆரம்பித்த தருணம் என்பது, நாட்டின் பேரழிவுக்கும்- வீழ்ச்சிக்கும் பெரும் காரணமாகும். அதுதான், குறிப்பிட்டளவு இணக்கமாக சமூகங்களாக இருந்து வந்தவர்களை இனமான அடையாளங்களை முன்னிறுத்தி தேசிய அரசியலுக்குள் சென்று சேர வைத்தது.

இதற்கான, பழி பாவங்களை பௌத்த சிங்கள பேரினவாதத் தலைவர்கள் மாத்திரமல்ல, கடந்த கால தமிழ்- முஸ்லிம் தலைமைகளும் ஏற்றுக் கொள்ள வேண்டிய கடப்பாடு உண்டு. அதனைப் புறந்தள்ள முடியாது. ஆனால், எம்மீது திணிக்கப்பட்ட ஒன்றுக்கெதிராக அதே விடயத்தை எதிர்வினையாக ஆற்றுகின்ற புள்ளியே, (அதாவது, முள்ளை முள்ளால் எடுத்தல் எனும் நிலைப்பாடே) தமிழ் மக்களை தமிழ்த் தேசிய அரசியலுக்குள் நகர்த்தியது. அது, அக பிறழ்வுகள் சிலவற்றை உறங்குநிலையில் வைத்து "தமிழர்கள்" என்கிற அடையாளத்தோடு ஒருங்கிணைவதற்கும் காரணமாக இருந்திருக்கின்றது.

தமிழ் மக்களின் அரசியலுரிமைப் போராட்டங்களின் முனைப்பு பல் கோணங்களில் என்றைக்குமே இருக்கவேண்டிய ஒன்று. அது, சில காலத்துக்குள் முடிந்துவிடாது. அதற்கான வாய்ப்புக்களும் பௌத்த சிங்கள பேரினவாத- பிராந்திய அரசியல் கோலோச்சுகைகளின் போக்கில் இல்லை. எனினும், ஆயுதங்களை மீண்டும் தூக்குவதையோ, தனித் தமிழீழம் கோருவதையோ தற்போதைய கள யதார்த்தம் அனுமதிக்கவில்லை.

தமிழ்த் தேசிய அரசியல் களம் என்பது தனக்குள் பெரும் முரண்பாடுகளோடு பயணிக்க ஆரம்பித்திருக்கின்றது. அது, புலம் - புலம் பெயர் வாழ் தரப்பு, யாழ்- கொழும்பு வாழ் தரப்பு, வடக்கு- கிழக்கு வாழ் தரப்பு என்கிற இடைவெளிகளின் போக்கிலும் உருவாகியிருக்கின்றது. ஆயுதப் போராட்டங்களின் முனைப்பு இடைவெளிகளின் அளவை மிகவும் குறைத்து வைத்திருந்த நிலையில், அதன் முடிவு என்பது இடைவெளிகளின் அளவினை அதிகரித்துவிட்டிருக்கின்றது என்பது அச்சுறுத்தும் உண்மை.

இந்த இடைவெளிக்கான காரணிகளில் முக்கியமானது, தமிழ்த் தேசிய அரசியலின் முடிவுகளை அல்லது தீர்மானங்களை யார் எடுக்க வேண்டும் என்பது. அதனை, ஆராய்வுகளுக்கு அப்பால் புறந்தள்ளி செயற்படுவது என்பது தமிழ்த் தேசிய அரசியலுக்கான அச்சுறுத்தல். அந்த அச்சுறுத்தல் என்பது புறக்காரணிகளினால் அன்றி, எமக்குள்ளிருந்தே எழுந்திருப்பவை.

கடந்த ஆறு ஆண்டுகளில் தமிழ்த் தேசிய அரசியலரங்கில் என்றைக்கும் இல்லாதளவுக்கான வசைபாடல்கள், தூற்றல்கள், குழிபறிப்புக்கள் (இது என்றைக்கும் இருந்ததுதான்), த்னிமனித குரோதங்கள்- விரோதங்கள் உள்ளிட்ட விடயங்கள் மேல்நோக்கி வந்திருக்கின்றன. அது, மிகவும் கேவலமான அடையாளத்தை எம்மீது சுமத்தியிருக்கின்றன. "அரசியல் என்பது கருத்தியல்- கொள்கை ரீதியாக முன்வைக்கப்பட வேண்டியது என்கிற அடிப்படைகளைத் தவிர்த்து கேவலமான முன்னிறுத்துகைகளின் மூலம் வெற்றி கொள்ளப்பட வேண்டியது என்ற சிந்தையை தமிழ்த் தரப்பும் பிரதிபலிக்க ஆரம்பித்துவிட்டது. இன்றைய ஊடகப் பரப்பிலும்- சமூக ஊடகங்களின் இயங்குநிலையிலும் அதுதான் பிரதானமாகிவிட்டது. அது, எமக்கான நியாயமான அரசியலைப் பெற்றுத் தருமென்று கருத முடியாது.

---

# ஒழுங்கான நீச்சல் பயிற்சி ஆயுளை அதிகரிக்கும்

உலகில் அறியப்பட்ட உடற்பயிற்சிகளில் நீச்சலே உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் சிறந்தது என்கின்றது விஞ்ஞானம். ஒரு மணிநேர நீச்சலில் உடலின் அத்தனை தொகுதிகளும் பழுது பார்க்கப்பட்டு அவற்றின் தொழிற்பாடு சீராகி விடுகிறது. இன்று எம்மை அச்சுறுத்தும் நீரிழிவு, கொலஸ்ரோல், இதய நோய்கள், உயர் குருதியமுக்கம் என்று அத்தனைக்குமே ஒழுங்கான நீச்சல் பயிற்சி ஒரு சிறந்த நிவாரணி!

இன்றைய நிலையில் வெகு சீக்கிரத்தில் வீட்டுக்கு ஒரு நீரிழிவு நோயாளி என்ற பெருமை இலங்கை போன்ற ஆசிய நாடுகளில் ஏற்படும் என்று ஆய்வுகள் அபாயமணி அடிக்கின்றன. இதற்குக் காரணம் எமது ஒழுங்கற்ற உணவுப் பழக்கங்களும், வாழ்க்கை முறையும் தான் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இந்தப்பழக்க வழக்கங்கள், அதிகரித்த உடற்பருமனை ஏற்படுத்துகின்றன. அதிகரித்த உடற்பருமன் எல்லா நோய்களுக்கும் நுழைவாயிலாகி இறுதியில் சொர்க்க வாசலையே காண்பித்து விடுகிறது.

இந்தப் பழக்க வழக்கங்களை மாற்ற முடியாதவர்கள் (பல வழிகளையும் கையாண்டு தோற்றுப் போனவர்கள் மாற்ற வேண்டும் என்பதை மட்டும் மாற்றமில்லாமல் சொல்பவர்கள் அதாவது நம்மில் பெரும்பான்மையானோர்) ஆகக் குறைந்தது நீச்சலையாவது ஒழுங்காகச் செய்தால் நல்லது என்பது விஞ்ஞானிகள் கருத்து. நீச்சலில் கிடைக்கும் எல்லாப் பயன்களையும் தரையில் செய்யும் ஏனைய உடற் பயிற்சிகளில் முழுமையாகப் பெறமுடிவதில்லை.

எமது பிரதேசத்தைப் பொறுத்த வரையில் நீச்சல் பெரியளவில் பிரபல்யமடையாததற்கு அதற்குரிய வளங்கள் இருக்காமையும் ஒரு காரணமாக இருந்தது. ஆனால் கொழும்பு போன்ற பிரதேசங்களைப் பொறுத்த வரையில் சிறுவயதிலிருந்தே நீச்சலைப் பழக்கத் தொடங்கி விடுகிறார்கள். யாழ்ப்பாணத்தில் தற்போது யாழ் மத்திய கல்லூரியில் சிறந்த ஒரு நீச்சல் தடாகம் உள்ளது. அது தவிர ஏனைய சில தனியார் தடாகங்களும் உள்ளன. ஆனால் நீச்சல் பழகுவதற்கு நீச்சல் தடாகங்கள் தான் அவசியம் என்றல்ல. ஆழம் குறைந்த் பாதுகாப்பான கடற்தரை பிரதேசங்களிலும் ஒரு சிறந்த பயிற்றுவிப்பாளர், உயர் காப்பாளர் இருக்கும் பட்சத்தில் நீச்சல் பயிற்சியினை மேற்கொள்ளலாம். அத்துடன் எமது வீடுகளில் கூட இடம் இருக்கும் பட்சத்தில் சிறிய நீச்சல் தடாகங்களை அமைத்துக் கொள்ளலாம். அது எதிர்கால சந்ததியின் ஆரோக்கியத்திற்கான முதலீடாக அமையும்.

நீச்சல் ஒரு Aerobic வகையைச் சேர்ந்த அதாவது ஒழுங்கான சந்தத்துடன் கூடிய சீரான சுவாசத்தின் உதவியோடு செய்யப்படும் உடற்பயிற்சியாகும். நீச்சலின் போது உடலும் உள்ளமும் புத்துணர்ச்சி பெறுவதால் நீந்துபவருக்கு நீச்சல் மீதான ஆர்வம் அதிகரிக்கின்றது. இது ஒரு சுழற்சி வட்டமாக மாறுவதால் எமது உடலும் உள்ளமும் உச்ச வினைத்திறனுடனும் இயங்குவதற்கான ஆரோக்கியம் தானாகவே கிடைத்துவிடுகிறது. ஒழுங்கான நீச்சல் பயிற்சியின் மூலம் நாம் பின்வரும் பயன்களை அடைய முடியும்.



**1.** கழுத்தளவு நீரில் ஒரு மனிதன் மிதக்கும் போது 90 வீதம் நிறை நீரினால் தாங்கப்படுவதனால் உடலிலுள்ள மூட்டுக்களில் வழமையாகப் பிரயோகிக்கப்படும் அழுத்தம் குறைந்து தசைகளும் மூட்டுக்களும் இலகுவாக இயங்க முடிகிறது. நீங்கள் நீந்தாவிட்டாலும் கழுத்தளவு நீரில் நின்று சில உடற்பயிற்சிகளைச் செய்தாலே மூட்டு சம்பந்தமான பல நோய்களைத் தவிர்க்கலாம்.

**2.** தரையில் ஓடும் போது காற்றில் ஏற்படும் எதிர்ப்பை விட பன்னிரண்டு மடங்கு அதிக எதிர்ப்பு நீந்தும் போது நீரினால் முழு உடலுக்கும் ஏற்படுகின்றது. இது எமது தசைகளின் வலிமையையும், இழுவிசையையும் (Tone) அதிகரிக்க உதவுகின்றது. நீச்சல் என்புகளின் வலிமையையும் அதிகரிப்பதால் மாதவிடாய் நின்ற பின் பெண்களுக்கு ஏற்படும் என்பு சம்பந்தமான நோய்களுக்கு நீச்சலே சிறந்த நிவாரணம் என்கின்றனர் விஞ்ஞானிகள்.

**3.** உடற்பயிற்சிக் கூடத்தில் உடற்பயிற்சி செய்யும் போது குறித்த ஒரு உடற்பகுதி அல்லது தசை மட்டுமே குறித்த நேரத்தில் பயிற்சிக்கப்படும். நீச்சலில் முழு உடலும் ஒரே நேரத்தில் சம்பந்தப்படுவதால் முழு உடலினதும் நெகிழ்வுத்தன்மை (Flexibity) அதிகரிக்கின்றது. (குனிய நிமிர ஏலாமல் கிடக்கு என்று சதா புலம்புவர்கள் கவனிக்க)

**4.** நீச்சலின் போது எமது இதயத் தசை நார்கள் பலமடைவதுடன் குருதியைப் பம்பும் திறனும் அதிகரிக்கிறது. அமெரிக்க இருதய நோய்ச்சங்கத்தின் அறிக்கையின்படி தினமும் 30 நிமிடங்கள் நீச்சலில் ஈடுபடுபவர்களில் இருதய நோய் ஏற்படும் வாய்ப்பு 30 - 40 வீதத்தால் குறைந்துவிடுகிறதாம்.

**5.** சாதாரண நீச்சலில் (Free style) ஒவ்வொரு 10 நிமிடத்திற்கும் 100 கலோரி சக்தி பயன்படுத்தப்படுவதால் உடல் நிறையைக் குறைக்க அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்க மிகவும் இலகுவான முறையாக உள்ளது. செலவிடும் சக்தியின் அளவு நீச்சல் பாணிகளுக்கு ஏற்ப வேறுபடுகிறது.

**6.** ஆஸ்துமா நோயாளிகளுக்கு உடற்பயிற்சி செய்வதற்குப் பயம் இருக்கலாம். ஆனால் நீச்சல் அவ்வாறல்ல. நீச்சல் தடாகத்திலுள்ள ஈரலிப்பான காற்று, நீந்தும்போது ஆஸ்துமா தூண்டப்படுவதைத் தவிர்க்க உதவுகிறது. அத்துடன் நீச்சலானது நுரையீரலின் கொள்தகவை (Capacity) அதிகரித்து நோய் அறிகுறிகளைக் குறைக்கிறது.

**7.** கொலஸ்ரோல் அதிகரிப்பினால் பாதிக்கப்பட்டவர்களில் LDL வகைக் கொலஸ்ரோலின் அளவைக் குறைப்பதும் HDL வகைக் கொலஸ்ரோலின் அளவை அதிகரிப்பதும் இதயத்தின் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதது. நீச்சல் ஒரு சிறந்த Aerobic வகைப் பயிற்சியாதலால் இவை இரண்டையும் இலகுவாகச் செய்துவிடுகிறது.

**8.** கிரமமாக நீச்சலில் ஈடுபடுபவர்களில் உடலில் மேலதிக குளுக்கோஸ் தொடர்ந்து பயன்படுத்துவதால், நீரிழிவுநோய் ஏற்படும் வாய்ப்பு குறைகிறது. நீரிழிவு நோயாளர்களில் நீச்சல் போன்ற உடற்பயிற்சிகள் இன்சுலின் ஓமோனுக்கான உணர்திறனை அதிகரிக்கச் செய்து நோய்க் கட்டுப்பாட்டிற்கு உதவுகிறது.

**9.** எல்லாவற்றுக்கும் மேலாக உள ஆரோக்கியத்தையும் உற்சாகத்தையும் வழங்குவதில் நீச்சலுக்கு நிகரான உடற்பயிற்சி இல்லை என்கின்றன ஆய்வுகள். எமக்கு மகிழ்ச்சி ஏற்படும் போது உடலில் சுரக்கும் Gdorphin எனும் ஒரு இரசாயனம் நீச்சலின்போது தானாகவே சுரக்கின்றதாம். மேலும் மூளையில் Hippo campus என்ற பகுதியில் நடைபெறும் கலங்களைப் புதுப்பிக்கும் செயற்பாடு (Neurogenesis) நீச்சல் போன்ற உடற்பயிற்சிகளால் துரிதப்படுகிறதாம். ஆக உற்சாகமாக வாழ நீச்சல் ஒரு சிறந்த பொழுதுபோக்கு.

**10.** அதிக நாள் வாழ யாருக்குத் தான் ஆசை இல்லை. அமெரிக்காவில் நடந்த ஆய்வில் நீச்சல் பயிற்சி செய்பவர்களின் இறப்பு வீதம் ஏனையவர்களுடன் ஒப்பிடும்போது 50 வீதத்தால் குறைவாக இருந்தது. இது ஒன்றே போதும் நீச்சலின் பயன்பாட்டை வளர்க்க, ஆகவே சந்தோஷத்திற்காகவேனும் நீந்தப் பழகுங்கள்.

யாழ்ப்பாணத்தில் முறையாக நீச்சல் பயிற்சிக்கான வசதிவாய்ப்புகள் உருவாகிவரும் சூழ்நிலையில் அவற்றைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். யாழ் மத்திய கல்லூரியில் அமைந்துள்ள நீச்சல் தடாகத்தில் பல பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்கு நீச்சல் பயிற்சி வழங்குவதைக் காணக்கூடியதாக உள்ளது. இது வரவேற்க வேண்டிய ஒன்று. அத்துடன் இங்கு பெண்களுக்கு பிரத்தியேக நேரமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆனால், நீச்சல் பயிற்றுவிப்பாளரும், உயிர்காப்பாளரும் இல்லாது எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தடாகத்தில் இறங்கக்கூடாது.

நீச்சலை வரவேற்போம்!!. எமது இளைய சந்ததியைப் பயிற்றுவிப்போம்!! ஆரோக்கியமான சமுதாயத்திற்கு வழி சமைப்போம்!!

(நன்றி: Jaffna Diabetic Centre)



# புதிர்ப்போட்டி - 50

**அனுப்பவேண்டிய முகவரி**
புதிர்ப்போட்டி இல: 50
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

**விண்ணப்பதாரரின் விபரம்**

முழுப்பெயர் :- ------------------------------
பாடசாலை :- ------------------------------
கல்வி கற்கும் தரம் :- ------------------------------
வீட்டு முகவரி :- ------------------------------
தொ.பேசி இலக்கம் :- ------------------------------

## — புதிர்க்கதை —
# ஒரு வரம் மூன்று பலன்கள்

ஒரு ஊரில் ஏழை மீனவன் ஒருவன் இருந்தான். அவனுடைய அம்மாவிற்குக் கண்பார்வை இல்லை. அவனுக்கு வெகு நாட்களாகக் குழந்தையும் இல்லை. ஒரு நாள் அவன் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றான். அப்போது, கரையில் ஒதுங்கிக் கிடந்த பெரிய மீனொன்று அவனைப் பார்த்துக் கெஞ்சியது:

மீனவனே, "நான் சாதாரண மீன் இல்லை. கடலில் உள்ள மீன்களுக்கெல்லாம் தலைவன். ஆழ்கடலில் வசிக்கும் நான், ஒரு பெரிய அலையில் சிக்கி இந்தக் கரைப் பகுதிக்கு வந்துவிட்டேன். இப்போது நீந்த முடியாத அளவிற்கு மிகவும் சோர்வாக உள்ளேன். எனக்கு ஒரு உதவி செய் மீனவனே. என்னை பத்திரமாக ஆழ்கடலுக்குக் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டால் உனக்கு ஒரு வரம் தருவேன்"

மீனவன் அந்த மீனைத் தூக்கி படகில் போட்டான். மிகவும் கஷ்டப்பட்டு படகைச் செலுத்திக் கொண்டுபோய் மீனை நடுக்கடலில் விட்டான். பிறகு, என்ன வரம் கேட்பது என்று யோசித்தான். அவனால் ஒரு முடிவும் எடுக்க முடியவில்லை. எனவே அவன் சொன்னான்:



" மீன்களின் ராஜாவே, நீ சொன்னபடி நான் செய்து விட்டேன். ஆனால், என்ன வரம் கேட்பது என்று எனக்கு இப்போது தெரியவில்லை. வீட்டுக்குச் சென்று மற்றவர்களிடம் கலந்து ஆலோசித்துவிட்டு நாளை வந்து கேட்கிறேன"

மீனும், "நீ ஒரே ஒரு வரம்தான் கேட்க வேண்டும்" என்று நினைவுபடுத்தி நன்றி கூறிச் சென்றது. மீனவன் வீட்டுக்குச் சென்றான். வீட்டில் பெற்றோரிடமும், மனைவியிடமும் நடந்ததைக் கூறினான். ராஜா மீனிடம் என்ன வரம் கேட்பது என்று ஆலோசித்தான்.


அவனது தந்தை கூறினார்: "மகனே, நாம் நெடுங்காலமாக இந்த ஓட்டைக் குடிசையில்தான் வாழ்ந்து வருகிறோம். நமக்கு ஒரு நல்ல வீடு வேண்டும் என்று ராஜா மீனிடம் கேளேன்."அடுத்ததாக அவனது அம்மா சொன்னாள்.

மகனே, எனக்குக் கண் தெரியாமல் தான் மிகவும் சிரமப்படுகின்றேன் என் கண்கள் பார்வை பெற வேண்டும் என்று அந்த மீனிடம் கேள் கடைசியாக மனைவி கேட்டாள்: "நமக்குத் திருமணம் ஆகி பல வருடங்கள் ஆகிவிட்டன. இன்னும் நமக்கு ஒரு குழந்தை இல்லை. எனவே, அந்த மீனிடம் நமக்கு ஒரு குழந்தை வேண்டும் என்று கேளுங்கள்."

மறுநாள், அந்த மீனவன் கடலுக்குச் சென்று ராஜா மீனிடம் ஒரே ஒரு வரம்தான் கேட்டான். அந்த ஒரு வரத்தில் அவன் பெற்றோரின் ஆசையும், அவன் மனைவியின் விருப்பமும் நிறைவேறின. அப்படி அவன் என்ன வரம் கேட்டான்?


## படப்புதிர்

பார்ப்பதற்கு வித்தியாசமாக இருக்கிறதா இந்த விலங்கு? இது ஒரு புதுமையான விலங்கு. இந்த விநோத விலங்குக்குள் நான்கு விலங்குகளின் உடற்பாகங்கள் ஒளிந்துள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்களேன்...




1. தலை ............................
2. உடம்பு ............................
3. கால்கள் ............................
4. வால் ............................

## ஆறு வித்தியாசங்கள் ஏவை?



இரு படங்களுக்கும் இடையே ஆறு வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

## கணிதப்புதிர்




மேலே உள்ள ராட்டினத்தின் பெட்டிகளில் எண்களைக் குறிக்கும் பொறுப்பை ஜெஸிகாவிடம் ஒப்படைத்திருந்தார்கள். பெட்டிகளுக்கு எண்களைக் குறிக்கும்போது, அவள் இரண்டு பெட்டிகளின் எண்களை எழுதாமல் விட்டுவிட்டாள். பெட்டிகளில் இடம்பெற்றுள்ள எண்களின் கூட்டுத்தொகை நூறு. விடுபட்ட எண்கள் ஐந்தின் மடங்குகள்.

அப்படியானால் அந்த எண்கள் எவை?

**இதற்கான விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும் புதிர்ப்போட்டியில் வெளியிடப்படும். அதற்கு முன்னதாக பெயர் விபரத்துடன் உங்களது பதில்கள் புகைப்படத்துடன் குறித்த முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் கிடைப்பதோடு படங்களுடன் பெயர்களும் பிரசுரிக்கப்படும்.**


## புதிர் வினாக்கள்

கீழே சில கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. இந்தக் கேள்விகளுக்கெல்லாம் ஒரு க்ளூ இருக்கிறது. எல்லாப் பதில்களிலும் குழந்தை என்ற சொல்லும் சேர்ந்தே வரும். இந்தக் க்ளூ வை வைத்துக் கொண்டு கேள்விகளுக்குப் பதில் கூற முடியுமா?

1. அழ வள்ளியப்பாவை இப்படி அழைப்பதுண்டு.
2. திருஞான சம்பந்தரை இப்படி அழைப்பார்கள்.
3. உடன்கட்டை ஏறுவதைத் தடுக்கப் பாடுபட்ட ராஜாராம் மோகன்ராய், இதை ஒழிக்கவும் பாடுபட்டார்.
4. சிவகாசியில் இவர்கள் அதிகம் உண்டு என்பது வருத்தமான செய்தி.
5. இவர்கள் இருவரும் குணத்தால் ஒன்று என்று சொல்லுவார்கள்.

## படப்புதிர்

**ஆறு படங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு படத்தில் மட்டும் மற்ற படங்களில் உள்ள ஏதாவது ஓர் உருவம் இடம்பெற்றுள்ளது. அது எந்தப் படம் எனக் கண்டுபிடியுங்கள் பார்ப்போம்**





## எண்புதிர்



ஒரு எண் (x) அந்த எண்ணை 9 ஆல் வகுத்தால் 8 மீதி வரும், அதே எண்ணை 8 ஆல் வகுத்தால் மீதி 7 வரும் அதே எண்ணை 6 ஆல் வகுத்தால் மீதி 5 வரும் அதே எண்ணை 4 ஆல் வகுத்தால் மீதி 3 வரும் அதே எண்ணை 3 ஆல் வகுத் தால் மீதி 2 வரும் அதே எண்ணை 2 ஆல் வகுத்தால் மீதி 1 வரும் x என்ன எண்?

## பொருத்துங்கள்

எந்த பலூனை யார் வைத்திருக்கிறார்?



# விடுதலைக்காக தியாகம் செய்தவர்களை எவரும் ஒருபோதும் ஏமாற்றக் கூடாது

(கிளிநொச்சி)

ஆண்டுக்கணக்காகப் பொய்களைச் சொல்லி, சொந்த மக்களையே ஏமாற்றிக் கொண்டிருக்கும் தலைமைகளை மக்கள் இப்போது இனங்காணத் தொடங்கிவிட்டார்கள். இதனால் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் இந்தப் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி வந்த தலைமைக்கும் தரப்புக்கும் அவர்கள் தக்க பாடத்தைப் புகட்டுவதற்காகக் காத்திருக்கிறார்கள். விடுதலைக்காகத் தியாகங்களைச் செய்த மக்களை எவரும் ஏமாற்றக்கூடாது என்ற செய்தியை அவர்கள் தெளிவாகத் தெரிவிக்கத்தான் போகிறார்கள் என்று தெரிவித்தார் வேட்பாளர் முருகேசு சந்திரகுமார்.



கிளிநொச்சி நகரில் கடந்த புதன்கிழமை முன்னாள் கூட்டுறவு உதவி ஆணையாளர் பத்மானந்தன் தலைமையில் நடைபெற்ற ஆதரவுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது, 'தமிழ் மக்களின் தேசியத் தனித்துவத்துக்காக உண்மையாகவே உழைத்து வருகின்றவர்கள் நாங்களே. அகதிகளாகவும் இடம்பெயர்ந்தவர்களாகவும் நீண்டகாலமாக அலைந்து கொண்டிருந்த மக்களை மீண்டும் சொந்த நிலங்களில் சென்று வாழக்கூடிய நிலையை நாம் இன்று ஏற்படுத்தியிருக்கிறோம். சொந்த ஊர்களில் குடியேறிய மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை - முதல்தரத் தேவைகளை நாங்கள் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். இது மிகப் பெரிய ஒரு பணியாகும். எங்களுடைய இத்தகைய பணியின் மூலமாகவே இன்று போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் இயல்பு நிலையை நோக்கி வளர்ச்சியடையக் கூடியதாக இருந்தது இதை எவரும் மறுக்க முடியாது. இதற்காக நாம் செலவிட்ட உழைப்பும் எமது சிறந்த திட்டமிடலும் மிகப் பெரிய வெற்றியை மக்களுக்குப் பெற்றுத் தந்துள்ளது. இதனை இன்று படித்தவர்கள் முதல் பாமரர்கள் வரையில் நன்றாகப் புரிந்து கொண்டுள்ளனர். இதனால் தான் இன்று எமக்கான ஆதரவு அலை எங்கும் பெருகி வருகிறது.

எமது மக்கள் நம்ப மறுத்த அரசாங்கத்தைக் கொண்டே நாங்கள் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை உருவாககியுள்ளோம். ஊர்களைவிட்டும் வீடுகளை விட்டும் இடம் பெயர்ந்த காலங்களை மாற்றி மீளக்குடியேறும் காலத்தை உருவாக்கியிருக்கிறோம். குடும்பங்கள் மகிழ்வாக ஒன்று கூடி வாழ்வதற்கான நிலையை உருவாக்கி வருகிறோம். இனி இளைஞர்கள் யுவதிகளுக்கான தொழில்வாய்ப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

## குரங்குகளின் அட்டகாசம்

வரணிப்பிரதேசத்தில் தற்போது குரங்குகளின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளதாக வீட்டு உரிமையாளர்கள், விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

வீடுகளில் உள்நுழையும் குரங்குக் கூட்டம் ஓடுகள் சீற்றுக்களையும் பயன்தரு மரங்களையும் நாசம் செய்வதுடன் விவசாய விளைநிலங்களில் பயிர் வகைகளையும் துவசம் செய்து வருகின்றன.

இதனால் விவசாயிகள் வீட்டு உரிமையாளர்கள் மிகுந்த சிரமங்களை அனுபவிப்பதுடன் வெடிகளைக் கொழுத்தி குரங்குகளை கலைத்து வருவதுடன் விவசாயிகள் விளை நிலங்களில் உள்ள பயிர் வகைகளை பகல் முழுவதும் விழிப்புடன் காவல் காத்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (150)

## நிர்வாகசபைத் தெரிவு

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த 2 ஆம் திகதி நாவலர் வீதியில் அமைந்துள்ள அதன் சைவ சமய அபிவிருத்திக்கழக அறிவக அலுவலகத்தில் நடைபெற்றது.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகசபை உறுப்பினர்கள் விபரம் வருமாறு,

தலைவர் இரா. செல்வவடிவேல், உப தலைவர்கள் சி.சோமேஸ்வரப்பிள்ளை, பா.காசிநாதன், செயலாளர் சொ.முகுந்தன், உபசெயலாளர் செல்வி.இ.வாசுகி, பொருளாளர் சி.சிவகுமாரன், பரீட்சைச் செயலரும், சமயபிரசாரகருமான சு.சிறிகாந்தன், ஆகியோருடன் நிர்வாக சபை உறுப்பினர்களாக இ.ஜெயகபில், செல்வி.த.சூரியகலா, செல்வி.ஜெ.பிருந்தாயினி, திருமதி.சு. மாதங்கி, தி.அருளம்பலம், சு.பாலசுப்பிரமணியம், நா.லோகநாதன், வி.தயாபரன், த.ஜதுர்ஷன், சி.பகீதரன், இ.தேவகுமாரன், பா.ஜெயபாலன், பா.சசிகுமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## வைத்தியசாலை வாயிலில் அமைக்கப்பட்டுள்ள நிழற்குடையின் கீழ் இளைப்பாற முடியாத அவலம்

யாழ். வைத்தியசாலை வீதியில் போதனா வைத்தியசாலைக்கு நோயாளர்களை பார்வையிடச்செல்லும் நோயாளர்களின் உறவினர்கள் வைத்தியசாலை வாயில் பகுதியில் பிரதான வீதி ஓரமாக அமைக்கப்பட்டிருக்கும் நிழற் குடையின் கீழ ஒதுங்கி நிற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நோயாளிகளைப் பார்வையிடவரும் உறவினர்கள் வைத்தியசாலை வளாகத்துக்குள் அனுமதிக்கப்படுவதற்கு முன் வீதியிலேயே நிற்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நோயாளிகளைப் பார்வையிட வருவோர் மழை, வெய்யிலிற்கு பாதுகாப்பாக தங்குவதற்கென அமைககப்பட்ட நிழற் கூடாரத்தினுள் மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டிகள் போன்ற வாகனங்கள் நிறுத்தப்படுவதால் அவர்கள் வெயயிலில் நிற்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளதாக குற்றஞ் சாட்டியுள்ளனர்.

இவ்வாறான செயற்பாடுகளைக் கருத்திற் கொண்டு நடவடிக்கை எடுப்போர் யாரென பாதிக்கப்படுவோர் கேள்வியெழுப்பியுள்ளனர். (66)

## சரணடைந்தார் சந்தேக நபர்

(துன்னாலை)

துன்னாலை கிழக்கு குடவத்தைப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் குத்திக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக தேடப்பட்டு வந்த சந்தேக நபர் கடந்த புதன்கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளார்.

சரணடைந்த சந்தேக நபரான அதே இடத்தைச் சேர்ந்த மூத்த தம்பி மாயக்கிட்டிணன் என்பவரை எதிர்வரும் 14ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 30 ஆம் திகதி இரவு கடும் வாக்குவாதத்தைத் தொடர்ந்து துரைசிங்கம் பிரசாத் (வயது 33) என்ற குடும்பஸ்தர் கொலை செயயப்பட்டார். அச்சம்பவத்தைத் தொடர்ந்து நெல்லியடிப் பொலிஸாரால் குறித்த சந்தேக நபர் தேடப்பட்டு வந்த நிலையில் பருத்தித் துறை நீதிவான் நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளார்.

## கம்பன் விழா


அகில இலங்கை கம்பன் கழகம் நடாத்தும் கம்பன் விழா நல்லூர் ஆலயச் சூழலில் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ச்சியாக மூன்று தினங்களுக்கு நடைபெறவுள்ளன.

குறித்த நிகழ்வுகள் தினமும் காலை 9 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்திலும் மாலை 5 மணிக்கு நல்லூர் ஸ்ரீதுர்க்கா தேவி மண்டபத்திலும் இடம்பெறவுள்ளதாக விழா ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது.

## வாரம் ஒரு காரம்



### உதயனின் ஊடகப் போராளி உண்மையில் யாரப்பா?



தேர்தலின் தெரிவுகள் பன்முகப்பட்டமையாலும், உண்மையின் உருவங்கள் உலகறியப்பட்டமையாலும், சில வேட்பாளர்கள் தமது செயற்பாடுகள் பிறருக்கு வேடிக்கையாகும் என்பது தெரிந்தும் கூட சில்வற்றை வேளாண்மை செய்கின்றனர். "வார்த்தை தவறிப் போக்கு மாறினாலும் வேட்பாளர் நாம் வென்றால் போதும்" எனும் நிலையில் ஏதேதோ அலம்புறார்கள்..... எங்கு போய் முடியுமோ எதுவுமே புரியவில்லை....

**"தோற்றுப் போவோமோ!.."** என்கின்ற பயம் இன்று பலரிற்கு பக்க விளம்பரங்களாக பரிமாணம் பெற்றுள்ளது. இந்த விளம்பரங்களிற்கு வரிவடிவம் கொடுத்து வடிவமைக்கும் வித்துவான்களை ஒருகணம் நாம் சந்திக்க வேண்டும். உண்மையில் இவர்கள் சிறந்த கற்பனை வாதிகள்தான். மனச்சாட்சியை கழற்றி மறுபுறம் வைத்துவிட்டு வாக்கு மாறி வரிவடிவம் கொடுப்பதற்கும் ஓர் ஆற்றல் வேண்டுமல்லவா!...

"30 வருடங்கள் ஓயாத, மாறாத, விலை போகாத, ஒரே குரலாம்,.... விடு கொடுமைகளைக் கண்டு பொங்கியெழுந்த தனித் தலைவனாம்,.... விடு தலையை மட்டும் மூச்சாகக் கொண்டவனாம்,... பேனா எனும் ஆயுதத்தால் மூன்று தசாப்தங்கள் அறப்போர் நடத்தியவனாம்,... (தியாகி திலீபன் கூட இவரின் அருகில் நிற்க முடியாது போலிருக்கு) அரசுகள் எல்லாம் கை விட்டபோதும் கூட கைகொடுத்து தூக்கிவிட்ட ஓர் தனித் தலைவனாம்,.... (வேலுப்பிள்ளையின் மகன் கூட இங்கு தோற்றுவிட்டார் போலிருக்கு) என்ன உவமை!.... என்ன உருவகம்!.... இராமனை உருவகித்த கம்பன் கூட இந்தக் கவிஞனிடம் பிச்சை எடுக்க வேண்டும். தேர்தல் முடிந்த பின்பு இவரிற்கு தேதியிட்டு விருது வழங்கவேண்டும். அது என்ன விருது தெரியுமா?... **"மனமதைக் கொன்று மையெழுதும் வித்தகன்"** இந்த வித்தகனிடம் விருதுக்காக ஒரு சில கேள்விகள்

1. உங்கள் தனித் தலைவனை எப்போது உமக்குத் தெரியும்?
2. இவர் பேனா பிடித்து அறப்போர் நடத்தியதைக் கனவில் கண்டீரா?
3. விலை போகாத நிலை மாறாத நிதர்சனங்களை நீர் கண்டீரா? சப்ரா வங்கியின் வாடிக்கையாளர்களைத் தெரியுமா?...
4. வித்தியாதரனை உமக்குத் தெரியுமா?
5. அவர் உதயனில் குப்பை கூட்டினாரா?
6. பேனா எனும் ஆயுதத்தால் மூன்று தசாப்தங்களாக நடந்த அறப்போரில் அவரிற்கு எந்தப் பங்கும் இல்லையா?
7. ஊடகப் படுகொலைக்கு உதாரணம் தேடுகின்றீரா?...
8. உண்மையைத் தவிர அனைத்தையும் பேசும் ஆற்றல் எப்படி உமக்கு வந்தது?..
9. எப்போது விருது வழங்குவோம்? இதையேனும் உங்கள் தலைவனிடம் கொடுத்து ஒரு செய்தியாக வடிவமைக்க உம்மால் முடியுமா?...
10. 'மனமதைக் கொன்று மையெழுதும் வித்தகனே" பிடிச்சிருக்கா விருதுப்பட்டம்?

பாவப்பட்ட மக்கள் சமூகமாக எமது தமிழ் சமூகம் இன்று மிளிர்கின்றது. ஆயுதமுனையில் போராடி அன்று சந்தித்த அழிவுகளை விட பலகொடுமைகள் இன்று அரங்கேறுகின்றது. ஆரோ வாழ்வதற்காக அப்பாவி மக்களின் ஜனநாயகம் பலியிடப்படுகின்றது. கொடுமையிலும் கொடுமை எது தெரியுமா? ஏமாளிகளாக வாழ்வதுதான். அந்தக் கொடுமையை அப்பாவி மக்கள் இன்று சுமந்து வாழ்கின்றனர்.

பிந்தி வந்த அரசியலிற்கும் சலாம் போட்டு, "பிரதிநிதி" என்று சிலரைச் சொல்லவைத்து மக்களை ஏமாற்றுகின்றார் ஒருவர். நாலாம் மாடியில் கூட நான் பதித்த கரங்களுண்டு என்று வேறொருவர் மக்களை ஏமாற்றுகின்றார், அன்று அடித்த வலி இன்றும் நோகிறது என்று ஒருவர் அம்புலிப்பாடம் நடத்துகின்றார். அகிம்சைப் போராட்டம் வெடிக்குமென்று அன்று ஏமாற்றியவர் இன்று சமஸ்டியென்று சத்தமிடுகின்றார். "அன்றைய போரளிகள் இன்று ஜனநாயக வழியில்" என்று மக்களின் பலவீனப்பாதையில் சென்று வெல்ல வேறொருவர் முயற்சிக்கின்றார்.

என்னையா கொடுமையிது. எதிலும் உண்மையில்லை. "ஓடும் செம் பொன்னும் ஒக்கவே நோக்கி, வீடும் வேண்டாம் விறலியரானோர்" எங்கே? மடிந்து விட்டதா மனிதம்?.... ஏமாற்றுவது தான் ஜனநாயகமா?... பதவிக்காக எதை வேண்டுமானாலும் போசலாமா?... தனித்துவம் தாற்பரியம் என்று எதுவுமேயில்லையா?...

அதுதான் அரசியல் என்றால் அப்படியொரு தலைவன் எமக்குத் தேவையா?.... அவனால் அப்பாவி மக்களின் பிரச்சனையை தீர்க்க முடியுமா?....சிந்தியுங்கள்..... **ஏமாறுவது மிகப் பெரிய தவறு?.. ஏமாற்றுவதை விட....**

## கிராமப்புற மாணவர்கள்

# வெளிநாடு சென்று கற்பதற்கு பத்து இலட்சம் வழங்கப்படும்

## மகிந்த தெரிவிப்பு



கிராமப் புறங்களைச் சேர்ந்த மாணவர்கள் வெளிநாடு சென்று கல்வி கற்பதற்கு பத்து இலட்சம் ரூபா வழங்கப்படும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உங்களது பிள்ளைகள் வெளிநாடு சென்று உயர்கல்வியைத் தொடர குறைந்த வட்டிக்கு பத்து இலட்சம் ரூபா கடன் வழங்கப்படும்.பணம் படைத்தவர்களின் பிள்ளைகள் மட்டும் வெளிநாடு சென்று கல்வி கற்கக்கூடிய சூழ்நிலையை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

கிராமங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு வெளிநாட்டில் உயர்கல்வியைத் தொடர கடன் வழங்க எமது கட்சி ஏற்கனவே தீர்மானித்துள்ளது. மாணவர்களுக்கு மட்டுமன்றி பெண்களுக்கும் நிவாரணங்களை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நிவாரணம் வழங்க எங்கிருந்து பணம் என சிலர் கேள்வி எழுப்புகின்றனர். எமது ஆட்சிக் காலத்தில் உர மானியம் வழங்குவதாக அறிவித்த போதும் இவ்வாறு கேள்வி எழுப்பப்பட்டது.

எனினும், இன்றும் 350 ரூபாவிற்கு உரம் வழங்கப்படுகின்றது என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# புகையிலைத்தூள் அடைக்கப்பட்ட 525 ரின்களை வைத்திருந்தவர் கைது



புகையிலை தூள் அடைக்கப்பட்ட 525 ரின்களை பொகவந்தலாவ - செல்வகந்தை பகுதியில் உள்ள கடை ஒன்றில் மறைத்து வைத்து விற்பனை செய்ய முயற்சித்தவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பொகவந்தலாவ பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின்படி சம்பவ இடத்திற்கு விரைந்த அவர்கள், சந்தேகநபரை விசாரணைக்குட்படுத்திய போது புகையிலைத் தூள் அடைக்கப்பட்ட 525 ரின்கள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது மாணவர்களுக்கு அதிகளவாக விற்பனை செய்யப்படுகின்றது என ஆரம்பகட்ட விசாரணையின்போது தெரியவந்துள்ளது. இது தடை செய்யப்பட்ட போதைப்பொருள் என்பது குறிப்பிடத்தக்கது.

கைதான சந்தேகநபரை ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் எடுத்திருப்பதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

# ஐக்கிய தேசியக்கட்கி என்னை ஏமாற்றிவிட்டது

## குற்றம் சுமத்துகிறார் பாரூக்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி தமக்கு வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றவில்லை என்று வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் குற்றம் சுமத்தியுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அவர், ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்தார். இதன்போது தமக்கு பல உறுதிமொழிகள் வழங்கப்பட்டபோதும் அவை நிறைவேற்றப்படவில்லை.

எனவே தாம் ஏமாற்றப்பட்டு விட்டதாக வன்னி மக்கள் உணர்கின்றனர் என்று பாரூக் தெரிவித்துள்ளார்.

தாம் ஏற்கனவே இணைந்திருந்த அமைச்சர் ரிசாத் பதியுதீனின் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்த பின்னர். தாம் ஓரங்கட்டப்பட்டதாக பாரூக் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் தமக்கு வன்னி மாவட்ட வேட்பாளர் நிலையையும் ஐக்கிய தேசியக் கட்சி வழங்கவில்லை என்று அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# இன்றும் தபால் மூலம் வாக்களிக்கலாம்

தபால் மூல வாக்களிப்பு இடம்பெற்ற மூன்று, நான்கு மற்றும் ஐந்தாம் திகதிகளில் வாக்களிக்க முடியாது போன வாக்காளர்கள் இன்று தபால் மூலம் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவிக்கின்றது.

வாக்காளர்கள் தமது மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி அலுவலகத்திற்குச் சென்று இன்றைய தினம் தபால் மூலம் வாக்களிக்க முடியும் என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம் எம்.மொஹமட் குறிப்பிட்டுள்ளார்.

# பாதுகாப்புத் தலைமையக நிர்மாணம் நிதி மோசடி தொடர்பில் விசாரணை

## ராஜித சேனாரத்ன தெரிவிப்பு



(கொழும்பு)

பத்தரமுல்லையில் அமைக்கப்பட்டு வரும் பாதுகாப்புத் தலைமையக நிர்மாணப் பணிகளில் பாரிய நிதி மோசடி இடம்பெற்றிருக்கலாம் எனவும் இது குறித்து விசாரணை நடாத்துவதற்கு அமைச்சரவை தீர்மானம் மேற்கொண்டுள்ளதாகவும் அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன குறிப்பிடுகின்றார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை வெளிப்படுத்தும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். குறித்த செய்தியாளர் சந்திப்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

'பத்தரமுல்லை, அக்குரேகொட பிரதேசத்தில் அமைக்கப்பட்டு வரும் பாதுகாப்புப் படை தலைமையக கட்டுமான வேலைத்திட்டம் தொடர்பில் பரிசீலனை செய்து அறிக்கை ஒன்றை சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவை மூலம் அதிகாரிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. குறித்த வேலைத் திட்டம் தொடர்பில் ஆலோசனை வழங்கவென நியமிக்கப்பட்டுள்ள நிறுவனம் தொர்டர்பில் அமைச்சரவையின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய, கேள்வி மனுக்கோரல் இன்றி குறித்த நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளமை, ஆலோசனை சேவையை வழங்கவென தெரிவு செய்யப்பட்ட பின்னரே குறித்த நிறுவனம் பதிவு செய்யப்பட்டுள்ளமை. பொறுப்பான அதிகாரிகள் மூலம் குறித்த நிறுவனத்திடம் இருந்து சேவை ஒன்றைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் எவ்வித ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடாமை குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், முழு வேலைத்திட்டம் தொடர்பில் ஆலோசனை வழங்கவென குறித்த நிறுவனத்திற்கு 606.032 மில்லியன் ரூபா செலுத்துவதாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதுடன், 2மே மாதம் 31 ஆம் திகதி வரை குறித்த நிறுவனத்திற்கு 83 வீதமான பணம் அதாவது 509.926 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளது.

எனினும் இது வரை குறித்த வேலைத்திட்டத்தில் 30.02 சதவீதமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

இவ்விடயங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கும் குறித்த விசாரணையின் அடிப்படையில் சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அமைச்சரவை தீர்மானம் மேற்கொண்டுள்ளது.' என்றும் கூறினார்.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



சில்வேஸ்திரி அலென்ரின்

(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)



X 8

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# கிழக்கு மாகாணத்திற்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடு

## தேர்தல்கள் ஆணையாளர் பணிப்புரை

(கொழும்பு

கிழக்கு மாகாணத்திற்கு விசேட பாதுகாப்பு வழங்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய பணிப்புரை வழங்கியுள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்று முடியும் வரையில் கிழக்கு மாகாணத்திற்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென தேர்தல்கள் ஆணையாளர், பொலிஸ் மா அதிபர் என்.கே. இளங்கக்கோனுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் மற்றும் தேர்தல் அதிகாரிகளினால் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் குழப்பம் விளைவித்த சம்பவமும் இவ்வாறு பணிப்புரை விடுக்க ஏதுவாகியது என தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் தொடர்பில் பாரதூரமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல்கள் ஆணை



யாளர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகள் வெளியிடப்படும் வரையில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளார்.

36. தற்போது மின்குமிழ்களில் மின்குமிழ்களுக்கு பதிலாக பயன்படுத்தும் சாதனம் எது?
1) LED விளக்கு 2) இழை விளக்கு 3) MID விளக்கு 4) சக்தி சேமிப்பு விளக்கு

37. தீக்காயம் ஏற்பட்டால் அதன் மீது பூசப்படுத்தும் மூலிகைத் தாவரத்தின் உள்ளீடு எது?
1) கற்றாளை 2) ஆமணக்கு 3) தில்லை 4) அனல் அடக்கி

(07) கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்க

01. இங்கிலாந்தின் நேரம் இலங்கையின் நேரத்திலும் பார்க்க 6 மணித்தியாலங்கள் அதிகமாகும். தினந்தோறும் 5 நிமிடங்கள் பிந்திக்காட்டும் இக்கடிகாரம் பி.ப 4.15 ஐக் காட்டும் போது இங்கிலாந்தின் நேரம் என்ன?
..............................................................................................

02. ஓர் இனிப்புப் பானப்போத்தல் 6 பேரை உபசரிக்கப் போதுமானது 19 பேரை உபசரிக்க எத்தனை குளிர்பானப் போத்தல் தேவை?
..............................................................................................

03. ஒருவருக்கு 6 பென்சில்கள் வீதம் 450 பென்சில்களை எத்தனை பேருக்கு கொடுக்கலாம்? மீதிப் பென்சில்கள் எத்தனை?
..............................................................................................

04. 1kg பூசணிக்காய் ரூபா 60.00 எனில், 1kg 750g நிறையுள்ள பூசணிக்காயின் விலை எவ்வளவு?
..............................................................................................

05. ஒரு நகரிலிருந்து 4 பேர் இன்னொரு நகருக்குச் சென்றனர். இவர்கள் பயணத்திற்காக செலவிட்ட மொத்த நேரம் 4 மணித்தியாலங்கள் 20 நிமிடங்கள் எனின், ஒருவர் அத்தூரத்திற்கு பயணம் செய்ய எவ்வளவு நேரத்தை செலவிட்டு இருப்பார்?
..............................................................................................

06. ஒரு வியாபாரியிடம் 60 பப்பாசிப் பழங்கள் இருந்தன அவற்றில் 2/8 பங்கு பழங்கள் பழுதடைந்து விட்டன வியாபாரியிடமிருந்த மீதிப்பழங்கள் எத்தனை?
..............................................................................................

07. இரு எண்களை பெருக்கும் போது 52 விடைவரும் அந்த இரு எண்களையும் கூட்டும் போது 17 வரும் இரு எண்களுக்கு இடையிலான வித்தியாசம் 9 ஆயின் அந்த இரு எண்களும் எவை?
..............................................................................................

(08) மணி தான் கண்ட கனவு பற்றி என் நண்பிகளிடம் பின்வருமாறு கூறத்தொடங்கினாள். நேற்றிரவு கண்ட கனவில் நான் ஒரு வைத்தியராக படித்து ஒரு கிராமத்திற்கு வைத்தியம் செய்யச் சென்றேன் அப்பொழுது ......

அவள் நிறுத்திய இடத்திலிருந்து நீங்கள் ஆக்கபூர்வமான ஆறு வாக்கியங்கள் எழுதுங்கள் (ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்களேனும் இடம்பெற வேண்டும் இவ்வாக்கியங்களின் இலக்கணத் தொடர்பு சரியாக இருக்க வேண்டும்)

01. ..............................................................................................
02. ..............................................................................................
03. ..............................................................................................
04 ..............................................................................................
05 ..............................................................................................
06 ..............................................................................................

நேற்று பிரசுரமாகிய க.பொ.த (உ/த) வினாக்களுக்கான விடைகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிரசுரமாகும்

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



**தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி - 2015**

பகுதி - II
1 மணி 15 நிமிடம்

# கல்வி முரசு



எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

(01) பின்வரும் பாடலை வாசியுங்கள்

மீன்கள் கோடி கோடி சூழ வெண்ணிலாவே ஒரு
வெள்ளி ஓடம் போல வரும் வெண்ணிலாவே....
வான வெங்கதிர் குளிக்கும் வெண்ணிலாவே நித்தம்
பாற்கடலும் ஆடுவையோ வெண்ணிலாவே

பந்தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே - நீயும்
பாரில் வர அஞ்சினையோ வெண்ணிலாவே...
பளிங்கு போலும் உன்னுருவில் வெண்ணிலாவே - கறை
பற்றியே இருப்பதேனோ வெண்ணிலாவே

பறக்கச் சிறகிருந்தால் வெண்ணிலாவே - உந்தன்
பக்கம் வந்து சேருவேனோ வெண்ணிலாவே....
பால் போல் நிலவெறிக்கும் வெண்ணிலாவே - என்றன்
பாங்கில் விளையாட வாராய் வெண்ணிலாவே

01. இப்பாடலில் கவிஞர் விபரிக்கும் காட்சியை எழுதுக? ..............................
02. இப்பாடலில் எழுவாயாகவும், பயனிலையாகவும் வரும் சொல் எது? ..............................
03. நிலாவுக்கு உவமையை குறிப்பிட்ட உவமைச் சொற்கள் மூன்று தருக? ..............................
04. இப்பாடலில் வரும் பெறுமதி மிக்க உலோகம் ஒன்றின் பெயரைத் தருக? ..............................
05. பந்தடிப்போம் எனும் சொல்லை பிரித்து எழுதுக? ..............................
06. இப்பாடலிலுள்ள உயர்திணை, ஒருமை, முன்னிலை சொல் ஒன்று தருக ..............................
07. வானில் வெண்ணிலா எப்படி பவனி வருவதாக கவிஞர் விபரிக்கின்றார்? ..............................

(02) ஒழுங்கின்றி காணப்படும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுங்கள்

01. விரைந்து / சத்துள்ள / சென்றிடுவோம் / நாம் / சந்தைக்குச் / பழங்கள் / வாங்கிடுவோம்
..............................................................................................

02. வீட்டையும் / வைத்திருங்கள் / நீங்கள் / உங்களது / தூய்மையாக / சூழலையும் / வாழும்
..............................................................................................

(03) பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுங்கள்

01. தயவு செய்து அமருங்கள் ..............................
02. எனக்கு பசிக்கின்றது ..............................
03. நத்தார் வாழ்த்துக்கள் ..............................
04. கையை மேலே உயர்த்துங்கள் ..............................

(03) வாக்கியங்களின் உரிய இடத்தில் நிறுத்தல் குறிகளை இடுங்கள்

01. பூனையும் நாயும் ஒன்றையொன்று சந்திக்கும் போது சண்டையிடும்
02. சென்ற மாதம் வானொலியில் ஒலிபரப்பப்பட்ட அன்பளிப்பு எனும் நாடகத்திற்கு முதல்பரிசு கிடைத்தது

(04) பின்வரும் சிங்கள வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுங்கள்

01. ஓயாகே கம கொஹெ (Dh) த? ..............................

02. மம கிஹிங் என்னம் ........................................

**(05) பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழில் எழுதுக**

01. தேநீர் குடியுங்கள் ........................................

02. மீண்டும் வாருங்கள் ........................................

**(06) 01 தொடக்கம் 37 வரையுள்ள வினாக்களுக்கு மிகவும் சரியான விடையின் கீழ் கோடிடுக**

01. நள்ளிரவு வேளையில் பூக்கும் தாவரம் எது?
1) குறிஞ்சி 2) நீராம்பல் 3) வாடாமல்லிகை 4) தாழை

02. வானத்தில் மிக உயரத்தில் பறக்கும் பறவை எது?
1) ஆட்காட்டி 2) புறா 3) கடற்காகம் 4) கழுகு

03. ஆபத்து வேளையில் தாய்ப்பூனை குட்டிகளை தூக்கிச் செல்லும் இடம் எது?
1) காதுகள் 2) கழுத்து 3) தலை 4) முதுகு

04. வண்ணத்துப்பூச்சியின் குடம்பிப்பருவம் எவ்வாறு அழைக்கப்படும்?
1) கீலம் 2) குடம்பி 3) மயிர்க்கொட்டி 4) புழு

05. இயற்கை நார் / நூல் வகைகளில் மிகவும் வலிமையான பட்டுநூல் எதிலிருந்து பெறப்படும்?
1) பட்டுப்புழு 2) கூட்டுப்புழு 3) பட்டுப்பூச்சி 4) பட்டுப்பூச்சியின் வாய்

06. வீட்டுக்கூரைகளில் காணப்படும் பல்லியின் முட்டை நிறம் என்ன?
1) இளம்மஞ்சள் 2) சிவப்பு 3) கபிலம் 4) வெள்ளை

07. அபயவாவி (பசவக்குளத்தை) அமைத்த மன்னன் யார்?
1) மகாசேனன் 2) 1ஆம் அக்போ 3) பண்டுகாபயன் 4) தாதுசேனன்

08. பதிவுத்தபாலில் கடிதமொன்றை அனுப்புவதற்கு ஒட்ட வேண்டிய முத்திரையின் பெறுமதி எவ்வளவு?
1) ரூபா 18 2) ரூபா 20 3) ரூபா 30 4) ரூபா 40

09. சாதாரண கடிதம் ஒன்றினை கடித உறையினை ஒட்டாது அனுப்புவதற்கு ஒட்டவேண்டிய முத்திரையின் பெறுமதி எவ்வளவு?
1) ரூபா 4.00 2) ரூபா 4.50 3) ரூபா 5.00 4) ரூபா 6.00

10. கிராமப்புற விவசாயிகள் நெல் தானியங்களை தூற்றுவதற்கு முக்கோண வடிவில் அமைக்கும் உபகரணத்தின் பெயர் எது?
1) ஏத்து 2) அவுரி 3) பரண் 4) முக்காலி

11. கிராமப்புற வீடுகளில் காணப்படும் குப்பிவிளக்குகளின் விளக்குத்திரியை தயாரிக்கப் பொருத்தமான துணிவகை எது?
1) பட்டுத்துணி 2) நைலோன் துணி 3) பருத்தித்துணி 4) டெக்ரின்துணி

12. புத்தகங்கள், மருந்துச்சீட்டு போன்றவற்றிலுள்ள மிகச்சிறிய எழுத்துக்களை பெரிதாக்கி வாசிக்க மிக உகந்த கருவி எது?
1) அரிய இருவிழியன் 2) கைவில்லை 3) நுணுக்குக்காட்டி 4) குழிவாடி

13. இரவு வேளையில் மரங்களில் மீது பாதுகாப்பாக தங்கியிருக்கும் முலையூட்டி எது?
1) பல்லி 2) கொக்கு 3) மந்தி 4) ஆட்காட்டி

14. கிராமிய மாணவர்கள் விளையாட்டுக்குப் பயன்படுத்தாத வித்து எது?
1) புளி 2) மரமுந்திரி 3) கடல்மாங்காய் 4) பூசணி

15. எமது தேசியக்கொடியிலுள்ள வாளேந்திய சிங்கம் எந்த் நிறத்தில் காணப்படும்
1) கபிலம் 2) சிவப்பு 3) மஞ்சள் 4) கறுப்பு

16. மின்சார வசதியில்லாத கிராமப்புற மக்கள் எலுமிச்சம்பழத்தை சில காலம் பழுதடையாது பாதுகாக்க பயன்படுத்தும் உத்தி எது?
1) ஈரமண்ணினுள் புதைத்து வைத்தல் 2) குளிர்சாதனப் பெட்டியினுள்ளே வைத்தல்
3) காற்றோட்டமுள்ள இடத்தில் வைத்தல் 4) சட்னி, ஊறுகாய் என தயாரித்தல்

17. இலங்கை, இந்தியாவுக்கு எந்தத்திசையில் அமைந்துள்ளது?
1) வடக்கு 2) தெற்கு 3) கிழக்கு 4) வாயுமூலை



18. சகல சௌபாக்கியங்களையும் கொண்ட தன்னிறைவான இந்நாட்டில் சூரியனும், சந்திரனும் நிலைத்திருக்கும் காலமெல்லாம் தார்மீகத்தைக் காத்தவாறு நாட்டுமக்கள் யாவரும் இருப்பார்கள் எனும் கருத்தை விளக்குவது எது?
1) தேசியகீதம் 2) தேசியக்கொடி 3) தேசிய இலட்சினை 4) பௌத்த கொடி

19. மாடுரெண்டும் மாவெள்ளை, மணிகரெண்டும் தஞ்சாவூரு ..... எனும் பாடல் எச்சந்தர்ப்பத்தில் பாடப்படும்?
1) வயல்உழுதல் 2) வண்டில் ஓட்டுதல் 3) சூடுமிதித்தல் 4) அரிவுவெட்டல்

20. ஊனுண்ணும் பிராணி பின்வருவனவற்றுள் எது?
1) அணில் 2) மீன்கொத்தி 3) மான் 4) யானை

21. நுளம்புகள் மூலம் மனிதனுக்கு பரவாத ஓர் நோய் எது?
1) கொப்பளிப்பான் 2) டெங்கு 3) மலேரியா 4) யானைக்கால்

22. வானில் மிக உயரப் பறக்கும் பறவைகளில் ஒன்று
1) கொக்கு 2) மீன்கொத்தி 3) நீர்க்காகம் 4) பருந்து

23. பொதி செய்யப்பட்ட பொருட்களின் தரத்தை எதன் மூலம் கண்டறியலாம்?
1) SLS இலச்சினை 2) MMS இலச்சினை 3) RRP இலச்சினை 4) DMI இலச்சினை

24. ஆபத்து வேளையில் எதிரிகளிடம் இருந்து தப்பித்துக்கொள்ள தன் வாலை கழற்றி விட்டுச் செல்லும் பிராணி எது?
1) ஓணான் 2) எலி 3) அறணை 4) உடும்பு

25. உடற்பயிற்சி செய்த பின்னர் உடனடியாக செய்யக் கூடாதது எது?
1) வயிறு நிறைய நீர் குடித்தல் 2) எளிய உடற்பயிற்சி செய்தல்
3) சிறிது நேரம் ஓய்வெடுத்தல் 4) சிறிது நேரம் தியானம் செய்தல்

26. இளம் பருவத்தில் பால் குடித்து வளரும் பிராணி எது?
1) முதலை 2) வெள்வால் 3) இராட்சத பல்லி 4) ஓணான்

27. கண்களைத் திருப்பாது தலையை திருப்பிச் சுற்றும் முற்றும் பார்க்கும் பிராணி எது?
1) குரங்கு 2) காகம் 3) மான் 4) நாய்

28. கிராமப்புற மக்கள் மயில் முட்டைகளை அடைகாக்க பயன்படுத்தும் பறவை எது?
1) தாரா 2) வாத்து 3) கினிக்கோழி 4) கோழி

29. மரங்களின் வித்துக்களை தூர இடத்திற்கு கொண்டு சென்று பரம்பலடைய உதவும் பிராணி எது?
1) குரங்கு 2) யானை 3) வௌவால் 4) அணில்

30. இலங்கைக்கே மட்டுமே உரித்தான பறவை எது?
1) குந்துகாலி (புலுணிக்குருவி) 2) கரிக்குருவி
3) வான் கோழி 4) ஆட்காட்டிக்குருவி

31. இலங்கையிலுள்ள மிகவும் உயரமான செயற்கை நீர்வீழ்ச்சி எது?
1) பம்பரகந்த 2) விக்டோரியா 3) துன்கிந்த 4) டயகம


32. பொதுவாக சந்திரகிரகணம் தோன்றும் தினம் எது?
1) அமாவாசை 2) பூரணை 3) அட்டமி 4) நவமி

33. கடையில் வாங்கும் தேயிலை தரமானவையா, என எவ்வாறு கண்டு பிடிக்கலாம்?
1) சுவைத்துப் பார்த்தல் 2) முகர்ந்து பார்த்தல்
3) நீரினுள் இட்டு நிறமாற்றத்தைப் பார்த்தல்
4) தேயிலை பொதியை பரிசோதித்தல்

34. கடையில் உணவுப்பண்டங்களை கொள்வனவு செய்யும் போது அவசியமாக அவதானிக்க வேண்டியது
1) பண்டத்தின் நிறை 2) உற்பத்தித்திகதி
3) பொருளின் விலை 4) காலாவதியாகும் திகதி


35. வீடுகளின் மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்தவும், குறைந்த செலவில் ஒளியூட்டவும் பொருந்த வேண்டிய மின்விளக்கு எது?
1) புளொரொளிர்வு விளக்கு 2) CFL மின்விளக்கு
3) இழைமின்விளக்கு 4) மின்குள் மின்குமிழ்

# தேர்தல் களம் 2015



## இன மத பேதங்களற்ற வாழ்வியல் சூழலை உருவாக்குவதே எமது நோக்கம்

### பொம்மைவெளியில் அமைப்பாளர் கா.வே.குகேந்திரன்





மனித உணர்வுகளையும் அவர கள் சார்ந்த தேவைகளையும் சூழ்நிலைக்கேற்ப பெற்றுக் கொடுத்து அதனூடாக இன மத பேதங்க ளற்ற ஒரு தேசத்தை கட்டியெ ழுப்பும் பரந்து பட்ட சேவையையே ஈழ மக்கள் ஜனநாயக கட்சி இன்று வரை செய்து வருகின்றது. கடந்த காலத்தில் யாழ். குடாவிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களது வாழ்வையும் வழமாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் அன்று தில்லையடிப்பகுதியில் நிர்க்கதியாக் நின்ற முஸ்லிம் மக்களுக்கு காணிகள், வீடுகள், வாழ்வியலுக்கான தேவைகள் அனைத்தையும் பெற்றுக் கொடுத்ததுடன் •இன்று யாழ்.குடா நாட்டில் மீள்குடியமர்ந்துள்ள எமது சகோதரர்களான் முஸ் லிம் மக்களுக்கான அனைத்து தேவைகளையும் தொடர்ந்து பெற்றுக்கொடுத்து அவர்களது வாழ்வியலை மேம்படுத்தியும் வருகின்றோம். - என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் யாழ் மாவட்ட பிரதம அமைப்பாளரு மான கா.வே.குகேந்திரன் (வி.கே. ஜெகன்) தெரிவித்துள்ளார்.

யாழ்.பொம்மைவெளிப்பகுதி யில் தேர்தல் பிரசாரத்தில் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே அமைப்பாளர் கா.வே.குகேந்திரன் (வி.கே. ஜெகன்) தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

தனிநபரது வாழ்வியல் மேம் பாடுகளூடாகவே இனிவரும் காலத் தில் மக்களது தேவைகளை முழு அளவில் பூர்த்தி செய்து கொள்ள முடியும். நீண்ட காலமாக வடக்கின் வேதனை களை தெற்கு இரசித்துக் கொண்டு தான் இருக்கின்றது. இதனை மாற்றியமைக்க வேண்டுமானால் சிறுபான்மையின மக்கள் மத்தி யில் ஒரு புரிந்துணர்வுடனான ஐக் கியப்பாடு உருவாக வேண்டும்.

ஒற்றுமையாக இருந்த தமிழ், முஸ்லிம் மக்களை அரசியல் இலாபத்திற்காக முரண்பட வைத்து அதனூடாக எமது இனங்களின் அரசியல் வாதிகள் தமது சுய நல அரசியலை நீண்டகாலமாக மேற்கொண்டு வருகின்றனர், இதனைச் சாதகமாகப் பயன் படுத்தி வரும் இலங்கை அரசு சிறு பான்மையின மக்களது தேவை களையும் அபிவிருத்திகளையும் உரிமைகளையும் முடக்கி வருவது தான் கடந்தகால வரலாறு.

பேதங்களற்ற ஒரு சமுதா யத்தை உருவாக்குவதனூடாகத் தான் எதிர்கால சந்ததியினரை வன்முறைகளற்ற புதிய விடிய லுக்கான ஒரு சமுதாயமாக உருவாக்கிக்கொள்ள முடியும். உறவுகளாக இருக்கும்போது மற்றவர்களது உணர்வுகள் தெரி வதில்லை. ஆனால் அவ் உறவு கள் பிரிவடைந்துசெல்லும் போது தான் அவர்களது உணர்வுகள் வெளிப்படுகின்றது. வேதனை யோடு குடாநாட்டைவிட்டு வெளி யேற்றப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு கரங்களைக் கொடுத்து தூக்கி விட்டவர்கள்தான் நாங்கள் செயலா ளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா இன மத பேதமற்ற ஒரு அரசி யல் பாதை யில் தான் பயணித் துக் கொண்டிருக்கின்றார். அதன் வெளிப்பாடாகத்தான் குடாநாட் டில் தமிழ் முஸ்லிம் மக்களது வாழ வியலில் பேதங்களற்ற முறை யில் அபிவிருத்திகளையும் வாழ் வாதார உதவிகளையும் மேற் கொண்டு வருகின்றார்.

இறையாண்மையுள்ள இலங் கையில் பேதங்களற்ற மனித நேயத்துடனான ஒரு வாழ்வியல் சூழலை உருவாக்கி அதனூடாக ஐக்கியமான ஒரு அரசில் உரிமை யுடன் அனைவரும் வாழ வேண் டும் என்பதே எமது விருப்பமாக வுள்ளது. அதனால் தான் நாங் கள் எமது வீணைச்சின்னத்துடன் மக்களாகிய உங்களிடம் இம் முறை வந்துள்ளோம். மத்தி யுடன் பேரம்பேசக்கூடிய அரசி யல் அதிகாரத்தை தமிழ், முஸ் லிம் மக்கள் என்ற பாகுபாடுகள் அற்ற வகையில் எமக்கு வழங்கு வீர்கள் என நம்புகிறோம்.

அவ்வாறு ஒரு மாற்றம் ஏற் படும்போதுதான் வரும் அரசி யல் பருவகாலத்திலாவது நாம் அனைவரும் தன்னிறைவடைந்து உரிமைகளுடன் வாழ்வதற்கு வழிவகை அமைக்கமுடியும்.

## மக்கள் நலன்களை புறக்கணித்தே தமிழ்க் கூட்டமைப்பு செயற்படுகின்றது

### ஈ.பி.டி.பி.யின் வேட்பாளர் செல்வவடிவேல்



60 ஆண்டுகள் தமிழ் இளை ஞர்களை பலிகடாவாக்கி தாங் கள் மட்டும் சுகபோகங்களை அனுபவிக்கின்றார்கள் தமிழத் தேசியக் கூட்டமைப்பினர் என சொல்லின் செல்வர் இரா. செல்வ வடிவேல் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை கிளி நொச்சி மாவட்டத்தில் நடை பெற்ற தேர்தல் பிரசாரக் கூட் டத்தின் போது பூநகரி, முட்கொம் பன், இரணைமாநகர், நாச்சிக் குடா, ஸ்கந்தபுரம், ஜெயபுரம், ஊரியான் ஆகிய கிராமங்களி லுள்ள மக்களைச் சந்தித்த போது இந்த விடயத்தினை அங்கிருந்த இளைஞர்களிடையே சுட்டிக் காட்டினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது, இன்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தவிர்ந்த எந்த நாடாளுமன்ற உறுப்பினர் இளைஞர்களுக்கு சுபீட்சமான வாழ்க்கை வாழ வழி சமைத்தனர்

இங்கு படித்த பல இளை ஞர்கள் வேலை வாய்ப் பின்றி இருப்பதனைப் பார்க்கும் போது நெஞ்சு பதறுகிறது. உங் கள் வீட்டில் உலை வைக்க வில்லை. ஆனால் தமிழ்த் தேசி யககூட்டமைப்பும் தமிழ்த் தேசிய் மக்கள் முன்னணியும் மாறி மாறி ஒருவரையொருவர் குறை கூறு கின்றார்களே அன்றி மக்களுக்கோ அல்லது இந்த தமிழ் சமூகத்தின் முதுகெலும்பாக உள்ள இளைஞர்களுக்கோ ஏதேனும் செய்வதற்கு விரும்புகின்றார் களா? தமிழ் இளைஞர்களை மீண்டும் ஒரு சிக்கலுக்குள் தள்ளி அதன் மூலம் தாங்கள் சுக போகங்களை அனுபவிக்க முயல் கின்றார்கள். 2009 ஆம் ஆண் டுக்குப் பின் இந்தக் கிராமங்கள் யாவும் எவ்வாறு மாற வேண்டி யவை? மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ள நிலை போக்கப பட வேண்டும். நகரம் மட்டும் அபி விருத்தியடைந்தால் போதாது. கிராமங்கள் அபிவிருத்தியடைய வேண்டும். மக்கள் வரிப்பணம் மக்களுக்கே பயன் பட வேண்டும் .

இந்தப் பகுதி மக்களுடைய குடிசைக் கைத்தொழில்கள் மேம்படுத்தப்படும் குடிசைக் கைத் தொழில் கிராமம் ஒன்று அடை யாளங்காணபபட்டு தகுந்த நட வடிக்கை எடுக்கப்பட்டு அங்கு செய்யப்படுகின்ற உற்பத்திப் பொருட்கள் யாவும் நகரங்களில் காட்சிப்படுத்தப்படும். சரியான விலைக்கு அவை சந்தைப்படுத் தப்படும். கிராமங்கள் யாவும் கைத்தொழில் அபிவிருத்தி மூலம் மேலும் வள்ம்பெறவும் மக் களின் வறுமை நிலை மாறவும் உங்கள் ஆதரவினை ஈ.பி.டி.பி.யின் வீணைச் சின்னத்திற்கு வாக்களிப்பதன் மூலம் அரசியல் பேரெழுச்சியினைத் தாருங்கள் எனக் கேட்டுக் கொண் டார்.


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



சிவகுரு பாலகிருஷ்ணன்

(ஈ.பி.டி.பி. வலிகாமம் மேற்கு இணைப்பாளர்)



9

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)


## தேர்தலுக்காக மக்களிடம் செல்பவர்கள் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் அல்ல

### வேட்பாளர் சில்வேஸ்திரி அலன்ரின் தெரிவிப்பு

தேர்தல் காலங்களில் மட்டும் பிரசின்னமாகி மக்களின் வாக் குக்காக கிராமங்களில் கால்பதிப பவர்கள் ஈழமக்கள் ஜனநாய கக் கட்சியினர் அல்ல. மாறாக கிடைக்கப்பெற்ற ஆசனங்களைப் பயன்படுத்தி மக்களின் அன் றாடீப்பிரச்சினைகள் தொட்டு உரிமைப் பிரச்சினை வரை தீர்ப் பதற்கு நடைமுறைச் சாத்தியமான வழியில் சென்று தமிழ் மக்களின வாழ்வினை உயர்த்தியவர்களே ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி யினராகிய நாம் என ஈ.பி.டி.பி. யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன் ரின் உதயன் தெரிவித்தார்.


நேற்று முன்தினம் புங்குடு தீவு மக்களினை சந்தித்து கலந்துரையாடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் உரையாற்று கையில் கிடைக்கப்பெற்ற அதி காரங்களைப் பயன்படுத்தி மக் களிற்கு சேவை செய்தவர்கள் இனிவரும் காலங்களிலும் மக்களிற்காய் அர்ப்பணிப்புடன் செயற்படக்கூடியவர்களை தெரிவு செய்வதனூடாக தமிழ் மக்கள் சுயகௌரவத்துடனும் தன்னி றைவு பொருளாதாரத்துடனும் வாழ முடியும் எனத் .தெரிவித் ததுடன் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வீணைச்சின்னத்திற்கு வாக்களிப்பதனூடாக மக்கள் பலத்தில் எ்மது சேவை தொடரு மெனத்தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வேலணை ஈபிடிபி அமைப்பாளரும் வேலணை முன்னாள் பிரதேசசபை தவிசா ளருமான சிவராசா போல் மற் றும் பிரதேசசபை உறுப்பினர் களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண் டனர்.


# நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015

## வன்னி தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் ஈ.பி.டி.பி. வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்வோம்!





X





அன்ரனி அருள்ராஜசேகர்
(சாந்தன்)
மாவட்ட இணைப்பாளர் வவுனியா

1




அ.ஜெயராஜ்

2



அந்தோனிமுத்து அனஸ்ரின்

3



குலசிங்கம் திலீபன்
முதன்மை வேட்பாளர்

4




பொ.குணபாலா

5



சுப்பையா சந்துரு

8



விஜயரட்ணம் சுரேந்தர்
(சுரேன்)

6



செ.ஸ்ரீராமச்சந்திரதாஸ்

9



சுந்தரம் குமாரசாமி

7

## ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

## 6 மாகாண...

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து நீக்கியுள்ளதாக, அதன் பொதுச்செயலர் சுசில் பிரேமஜெயந்த அறிவித்துள்ளார். தென் மாகாணசபை உறுப்பினர் அந்தோனிகே ஹேவா பியசேன, ஊவா மாகாணசபை உறுப்பினர்களான வடிவேல் சுரேஸ், ஹரீந்திர தர்மதாச பண்டா, மேல்மாகாணசபை உறுப்பினர்களான ஹிருணிகா பிரேமச்சந்திர, நிசாந்த சிறிவர்ணசிங்க, நிரோஷா அத்துகோரள ஆகிய நால்வருமே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களின் மாகாணசபை உறுப்பினர் பதவியை நீக்குவது தொடர்பான கடிதம் தேர்தல்கள் ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்படும் என்றும் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்துள்ளார்.

இவர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர்களாக மாகாணசபையில் இருக்க முடியாது என்றும் இவர்களுக்குப் பதிலாக அடுத்த நிலையில் உள்ளவர்கள் நியமிக்கப்படுவர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதற்கிடையே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தை கூட்டுவதற்கான தடையை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நீடித்துள்ளது. எதிர்வரும் 24 ஆம் திகதி வரை இந்த தடை நடைமுறையில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## பொருத்த...

தெரிவித்தார். கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றைய தினம் அமைச்சர் மகிந்த சமரசிங்க எழுதிய இரண்டு நூல்களின் வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி, நாடாளுமன்றத்தின் நற்பெயரை மதித்து பாதுகாக்கின்ற நாட்டுக்காக பணி செய்யக்கூடிய மிகப் பொருத்தமான வேட்பாளர்களை மட்டுமே தேர்தலில் தெரிவுசெய்ய வேண்டும்.

மக்கள் தங்களது அறிவு, புத்திக்கூர்மை மற்றும் வேட்பாளர்கள் தொடர்பான முன் அனுபவங்களை வைத்து இந்த தெரிவை மேற்கொள்ள வேண்டும். அரசியல்வாதிகள் மக்களுக்கான தங்களது கடமைப் பொறுப்புக்களை முறையாக நிறைவேற்றாத காரணத்தினால் அவர்களது நன்மதிப்புக்கு களங்கம் ஏற்பட்டிருக்கின்றது. அரசியல்வாதிகள், அரசாங்க ஊழியர்கள் மற்றும் இராஜதந்திரிகள், அவர்களது பதவிகளின் கடமைப் பொறுப்புக்களை ஏற்கின்றபோது மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு அவர்கள் எப்பொழுதும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்றார்.

## கூட்டமைப்பு...

நேற்று முன்தினம் புங்குடுதீவில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக சென்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வட மாகாணசபை உறுப்பினர் கஜதீபன் தலைமையிலான குண்டர்கள் அங்கு மதுபானங்களை வழங்கியும், வாள்வெட்டுச் சண்டியர்களை வைத்துக் கொண்டும் மக்களை மிரட்டியுள்ளனர்.

பெரும்பாலும் தீவகத்தில் மக்கள் ஈ.பி.டி.பியின் ஆதரவாளர்களாகவே இருந்துவருவதால் எமது மக்களை மிரட்டுகின்ற பாணியில் நடந்து கொண்டுள்ளனர். அதேவேளை அமைதியாக தேர்தல் பணிகளில் ஈடுபட்டுவரும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களை வம்புக்கு இழுத்து எம்மீது அவதூறு பரப்பும் உள்நோக்கத்தோடும் இவர்கள் செயற்பட்டுள்ளனர்.

ஜனநாயகத்தையும், மக்களின் இயல்பு வாழ்வையும் மதித்து நடக்கின்றவர்கள் நாம் என்ற வகையில், எவருடைய வம்புக்கிழுப்புக்கும், தூண்டலுக்கும் எடுபடப்போவதில்லை. அவர்களுக்கிடையேயான முரண்பாடுகளையும், தோல்வி அச்சத்தையும் மூடி மறைப்பதற்கே இவர்கள் ஈ.பி.டி.பி. மீது சேறு பூசத் துடிக்கின்றனர்.

எனவே இதுவரை மக்களை ஏமாற்றிவந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு இம்முறை சரியான பாடத்தை புகட்டவேண்டுமென்ற உறுதியோடு எமது மக்கள் இருக்கின்றனர். மக்கள் விரும்பும் மாற்றம் ஈ.பி.டி.பியாகி எமது நீண்டகால கோரிக்கையாகும். எமது அரசியல் வெற்றியை குழப்புவதற்காகவே இதுபோன்ற வன்முறைகளையும், தூண்டல் சம்பவங்களையும் கூட்டமைப்பினர் மேற்கொண்டுவருகின்றனர்.

நாம் கிடைத்த அரசியல் அதிகாரத்தை மக்களுக்காகவே பயன்படுத்தினோம். மக்களுடனே வாழ்ந்து கொண்டும் இருக்கின்றோம். எனவே இம்முறை மக்கள் ஈ.பி.டி.பி.க்கு ஒரு சந்தர்ப்பத்தைத் தருகின்றவிதமாக தீர்மானத்தை எடுப்பதை இவ்வாறான விசமப் பிரசாரங்களால் தடுத்துவிட முடியாது என்பதே எமது நம்பிக்கையாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 13 ஐ விரைவில் அமுல்படுத்த இலங்கையை வலியுறுத்த வேண்டும்

## பிரதமர் மோடியிடம் ஜெயலலிதா கோரிக்கை

(சென்னை)

இலங்கையில் தமிழர்களுக்கு சமவுரிமை கிடைக்கும் வ்கையில் உருவாக்கப்பட்டுள்ள அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை விரைவில் அமுல்படுத்துவதற்கு இந்திய மத்திய அரசு இலங்கையை வலியுறுத்த வேண்டும் என தமிழக அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

சென்னைக்கு நேற்று விஜயம் செய்திருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து கலந்துரையாடிய தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜெயராம், தமிழகத்தின் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுக் காண வலியுறுத்தி பிரதமர் நரேந்திர மோடியிடம் 21 பக்கங்களைக் கொண்ட மனுவொன்றையும் கையளித்துள்ளார்.

அந்த மனுவில் இலங்கைத் தமிழர்கள் தொடர்பிலும் கரிசனை காட்டியுள்ள தமிழக அரசு, 13 ஆவது அரசியலமைபபுத் திருத்தச் சட்டத்தை விரைவாக அமுல்படுத்த மத்திய அரசு தலையிட்டு இலங்கையை வலியுறுத்த வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் இறுதிக் கட்டப் போரின்போது இனப்படுகொலையில் ஈடுபட்டவர்கள் சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படுவதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தமிழக அரசின் மனுவில் உள்ளதாக இந்து பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், தமிழக மீனவர் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காக இலங்கை வசமுள்ள கச்சதீவை மீளப் பொறுப்பேற்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அந்த மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



## சு.க.மத்திய...

அடிப்படையில் இந்தத் தடை விதிக்கப்பட்டிருந்தது. அந்தத் தடை உத்தரவு நேற்று முடிவுக்கு வந்த நிலையில், வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தது.

இதன்போது, வழக்கில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் அனுர பிரியதர்ஷன யாப்பா சார்பில் ஆஜரான வழக்கறிஞர், பதில் மனு தாக்கல் செய்வதற்குக் கால அவகாசம் கோரினார். இதையடுத்து எதிர்வரும் 24 ஆம் திகதி வரை அவகாசம் கொடுத்த நீதிபதி, தடை உத்தரவையும் அதுவரை நீட்டிப்பதாக அறிவித்தார்.

கட்சி விதிகளின்படி, மத்திய குழுக் கூட்டத்தை அழைக்கும் அதிகாரம் தலைவருக்கு மட்டுமே வழங்கப்பட்டிருப்பதாக மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் கட்சித் தலைவரின் அனுமதியின்றி இந்தக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு சிலர் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக குற்றம்சாட்டிய மனுதாரர், இந்தக் கூட்டங்களை நடத்துவது சட்ட விரோதமானதென்று தீர்ப்பளிக்குமாறு கோரி இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

## மாணவி...

அட்டையினை பெறுவதற்கு சென்றபோது அனுமதி அட்டை வந்துள்ளது அதிபர் வெளியே சென்றுள்ளார் வந்ததும் பெற்றுக்கொள்ளுமாறு கூறப்பட்டுள்ளது. அனுமதி அட்டையினை பெற்று வருமாறு தாய் கூறி விட்டுச் சென்று விட்டார்.

திவ்யா அதிபர் வரும் வரை காத்திருந்து அனுமதி அட்டையினை கேட்டபோது உமக்கு கணிதபாடம் இல்லை எனவே அனுமதி அட்டை தரமுடியாது என்று கூறியுள்ளார்.

மனம் உடைந்த மாணவி செய்வதறியாமல் இருந்துள்ளார். பிற்பகல் 3.30 மணிக்கு வீடு சென்ற மாணவி தனது பாடப் புத்தகத்தில் தனக்கு பரீட்சை எழுத அனுமதி மறுக்கப்பட்டுள்ளதையும் தான் குடும்பத்தினர் மீது வைத்துள்ள பற்று, பாசம் என்பனவற்றையும் விபரித்து கடிதம் எழுதி வைத்து விட்டு வெளியே சென்றுள்ளார்.

6 மணி ஆனதும் தயார் திவ்வியாவைத் தேட ஆரம்பித்துள்ளார். அக்கம் பக்கத்திலுள்ள வீடுகளிலும் இல்லை என்றதும் உறவினர் அனைவருக்கும் தகவல் கிடைத்ததும் தேடுதலைத் தீவிரப்படுத்தியுள்ளனர். வீட்டிலிருந்து 250 மீற்றர் தூரத்திலிருக்கும் பொதுக் கிணற்றடியில் திவ்யாவின் பாதணி இருந்ததையடுத்து கிணற்றுக்குள் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. கிணற்றிலிருந்து மீட்கப்பட்ட திவ்யாவை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது இறந்து விட்டதாக கூறினார்கள்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி மரண விசாரணையினை நடத்தி உடற்பரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலதிக விசாரணையினை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (70)

## போதைப்...

அழுவதை ஏற்கமுடியாது.

இச்செயல்களில் ஈடுபடும் பிள்ளைகளை உடனடியாக பெற்றோர்கள், பொலிஸில் ஒப்படைக்க வேண்டும். இல்லையேல் இச்செயல்களில் இருந்து அவர்களைத் திருத்த வேண்டும். அவர்களை பொலிஸார் கைது செய்யும் வரையில் அவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கும் பெற்றோர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றார்.

போதைப்பொருள் தொடர்பில் கைது செய்யப்படுபவர்களுக்கு மரணதண்டனை அளிக்க போதைவஸ்து கட்டளைச் சட்டம் பரிந்துரை செய்கின்றது. எனவே, போதைவஸ்து குற்றவாளியாக காணப்படுபவர்களுக்கு மரணதண்டனை வழங்கப்படும் என கண்டிப்பான உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணத்திலிருந்து போதைவஸ்தை ஒழிப்பதற்கு நீதிமன்ற தண்டனை அவசியம். இந்தச் செயலில் ஈடுபடுபவர்களுக்கு பாவமன்னிப்போ, பிணை, கருணை, விடுதலை எதுவும் வழங்கப்படமாட்டாது என்றார்.

யாழ்ப்பாணத்தில் குறிப்பிடப்படும் சில பகுதிகள் போதைவஸ்து பாவனை செய்யப்படும் இடங்களாக உள்ளன. குருநகர், கொழும்புத்துறை, ஓட்டுமடம், பொம்மைவெளி, யாழ்.நகரம், ஆரியகுளம் சந்தி, கோட்டை பின்புறமாகவுள்ள பூங்கா பகுதி போன்ற இடங்களில் போதைவஸ்து விற்பனை பாவனை அதிகமுள்ள இடமாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

குறித்த இடத்தில் பொலிஸ் நடவடிக்கை மூலம் குற்றம் செய்பவர்கள் கைது செய்யப்பட்டு பிணையில் வெளிவராத வகையில் சிறைக்குச் செல்வதற்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கும். இந்தச் செயல்களில் ஈடுபடும் சில்லறைக் கடைகள் நீதிமன்ற உத்தரவில் சீல் வைத்து மூடப்படும்.

போதைவஸ்து கலக்கப்பட்ட இனிப்பு, பாக்கு இதர பொருட்கள் விற்பனை செய்யும் கடை உரிமையாளர்கள் உடனடியாக அவ்விற்பனையை நிறுத்த வேண்டும். இத்தகைய பொருட்களுடன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்படுவதுடன், அவர்களுடைய கடையும் சீல் வைக்கப்படும். வாகனத்தில் போதைவஸ்து வியாபாரத்தில் ஈடுபடுபவர்களின் வாகனம் பறிமுதல் செய்யப்பட்டு, அரசுடமையாக்கப்படும் என்றார்.


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



சூசைமுத்து அலெக்ஸ்சாண்டர்

(ஈ.பி.டி.பி. தென்மராட்சி இணைப்பாளர்)



X

10

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# ஐ.தே.க.வின் பிரசாரத்தில் பாதாள குழுவினரின் ஆயுதம்

## குற்றம் சுமத்துகிறார் வாசு

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரத்தில், பாதாள உலகத்தினரின் ஆயுதம் முக்கிய கருவியாக பயன்படுத்தப்படுவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்ட மக்களை உளரீதியாக தாக்கத்திற்குள்ளாக்கும் செயற்பாடுகளையும் ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

குறித்த செய்தியாளர் சந்திப்பில் அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

தற்போதைய நிலையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்ட மக்களை உளரீதியாக தாக்கத்திற்குள்ளாக்கும் செயற்பாடுகளை அக்கட்சி மேற்கொண்டு வருகின்றது. வாகனங்களில் அபாய ஒலியை பொலிஸாருக்கும், அம்பியூலன்ஸ், மற்றும் தீயணைப்பு வாகனங்களுக்கே பயன்படுத்த முடியும்.

நான் கடந்த புதன்கிழமை ஓரிடத்திற்கு செல்லும் போது, அபாய ஒலியை எழுப்பியவாறு வாகனம் பயணித்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரே இவ்வாறு பயணித்துள்ளார்.

இது சட்டவிரோதமானது. இது குறித்து நான் உடனடியாக தேர்தல்கள் ஆணையாளரிடமும், பொலிஸாரிடமும் தெரிவித்தேன். வீதியில் இடமில்லாமல் அவர்கள் இவ்வாறு ஒலியை எழுப்பவில்லை.



அவர்களின் இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் மக்களை உளரீதியாக கீழ்பணிய வைக்கின்றனர். அதன்பின்னர் மற்றுமொரு வேட்பாளர் மறுபுறம் இதுபோன்று செல்கின்றார்.

அவர் முன்னால் சுமார் 10 மோட்டார் சைக்கிள்கள் தொடரணியாக செல்கின்றன. சரியாக அரச தலைவர் செல்வது போன்று பயணிக்கின்றார். தற்போதுள்ள தேர்தல் விதிமுறைக்கு அமைய இதுவும் சட்டவிரோதமானது. இதனையும் நாம் அறிவித்துள்ளோம். இவை அனைத்தினாலும் மக்களை உளரீதியாக தாக்கத்திற்குள்ளாக்கும் வகையிலான சூழ்நிலையினை அவர்கள் உருவாக்குகின்றனர்.

இதற்கு ஏதுவாக அவர்கள் தற்போது பாதாள உலகக் குழுக்களின் ஆயுதங்களையும் உதவிக்கு எடுத்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசார கருவியாக பாதாள உலகக் குழுவினரின் ஆயுதம் பயன்படுத்தப்படுகின்றது.

இது தொடர்பில் ரணில் என்ன? விசாரணை நடத்துவது. அவர் தான் இந்த செயற்பாடுகளின் பிரதான குற்றவாளியாவார். என்றும் கூறினார்.

# வாக்காளர் அட்டைகள் 10இற்கு முன் விநியோகம்

எதிர்வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு இதுவரை 8.2 மில்லியன் வாக்காளர் அட்டை விநியோகிக்கப்பட்டுள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து வாக்காளர் அட்டைகளும் விநியோகித்து முடிக்கப்படும் என தபால்மா அதிபர் ரோஹன அபேரத்ன தெரிவித்தார்.

அரச விடுமுறை நாளான நாளை ஞாயிறன்றும் விசேட தினமாகக் கருதி வாக்காளர் அட்டை விநியோகிக்கப்படும் என அவர் கூறினார்.

வாக்காளர் அட்டை கிடைக்காதவர்கள் அருகில் உள்ள தபால், உப தபால் நிலையங்களுக்குச் சென்று ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தி வாக்காளர் அட்டையை பெற்றுக் கொள்ளுமாறு தபால் மா அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார்

# பல சரக்கு கடையிலிருந்து வாக்காளர் அட்டை மீட்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தல் தொடர்பில் வாக்காளர்களுக்கு பங்கிடுவதற்கென தபால் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்ட வாக்கட்டைகளில் 886 அட்டைகளை பலசரக்கு கடையொன்றில் இருந்து பொலிஸார் மீட்டுள்ளனர்.

ஊவா பரணகம, லக்கிலேன்ட் தோட்டத்தின் பலசரக்கு கடையொன்றில் இருந்தே இவ் அட்டைகள் மீட்கப்பட்டுள்ளன.

கடை உரிமையாளரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த வாக்கட்டைகளுடன், அட்டைகள் வழங்கப்பட வேண்டியவர்களது பெயர்ப் பட்டியலும் அங்கிருந்து மீட்கப்பட்டுள்ளது

# போலி வாக்குச்சீட்டுக்கள் கந்தளாயில் மீட்பு

(திருகோணமலை)

திருகோணமலை கந்தளாய் பகுதியில் சுமார் 15,000 போலி வாக்குச் சீட்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

கந்தளாய் பகுதியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றிலிருந்து குறித்த வாக்குச் சீட்டுகள் மீட்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர குறிப்பிட்டுள்ளார்.

வாக்குச் சீட்டை ஒத்த வடிவில் வடிவமைக்கப்பட்டு பிரதான அரசியல் கட்சியொன்றின் திருகோணமலை வேட்பாளர் ஒருவருக்கு புள்ளடியிடப்பட்ட வாக்குச் சீட்டுக்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து எதிர்வரும் 14ஆம் திகதி வரை அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

போலி வாக்குச் சீட்டுகள் கைப்பற்றப்பட்டமை தொடர்பில் கந்தளாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கொழும்பு துறைமுகத் திட்டம் அமைச்சரவை தீர்மானம் என்ன?

## அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

கொழும்பு துறைமுக நகரம் (போர்ட் சிட்டி) தொடர்பில், அமைச்சரவை இதுவரை எடுத்துள்ள தீர்மானங்கள் குறித்து நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் சட்ட மா அதிபருக்கு அறிவித்துள்ளது. கொழும்பு துறைமுக நகரத்துக்கு எதிராக சுற்றுச்சூழல் நீதிக்கான மையம் தாக்கல் செய்திருந்த வழக்கு, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான விஜித் மலல்கொட மற்றும் எச்.சி.ஜே.மடவல ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது மன்றில் ஆஜராகியிருந்த பிரதி சொலிசிடர் ஜெனரல் அர்ஜுன ஒபேசேகர, "மேற்படி கொழும்பு துறைமுக நகரத் திட்டம் தொடர்பில் புதிய சுற்றுச்சூழல் அறிக்கையொன்றைத் தயாரித்து அதனை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக" கூறினார். அத்துடன், இந்த அறிக்கையில் பொதுமக்களின் கருத்துக்களையும் கேட்டு இணைப்பதாக அவர் குறிப்பிட்டார். இவற்றைக் கருத்திற்கொண்ட நீதிபதிகள் குழாம், இந்த வழக்கை எதிர்வரும் செப்ரெம்பர் 9ஆம் திகதிக்கு ஒத்திவைக்க உத்தரவிட்டார்

# கடற்போக்குவரத்து சவால்கள் வெற்றிகரமாக முன்னெடுப்பு

## துறைமுக அதிகார சபை தெரிவிப்பு

(கொழும்பு)

கடற்போக்குவரத்து துறையின் சவால்களைத் தொடர்ந்தும் வெற்றிகரமாக எதிர்கொண்டு வருவதாக இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இவ்வாண்டு இரண்டு புதிய கப்பல் சேவைகள் கொழும்பு துறைமுகத்தை பயன்படுத்த ஆரம்பித்துள்ளதாக அதிகார சபை கூறியுள்ளது.

இவ்வாண்டின் முதல் அரையாண்டில் துறைமுகத்தை பயன்படுத்திய கப்பல்களின் எண்ணிக்கை 12 தசம் 7 வீதத்தால் அதிகரித்துள்ளது.

அத்துடன் சரக்கு கப்பல்களின் வருகையும் 2 தசம் 8 வீதத்தால் உயர்வடைந்துள்ளது.

கொழும்பு துறைமுகத்தில் கொள்கலன் கையாள்கையும் 6 தசம் 4 வீதத்தால் அதிகரித்துள்ளது.

இதேவேளை கொழும்புத் துறைமுகத்தின் உட்கட்டமைப்பும் குறிப்பிடத்தக்க அளவில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதாக இலங்கை துறைமுக அதிகார சபை கூறியுள்ளது.

ஊழியர்களின் நலன்களை மேம்படுத்த அதிகளவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உற்பத்தி திறனை அதிகரிப்பதை நோக்காக கொண்டு திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக துறைமுகங்கள் அதிகார சபை கூறியுள்ளது.

இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை கடந்த முதலாம் திகதி 36 ஆவது ஆண்டை பூர்த்தி செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# தாஜுடீனின் கொலையுடன் எவ்வித தொடர்பும் இல்லை

## குற்றச்சாட்டை மறுக்கிறார் நாமல்

(கொழும்பு)

பிரபல ரக்பீ வீரர் வசீம் தாஜுடீனின் கொலைச் சம்பவத்துடன் தனது குடும்ப உறுப்பினர்களுக்கு தொடர்பில்லை என்று தெரிவித்துள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, அது தொடர்பில் வெளியாகும் விடயங்களையும் முற்றாக மறுத்துள்ளார்.

பி.பி.ஸி.க்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

வசீம் தாஜுடீனின் படுகொலையுடன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல்வர்களுள் ஒருவரான யோஷித்த ராஜபக்ஷவுக்கு தொடர்பிருப்பதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையிலேயே யோஷித்த ராஜபக்ஷவின் சகோதரரான நாமல் ராஜபக்ஷ அந்தக் குற்றச்சாட்டுக்களை முற்றாக மறுத்துள்ளார்.

ரக்பீ வீரர் வசீமின் சம்பவத்தை அரசியல் மயப்படுத்த சிலர் முயற்சித்து வருவதாக குற்றம் சாட்டியுள்ள நாமல் ராஜபக்ஷ, தேர்தல் காலத்தில் ராஜபக்ஷ குடும்பத்தினர் மீது சேறு பூசுவதை அனுமதிக்கவே முடியாதென்றும் கூறியுள்ளார்.

அதேவேளை வசீமை தனது பாடசாலை காலம் முதல் அறிந்திருந்ததாக குறிப்பிட்டுள்ள நாமல் ராஜபக்ஷ, தாஜுடீன் தனது குடும்ப உறுப்பினர்களுடன் மிக நெருக்கமாக பழகியிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# மகிந்தவின் சண்டியர்களை வழி நடாத்தும் அரசாங்கம்

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ உருவாக்கிய சண்டியர்களை தற்போதைய அரசாங்கம் வழிநடத்திச் செல்வதாக ஜே.வி.பி.யின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொள்ளப்படுவதோடு, தொடர்ச்சியாக தேர்தல் சட்டங்களை மீறும் நடவடிக்கைகள் இடம்பெறும் சூழ்நிலையில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் நியாயமானதாகவும் நீதியானதாகவும் நடைபெறும் என எதிர்பார்க்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், பொலிஸ் அரசாங்கத்தில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர்கள் தேர்தல் சட்டங்களை மீறி பிரசாரங்களை முன்னெடுப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இசை வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

ராஜ் மூவிஸ் வழக்கும் உதயரூபனின் மனசுக்குள் ஒரு மழைச்சாரல் திரைப்பட இசை வெளியீட்டு விழா நாளை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இப்படத்திற்கு சுதர்சன் இசை அமைத்துள்ளதுடன் படத்தொகுப்பு, திரைக்கதை, வசனம், இயக்கம் ஆகியவற்றை வினோதன் வழங்கியுள்ளார்.(54)

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 ஆகஸ்ட் 08ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை ரூ. 2.00

# மாலை முரசு

தேர்தல் கால மாலைப் பதிப்பு

08.08.2015 | சனிக்கிழமை | பக்கங்கள் - 4

அழிவா! - ஆக்கமா!!
மக்கள் தீர்ப்புக்கு
இன்னமும்
8
நாட்கள் மட்டுமே!

# கைதியில் போராட்டம்

# என்னாச்சு அண்ணாச்சி சேறு பூசப்படும் சேனாதி

வடக்கில் உள்ள இராணுவத்தை முகாமிற்குள் முடக்க வேண்டும். இராணுவ ஆக்கிரமிப்புக் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். சிறையில் உள்ள தமிழ்க் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும். போன்ற கோரிக்கைகளை அரசாங்கம் நிறைவேற்றாவிட்டால் 2015 ஜனவரி முதலாம் திகதி மக்கள் போராட்டம் வெடிக்கும் என கடந்த வருடம் இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் இளைஞர் மாநாட்டில் இன்றைய வேட்பாளர் மாவை சேனாதிராசா கொக்கரித்திருந்தார்.



கடந்த வருடம் திரு சம்பந்தன் அவர்களிடம் இருந்து தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பு அண்ணன் சேனாதிக்கு மாற்றப்பட்டிருந்தது. தலைமைப் பொறுப்பை பெற்ற களிப்பில் வீராவேசத்துடன் போராட்ட அறிவிப்பை வெளியிட்ட அண்ணன் சேனாதி. அதன் பின்னர் அமைதியாகி விட்டது மக்கள் அறிந்ததே.

வரும்17ஆம்திகதிஇடம்பெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை வேட்பாளராக களமிறங்கி இருக்கும் சேனாதிராசா தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது போராட்ட அறிவிப்புப் பற்றி யாராவது பேச்சு எடுத்தால் அங்கிருந்து நழுவி விடுவதாக தெரியவருகிறது.

கடந்த காலம் இடம்பெற்ற தேர்தல் பிரச்சார மேடை ஒன்றில் அவர் பேசும் போது தேர்தலின் பின்னர் அமையவிருக்கும் ஐக்கிய தேசிய அரசாங்கம் தமிழர் பிரச்சினையை சுமூகமாகத் தீர்த்துவைக்கும் என தான் நம்புவதாகத் தெரிவித்திருந்தார்.

ஆக.இன்றுவரைஅவரதுகோரிக்கைகள் எதுவும் தீர்த்து வைக்கப்படவில்லை என்பதனையும், தமிழர் பிரச்சினைக்கான தீர்வு எதுவும் காணப்படவில்லை

03 பக்கம் பார்க்க

## உயிர்விட்ட போராளியும் கைவிட்ட கூட்டமைப்பு


1990 ஆம் ஆண்டு வடபகுதியிலிருந்து முஸ்லிம் மக்கள் ஏதிலிகளாக இரவோடிரவாக வெளியேற்றப்பட்டு, நாம் அனாதைகளாக் கப்பட்ட போது எமக்காக எந்தத் தமிழ் தேசிய தலைவர்களும் குரல் கொடுக்கவுமில்லை எம்மை காக்க முன் வரவுமில்லை.

பின்னர் நாம் எதுவுமற்றவர்களாக புத்தளம் மாவட்டத்திலகுடியேறிய போது கூட இன்று எங்களிடம் வாக்கு கேட்கும் எந்த தேசிய அரசியல்வாதியும் எமக்க எந்த உதவிகளையும் செய்யவில்லை

ஆனால் எமது மக்களுக்காக தனது அமைப்பின் பவான் என்கின்ற போராளி ஒருவரையே பலி கொடுத்து முஸ்லிம் சமூகத்திற்காக

03 பக்கம் பார்க்க

## ஆங்கிலக்கால்வாயை நடந்தே கடந்த அகதி



பிரான்ஸ்க்கும் பிரிட்டனுக்கும் இடையிலான சேனல்டனல் எனப்படுகின்ற சுரங்கப் பாதையின் 'கிட்டத்தட்ட' ஒட்டு மொத்த தூரத்தையும் நடந்தே கடந்துள்ள குடியேறி ஒருவர் பிரிட்டனை வந்தடைந்துள்ளார்.

ஆங்கிலக் கால்வாயின் கீழே கடலின் தரைக்கு அடியில் இந்த சுரங்கப் பாதை அமைந்துள்ளது.

கிட்டத்தட்ட 50 கிலோமீட்டர் தூரத்தை நடந்தே கடந்துவந்துள்ள சூடானைச் சேர்ந்த இந்த நபரை பாதுகாப்பு அதிகாரிகள் வழியில் நிறுத்தி கைதுசெய்துள்ளனர்.

03 பக்கம் பார்க்க

## தலைவரை அவமானப்படுத்துகிறார் விஜயகலா கொதிக்கின்றனர் முன்னாள் புலிகள் அமைப்பினர்

பிரபாகரன் இறந்து விட்டதாக அரசாங்கம் மரணச் சான்றிதழ் வழங்கப்படும் பட்சத்தில் பிரபாகரனுக்கு வடக்கில் தூபி எழுப்பப்படும் என்று தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ் மாவட்ட வேட்பாளர் விஜயகலா மகேஸ்வரனின் கூற்றுக்கு பலத்த கண்டனங்கள் எழுந்துள்ளன.

நேற்று முன்தினம் கிளிநொச்சியில் இடம்பெற்ற ஐக்கிய தேசிய கட்சியின் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டிருப்பின் அதற்கு மரண சான்றிதழ் வழங்கப்பட்டிருக்க வேண்டும் எனவும் அப்படி மரண சான்றிதழ் வழங்கப்பட்டால் தான் பிரபாகரனுக்கு கிளிநொச்சியில் ஸ்தூபி அமைப்பேன் எனவும்



விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்திருந்தார்.

இவரின் இந்த கூற்றுக்கு சமூகத்தின் பல மட்டங்களில் இருந்தும் பலத்த கண்டனம் எழுந்துள்ளது.


02 பக்கம் பார்க்க

## விலை போகும்* கொள்கைகளும்* தமிழ்* தேசியவாத அரசியலும்*

கொள்கை, தேசப்பற்று, இனப்பற்று என பல்வேறுபட்ட கோணங்களில் தமது உணர்வுகளை வெளிப்படுத்திவந்த அரசியல்வாதிகள், தேர்தல் காலங்களில் மாத்திரம் களத்தோடு ஒன்றிப் போகக்கூடிய வார்த்தைகளை தேர்தல் வாக்குறுதியாக அள்ளி வீசி வருகின்றனர். இது காலம் காலமாகத் தொடர்கின்ற தேர்தல் கலாசாரமாகும்.

மனதளவில் ஒரு கொள்கையும் வார்த்தைகளில் வேறொன்றுமாக திரிவதொன்றும் அரசியல் வாதிகளுக்குப் புதிதல்ல. பதின் மூன்றாம் அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்துக்கு மேலே சென்று தமிழ் மக்களுக்குத்தீர்வுவழங்குவேன்எனஇந்தியாவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் வாக்குறுதியளித்த மஹிந்த ராஜபக்ஷ, பிற்காலத்தில் சிங்கள வாக்குகளை தன்வசப்படுத்துவதற்காக மாற்றுக் கொள்கையுடன் நடந்துகொண்ட வரலாறு நமக்குத் தெரிந்ததுதான்.

02 பக்கம் பார்க்க



# எப்படி எதிர்கொள்ளப்படும் சமஷ்டித் தீர்வு

– வீ. தனபாலசிங்கம்

எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவிருக்கின்ற தேர்தல் இலங்கையில் உள்நாட்டுப் போரின் முடிவுக்குப் பிறகு இடம்பெறுகின்ற இரண்டாவது நாடாளுமன்றத் தேர்தலாகும். சமூகங்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் இணக்கத் தீர்வொன்றைக் காண்பதற்கும் உருப்படியாக எந்தவொரு செயன்முறையையும் முன்னெடுக்காத தென்னிலங்கையின் பிரதான அரசியல் கட்சிகள் இப்போது அந்தப் பிரச்சினைகள் குறித்துப் பேசத் தலைப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தலைமையில் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஜூலை 28ஆம் திகதி வெளியிட்ட அதன் விஞ்ஞாபனத்தில் அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்திற்கு உட்பட்ட வகையில் அரசியல் தீர்வைக் காண்பதற்கு முன்வருவதாகவும், தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஆணைக்குழுவொன்றை நியமிக்கப்போவதாகவும் தெரிவித்திருக்கிறது. மறுபுறத்தில், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் அமைக்கப்பட்டிருக்கும் நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில், போரின் முடிவுக்குப் பிறகு தேசிய நல்லிணக்கம் ஏற்படுத்தப்படவில்லை என்பதை ஏற்றுக்கொண்டுள்ளதுடன், தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியமைக்கும் பட்சத்தில் சகல சமூகங்களும் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுமென்று பொதுப்படையாகத் தெரிவித்திருக்கிறது.

சுமார் பத்து வருடங்களாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக ஆட்சியதிகாரத்தில் இருந்த முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ச தனது ஆட்சிக்காலத்தில் 13ஆவது திருத்தம் தொடர்பில் எவ்வாறு நடந்துகொண்டார் என்பதை முழு உலகமும் அறியும். இரு வருடங்களுக்கு முன்னர் வட மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு முன்னதாக 13ஆவது திருத்தத்தில் மாகாண சபைகளுக்கு இருக்கும் பொலிஸ் அதிகாரத்தையும் காணி அதிகாரத்தையும் இல்லாமற் செய்வதற்கு அரசியலமைப்புத் திருத்தமொன்றைக் கொண்டுவருவதற்குக் கூட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த முயற்சிகளில் இன்று ராஜபக்ச முகாமில் முன்னரங்கத்தில் இருக்கும் பல அரசியல்வாதிகள் தீவிர அக்கறை காட்டினார்கள். அன்று அவர்களுக்கு ஆதரவாக நின்ற ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் இன்று ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான முன்னணியில் இணைந்து தேர்தல் களத்தில் நிற்கின்றன.

ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் முன்னெடுக்கப்பட்ட பேரினவாதக் கொள்கைகள் காரணமாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தமிழ் மக்களிடமிருந்தும் மேலும் குறிப்பாக முஸ்லிம் மக்களிடமிருந்தும் தனிமைப்பட்டுப் போனதாலேயே ஜனவரி ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷ தோல்வியைத் தழுவினார். அதை உணர்ந்து கொண்ட நிலையில் சிறுபான்மைச் சமூகங்களை அரவணைப்பதைப் போன்ற தோற்றப்பாடொன்றைக் காண்பிப்பதற்காகவே சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அரசியல் தீர்வு குறித்து குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல்சக்திகள் இனப்பிரச்சினைக்கான தீர்வாக 13ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்பது ஒருபுறமிருக்க அந்தத் திருத்தத்தில் இருக்கக்கூடிய அதிகாரங்களைக் கூட மாகாண சபைகளுக்கு மத்திய அரசுகள் இதுவரையில் முழுமையாக வழங்கவில்லை. இத்தகையதொரு பின்புலத்திலேயே தாங்கள் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தால் 13ஆவது திருத்தத்திற்குள் தீர்வுகாணத் தயாராயிருப்பதாகக் கூறுகின்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் மாகாண சபைகளுக்குச் சட்டரீதியாக உரித்தாக இருந்தும் அரசுகளினால் அவற்றுக்கு வழங்கப்படாமல் இருக்கும் பொலிஸ், காணி அதிகாரங்கள் குறித்துத் தங்களது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துவார்களா? அவர்களிடமிருந்து அதை எதிர்பார்க்க முடியாது.

இதனிடையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டது தான் தாமதம் தென்னிலங்கையில் அதற்கெதிராக குரல்கள் பலமாக ஒலிக்கத் தொடங்கியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இலங்கையில் வாழ்கின்ற சகல சமூகங்களுக்கும் இறைமையும் சுயாதிபத்தியமும் பொதுவானவை என்ற அடிப்படையில் அதிகாரங்கள் பரவலாக்கம் செய்யப்படக்கூடியதாக தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் இணக்கத் தீர்வு காணப்பட வேண்டும் என்றும், அத்தகைய தீர்வு தமிழ்பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடங்களான வடக்கு மாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் இணைத்து ஒரு சமஸ்டிக் கட்டமைப்புக்குள் அமைவதாக இருக்க வேண்டுமென்றும் கூட்டமைப்பு அந்த விஞ்ஞாபனத்தில் வலியுறுத்தியிருக்கிறது. அத்துடன், இலங்கையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஐக்கிய நாடுகள் சாசனங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்றும் தெரிவித்திருக்கும் கூட்டமைப்பு, நிரந்தரமான தீர்வொன்றைக் காண்பதற்கான முயற்சிகளில் சர்வதேச சமூகத்தின் பங்கேற்பு தவிர்க்கமுடியாதது என்றும் குறிப்பிட்டிருக்கிறது.

சமஸ்டிக் கட்டமைப்பின் அடிப்படையிலான தீர்வு தொடர்பில் கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்டிருக்கும் கோரிக்கையை நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணிக்கு எதிராகத் தேர்தல் பிரசாரங்களில் பயன்படுத்துவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாட்டத்தைக் காட்டுகிறது. வடக்கு–கிழக்கு இணைப்புப் பற்றியும் சமஸ்டித் தீர்வு பற்றியும் கோரிக்கை விடுத்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஐக்கிய தேசிய முன்னணி எவ்வாறு உறவைக் கொண்டிருக்கப்போகிறது என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை கொழும்பில் வெளியிட்ட வைபவத்தில் மகிந்த ராஜபக்ச கேள்வியெழுப்பினார். வரும் நாட்களில் சுதந்திர முன்னணியினரின் பிரசாரங்கள் எத்தகைய திசைமார்க்கத்தில் செல்லப் போகின்றன என்பதற்கு ராஜபக்சவின் உரை கட்டியம் கூறி நிற்கின்றது.

கூட்டமைப்பின் விஞ்ஞாபனம் தொடர்பிலான தங்கள் நிலைப்பாட்டை தெரியப்படுத்துவதில் ஐக்கிய தேசியக் கட்சி அரசியல்வாதிகளும் தாமதம் காட்டவில்லை. கூட்டமைப்பு எத்தகைய கோரிக்கையை முன்வைத்தாலும் தங்கள் நிலைப்பாட்டை ஒருபோதும் மாற்றப்போவதில்லை என்றும், ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப்பரவலாக்கலே தங்கள் உறுதியான கொள்கை என்றும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்திருக்கிறது. ஆக மொத்தத்தில் தென்னிலங்கையின் இரு பிரதான அரசியல் முகாம்களும் இனப்பிரச்சினை தொடர்பில் அவற்றின் அணுகுமுறைகளில் எந்த மாற்றத்தையும் செய்யப்போவதில்லை என்பதைத் தெளிவாக பிரகடனம் செய்திருக்கின்றன. தமிழ்பேசும் மக்களே இதை கவனத்தில் கொள்ளுங்கள்.

---

### தலைவரை...

எமது தலைவரின் பெயரைக்கூட உச்சரிக்க தகுதியற்ற இவஉ துாபி அமைப்பது பற்றி தெரிவித்திருப்பது தேர்தலில் வாக்குகளை கொள்ளையடிக்கவே என புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகள் சிலர் தெரிவித்தனர்.

தேர்தலுக்காக எமது தலைவரையும் அவரது தியாகத்தையும் அவமதிக்க வேண்டாம் என அவர்கள் வேண்டுகள் விடுத்தனர்

இப்படியானவரலாற்றுதுரோககருத்துக்களை யார் வெளியிட்டாலும் அவர்கள் துாரோகிக்ளாகவே கருதப்படுவார்கள் எனவும் முன்னாள் புலிகள் அமைப்பினர் மேலும் தெரிவித்தனர்.

---

### குப்பி கடிக்காத...

நிலையில் அண்மையில் கிளிநொச்சியில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில். உரையாற்றும் போது வவுனியாவில் முன்னாள் போராளிகளுடனான சந்திப்பின் போது, தான் அப்படி எதுவும் கூறவில்லை என மறுத்திருந்தார்.

வவுனியாவில் நடந்தவைகள் அணைத்தும் வீடியோ ஆதாரத்துடன் ஊடகங்களில் வெளியாகியுள்ள நிலையில், சிறிதரனின் இந்த மறுப்பானது ஊடகவியலாளர்களையும் அதிருப்தி அடைய வைத்துள்ளது.

குப்பி கடிக்காதவர்கள் அணைவரும் துரோகிகள் என சிறிதரன் வவுனியாக் கூட்டத்தில் தெரிவித்தது உண்மையே என, அந்தக் கூட்டத்தில் பிரசன்னமாகியிருந்த சிவாஜிலிங்கம், பிரேமச்சந்திரன் போன்றவர்கள் உறுதிப்படுத்தியிருந்தார்கள் அதிருப்தியில் இருக்கும் ஊடகவியளாலர்களும் தெரிவிக்கின்றன.

---

### விலைபோகும்...

அதேபோல், ஒற்றையாட்சிக்குள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்து கொண்டு, சகல வரப்பிரசாதங்களையும் அனுபவித்து வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், தேர்தல் காலங்களில் மாத்திரம் சமஷ்டி பற்றிப் பேசிவருகிறார்கள். வெளிநாட்டுத்தூதுவர்கள், ராஜதந்திரிகளுடன் பேசுகின்ற போது, ஒற்றையாட்சிக்குள் இருக்கின்றபதின்மூன்றாம்அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தினையே மையப்படுத்திக் கோரிக்கைகளை முன்வைத்து வருகிறார்கள். ஆனால்தேர்தல்காலங்களில்மாத்திரம் சமஷ்டிக் கோரிக்கை முன்வைத்து, தமிழ் மக்களின் உணர்வகளைத் துாண்டி வாக்குப்பெற முனைகின்றமை காலங்காலமாக நடைபெற்று வருகின்ற ஒன்றாகவே இருக்கிறது.

வடக்குக் கிழக்கினை மையப்படுத்தி தேசிய வியாபாரம் செய்கின்ற ஏனையவர்களின் நிலைப்பாடுகளும் இதுவாகவே. இருக்கிறது. ஜனநாயகப் போராளிகள் கட்சியாகட்டும், தமிழ்த் தேசிய முன்னணி ஆகட்டும் அனைவருமே தேர்தல்கால வீரர்களாகவே செயற்படுகின்றார்கள். வாக்குச் சேகரிப்பின்போது போராளிகளின் இயக்கப் பெயரினைப் பயன்படுத்த மாட்டோம் என்று கூறிய ஜனநாயகப் போராளிகள் கட்சி, இப்பொழுது அவர்களின் கொள்கையை மாற்றி, இயக்கப் பெயர்களையே பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறார்கள். ஒற்றையாட்சிக்குள் ஆண்டனுபவித்த பொன்னம்பலத்தின் வாரிசு, இப்போது "ஒரு நாடு இரு தேசம்" என்று பிரசாரம் செய்கிறது.

முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ், அகில இலங்கைமுஸ்லிம் காங் கிரஸ் போன்றனவும் கொள்கைகள் என்ற கோடடிபாட்டிலிருந்து விலகி, தேர்தல் வாக்குறுதிகளை அள்ளி வீசி வருகிறார்கள். சமூக அரசியல் என்ற நிலை மாறி, பிராந்திய அரசியல் என்ற கலாச் சாரத்தினை அவரகள் தோற்றுவித்திருக்கிறார்கள். இந்நிலைமைகள் மாறுவதே கலத்தின் தேவை

## மொக்கனின் முனகல் - 6

# உள்ளுக்குள்ள விருப்புவாக்கு போர் வெளியில தமிழர் உரிமை போராம்

# கூட்டமைப்பின் கூத்துக்கள்...

ரணில் ஐயாவும் யாழ்ப்பாணத்துக்கு வந்துபோயிட்டார். எங்கட விக்கி ஐயாவுக்கு முறையான அழைப்பு விடேல்லையாம் எண்டு அவர் போகேல்லயாம். ஆனால் இதில் விசேசம் என்னெண்டால் பாருங்கோ, 1972ஆம் ஆண்டு சிறை சென்று மீண்ட செம்மல் மாவை சேனாதிராசா ஐயா ரணில கட்டிப்பிடிச்சு கொஞ்சாத குறையா நெருங்கி நிண்டு பங்கு பற்றினாராம். இதுதான் இந்த மொக்கனுக்கு என்னெண்டு விளங்கேல்ல. மாகாணசபை முதல்வர் பங்குபெற்றேல்ல. பாராளுமன்ற உறுப்பினர் பங்குபற்றுறார். இவையெல்லாம் ஒரு கட்சிதான் ஆனா அதுக்குள்ள ஒற்றுமை எண்டதே இல்லை. கூட்டமைப்பாற்ர இந்த கூத்துக்களை கண்டு சனத்துக்கு சிரிப்புத்தான் வருகுது.

இந்த ரணில் ஐயாவுக்கும், மகிந்தவுக்காக மும்முரமாய் நிக்கிற வாசுதேவ நாணயக்கார ஐயாவுக்கும் கொஞ்சமும் ஒத்துவாறதில்லை. இது இண்டைக்கு நேற்றில்ல. இப்ப 50 வருசமா இப்படித்தான் பாருங்கோ. எங்கட விக்கி ஐயான்ர சம்மந்திதான் இந்த வாசுதேவ நாணயக்காரர் ஐயா. என்னெண்டால் விக்கியரின்ர பொடியன் ஒருத்தன் நாயக்காரரரின்ர மோளைத்தான் கட்டினவன். இந்தச் சம்மந்தக் கலப்பால விக்கி ஐயாவுக்கு ரணில பிடிக்காம இருக்கும். அவருக்கும் இவர பிடிக்காமலிருக்கும். ஆனால் கட்சி, கொள்கை எண்டேக்க பாருங்கோ எல்லோரும் ஒண்டா இணங்கி நிக்க வேணும். விக்கியர் ஒரு பக்கம் மாவை இன்னொரு பக்கம் இந்தக் கூட்டமைப்புக்காரரர் எல்லோரும் சனத்துக்கு என்ன கூத்துக்காட்டீனம். ரணில் ஐயா டக்ளஸ் தம்பியையும் கண்டவராம். இதுததான் பாருங்கோ. எங்கட ஆக்களுக்கு எரிச்சலை குடுக்கிற விசயம்.

ஆரை ஓரங்கட்டுற எண்டு வெளிக்கிட்டினமோ, ஆரை அரசியல்ல இருந்து ஒதுக்கி வைக்க வேணும் எண்டு விரும்பிச்சினமோ அதெல்லாம் நடக்கிற காரியமா தெரியேல்ல. இப்ப எங்கன்ர தலைவர்மார் கொஞ்சப் பேருக்கு தாங்கள் பெரிய புனிதர்கள். புண்ணிய சீவனுகள் எண்டெல்லாம் எண்ணம். ஒரு காலம் தமிழரசு கட்சி தலைவர் செல்வநாயகம் ஐயாவும் சத்தியாக்கிரகப் போராட்டம், சாத்வீக எதிர்ப்பு, சமரச ஒப்பந்தம் எண்டெல்லாம் செய்து பாத்து களைச்சு போய் கடைசியில கடவுள்தான் எங்களக் காப்பாத்தவேணும் எண்டு சொல்லி கொஞ்ச நாளில செத்துப்போனார். தலைவர்மாரின்ர கையறு நிலையைக் கண்டு கொதிச்சுப்போன பொடியங்கள் கொஞ்சப் பேர் ஆயுதங்களைக் கையில எடுத்தாங்கள். அவங்கள் ஆயுத மோகத்தில ஆயுதங்களை தூக்கேல பாருங்கோ. ஒண்டும் ஏலாமல்போன ஆத்தா கொடுமையில தான் ஆயுதங்களைக் கையில எடுத்தவங்கள். அப்பிடி எடுத்தவங்கள் எல்லாம் பெரிய பாவிகள். எட்டநிண்டு தலையாட்டி நிண்டவை எல்லாரும் அப்பாவிகளாம் எண்டு கதை விடுகினமாம் கதை.

இதைப்பற்றி மொக்கன் கொஞ்சம் விளக்கமாய் சொல்லப்போறான். தமிழ்த் துரோகிகள் இயற்கையா சாகமாட்டானுகள் எண்டு மேடைக்கு மேடை முழங்கிய வீராவேசப் பேச்சாளர்கள் எல்லாரும் கற்ற தயவில மேடை ஏறினவை. ஆர் அவைய மேடையில ஏத்தினவை. பேச்சுக்களுக்கு எல்லாம் கைதட்டி பேச்சாளரையும் பொடியங்களையும் உசுப்பேத்தினவை ஆர்? ஒழுங்கான சாப்பாட்டுக்கு வழியில்லாமல் ஒரு நேரம் பழஞ்சோறும் ஒரு நேரம் பாணும் சம்பலும் திண்டு சீவியம் நடத்தின குடும்பத்து பொடியங்களைப் பிளேற்றால கையை கீற வைச்சு நெத்தியில ரத்தப்பொட்டு போடச்செய்து பெருமைப்பட்ட பெரிய மனுசர் எல்லாம் ஆர்? எந்தக் கட்சிக்காரரர்?

இப்ப புனிதர் வேசம் போடுற போலிகள் துணிஞ்சு சொல்லட்டும். உணர்ச்சிவசப்பட்டு குடும்பத்தைத் துறந்து சாவுக்கு பயப்பிடாமல் போராட வெளிக்கிட்ட பொடியங்களை இரகசியமாய் தட்டிக்கொடுத்து தடவி விட்டவை ஆர் எண்டு? காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில மேடையில பேசித் திரிஞ்சதுக்காக மேசைக்காலோட கட்டி வைச்சு அடிக்கப்பட்ட மாவை சேனா திராசா வாய்திறந்து சொல்லு வாரோ? சிவகுமாரின்ர பாதைதான் தங்கட பாதை எண்டு போராட வெளிக் கிட்ட பொடியங்கள் எந்த தியாகத்துக்கும் தயாராகத்தான் இருந்தாங்கள். ஒளிச்சுத் திரியேக்க எங்கயாலும் கிடைக்கிற வீட்டில சாப்பாடு, தண்ணி இப்பிடியா இயங்கின பொடியங் களைத்தான் இரத்தக்கறை பட்டவங்கள் எண்டு சொல்லி இழிவு பட்டம் கட்டப்பாக்கினம். பொடியங்களுக்குப் பின்னால நிண்டு உசார் குடுத்த மனுசர் எல்லாம் ஆர்.?

பொன்னம்பலம் ஐயாண்ட தமிழ் காங்கிரஸ் கட்சியா? அல்லது சமசமாய, கொமினிஸ் கட்சிகளா? மேஜர் துரையப்பா கொல்லப்பட்டபோது வட்டுக்கோட்டை தியாகராஜா கொல்லப்பட்டபோதும் இரகசியமாக

விருந்து வைச்சு மகிழ்ச்சி கொண்டாடிய மகானுகள் எந்தக் கட்சி? இதை எல்லாத்தையும் ஆர் மறந்தாலும் இந்த மொக்கன் மறக்கமாட்டான். ஆனால் இந்த புனிதர்மாரின்ர கதையை எதிர்த்து கதைக்கிறதுக்கு எவனுக்குமே திராணி இல்லப்போல கிடக்குது. பொடியங்கள் இருக்கு மட்டும் தலையில தூக்கி வைச்சு ஏந்திய எங்கட பேப்பர்காரனுகளும் இதைப்பற்றி ஒண்டையுமே சொல்லுறானுகள் இல்ல.

கழிவு ஓயில் விசயத்தில ஒரு நிபுணர் குழுவை வைச்சு ஊர் உலகத்த ஏமாத்த பார்த்தது மாகாணசபை. ஆனால் எங்கட டாக்குத்தர் பொர்டியங்கள் விட்டானுகளோ. அவங்கள் சில சில கேள்விகள் கேட்டினம். ஒருத்தரும் வாயத் திறந்து ஒண்டுமே சொல்லலை. எங்கள ஆள வந்தவையின்ர சீர் இப்பிடி ஆடிப்போய் கிடக்குது. இப்பத்தான் ஓடி முழிக்கினம். இனிப்பாருங்கோ ஏமாத்துகள் லேசில எடுபடாது. இதுக்குள்ளே நாட்டைக் கொள்ளையடிச்ச மகிந்தவோட சேந்து நிண்ட டக்கிளஸ், சந்திரகுமார், இப்ப மைத்திரியோட சேந்து நிக்கினம் எண்டு மாவை சேனாதிராசா பெரிய பழியா சொல்லியிருக்கிறார். ஆரோ கொள்ளையடிக்க கூட நிண்டவங்கள்ளதான் குறை வருகுது. இப்ப இவை ஆரோட கூடி கும்பி அடிக்கினம்.

மண்கொள்ளை, மரக்கொள்ளை எண்டு கையும் மெய்யுமாய் பிடிபட்ட பிரதேச சபை உறுப்பினர் அவற்றர செல்வாக்கால விடுவிக்கிற மாகாண சபை உறுப்பினர் எல்லோரும் எந்தக் கட்சிக்காரரர்? மாவையிண்ட கண்ணுக்கு உள்ளூரில நடக்கிற விசயங்கள் ஒண்டுமே தெரியிறேல்லையோ. உள்ளுக்குள்ளேயே கொள்ளைக்காறர வைச்சுக்கொண்டு வெளியில தானாம் ஆக்கள தேடினம். மொக்கியும் உவங்கள் கண்கெட்டு போவாங்கள் எண்டு திட்டிக்கொட்டுறாள். எலக்சன் திருவிழாக்கு நாள் கிட்டுது. வெண்டு தாறம், வெண்டு தாறம் எண்டு பழைய பல்லவிய உரத்து பாடத்தொடங்குவினம். புனிதர்களும் மகானுகளும் மேடையில உபதேசம் செய்ய வெளிக்கிடுவினம். ஆனால் இந்த முறை இவையின்ர பருப்பு ஒண்டும் அவியாது. இவை ஒருத்தருக்கொருத்தர் உள்ளுக்குள்ள குத்து வெட்டுப்பட்டுக் கொண்டு வெளியில ஒற்றுமை வேசம் போடினம். ஆனா இந்த ஒற்றுமை வேசமும் இடையில கலையும்.எலக்சன்ல ஆர் வெல்லவினம் எண்ட ஏக்கமும், கவலையும் எல்லாரையும் போட்டுவாட்டுது. ஆனால் இவை வெளிக்காட்டினம் இல்ல பாருங்கோ. விருப்பு வாக்குக்கு உள்ளுக்குள்ள பெரிய போட்டி. வெளியில உரிமைப் போர், பிரசங்கங்கள். ஒரு பாட்டு ஒண்டு காதில கேக்குது.

'உள்ளுக்குள்ள அழுகிறன்
வெளியில சிரிக்கிறன்
நல்ல வேசம் வெளுத்து
வாங்குறன்"

இதை எங்களின்ர கூட்டமைப்புக் கூத்துக்காரரர் ஏற்றுக்கொள்ளுவினமோ எண்டு மொக்கன் கேட்கிறான்.

### ஆங்கிலக்கால்வாயை...

இந்த அதிவேக சுரங்கப் பாதையில் ரயிலில் அடிபட்டு காயப்படவோ அல்லது உயிரிழக்கவோ கூடிய ஆபத்துக்கள் இருந்தும் இந்த நபர் அதனை நடந்து கடந்துவந்துள்ளதாக சுரங்கப்பாதையை நிர்வகிக்கும் யூரோடனல் நிறுவனம் கூறுகின்றது.அண்மைக் காலங்களில் பிரிட்டனை வந்தடைய முயற்சிக்கும் குடியேறிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஆனால், குடியேறிகள் முகாமிட்டுள்ளகலேபகுதியில்தற்போதுநிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக யூரோடனல் கூறுகின்றது.

### தையில் போராட்டம்...

என்பதையும் அவரே ஒப்புக்கொள்ளுகிறார்.

அவர் போராட்ட அறிவிப்புக்கு விடுத்த காலக்கெடு முடிவடைந்து எட்டு மாதங்களாகிவிட்டநிலையிலும்போராட்டம் பற்றி மழுப்பல் பதில்களையே அவர் தெரிவித்து வருவது அவர் மீதான மக்கள் நம்பிக்கையை மழுங்கடித்து வருகிறது.

1970 களின் ஆரம்பம் முதல் திரு சேனாதிராசாவும் தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகியவற்றின் தலைவர்களும் முன்னணி இளைஞர்களும் இப்படியான வீரப் பேச்சுக்களைப் பேசுவதும் பின்னர் அதற்கு மாறாக நடந்துகொள்ளுவதும் வரலாறு தெரிவிக்கும் உண்மைகள்.

தேர்தல் காலத்தில் ஒரு பேச்சும் தேர்தல் முடிவடைந்த பின் நடைமுறையில் வேறு ஒன்றுமாக இருப்பது இவர்களுக்கு வழமையாகி விட்டதை மக்கள் படிப்படியாகப் புரிந்து வருகிறார்கள். இவர்களது வீர ஆவேச பேச்சுக்களை மக்கள் தொடர்ந்தும் நம்பி ஏமாறுவார்கள் என எண்ணுவது பகற் கனவாகவே இருக்கும்.

### உயிர்விட்ட...

அரும்பாடுபட்டு உழைத்தவர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மட்டுமே.

இவ்வாறு புதிய சோனகத்தெரு வாசியான நௌசாத் என்பவர் நேற்று இடம் பெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் தெராிவித்தா.


முஸ்லிம் மக்கள் அகதிகளாக வாழக் கூடாது என்பதற்காக புத்தளம் மாவட்டத்தில் நாம் கோரமலே தனது பணத்தில் முகாம் ஒன்றை அமைத்து எம்மை காத்தவர் அவர் மட்டுமே.

அதன் நினைவாக அந்தக் குடியிரு புக்கு தேவாபாத் என பெயர் சூட் எம்மக்கள் டக்ளஸ்தேவானந்தா அவர் தெய்வமாகவே மதித்து வருகின்றன

அந்த வகையில் முஸ்லிம் மக் டம் வாக்கு கேட்கும் உரிமை ஈழ ஜனநாயகக் கட்சியினருக்கு உள்ளதாகவும் அவர் அங்கே சுட் டினார்.

# குப்பி கடிக்காத போராளிகள் தமிழினத்தின் துரோகிகள்

# சிக்கினார் சிறீதரன்



இடம்பெறவுள்ள தேர்தலில் தம்மை இணைத்துக் கொள்ள வேண்டும் என புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகள் சிலர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கோரிக்கை வைத்திருந்தது தெரிந்ததே. இந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதும் முன்னாள் போராளிகள் முன்னாள் உதயன் பத்திரிகையின் தலைமை ஆசிரியர் வித்தியாதரன் தலைமையில் சுயேட்சைக் குழுவாக தேர்தலில் களமிறங்கியிருப்பதும் தெரிந்த விடயங்களே.கடந்த மாதம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தெரிவிற்காக வவுனியாவில் இடம்பெற்ற அதன் தலைவர்கள் உள்ளடங்கிய கூட்டத்தின்போது வித்தியாதரனின் தலைமையில் அங்கு சென்றிருந்த போராளிகள் தமது கோரிக்கையை முன்வைத்திருந்த போது அதற்கு ஆவேசத்துடன் பதிலளித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர் சம்பந்தர், நீங்கள் எங்களுக்கு குழி பறிக்க வந்திருக்கிறீர்கள் எனவும் உங்களின் பின்னனியில் அரச தரப்பில் இருந்து யாரோ செயற்படுகிறார்கள் எனவும் தெரிவித்திருந்தார்.

இந்த வேளையில் அங்கிருந்த புலிகளின் முன்னாள் ஆதரவாளரும் தமிழரசுக் கட்சியின் வேட்பாளருமாகிய சிறிதரன் அவர்கள் நீங்கள் எல்லாம் போராளிகளா? அவர்களைப் பார்த்து கேள்வி எழுப்பியிருந்த தாகவும் தெரியவருகின்றது. அதுமட்டு மல்லாது குப்பி கடிக்காதவர்கள் யாரும் போராளிகள் அல்ல எனவும், குப்பி கடிக்காத நீங்கள் எல்லாம் தமிழினத் துரோகிகள் எனவும் தெரிவித்திருந்தார்.

சிறிதரனின் இந்தக் கருத் தானது அங்கு சென்றிருந்த முன் னாள் போராளிகளை மட்டுமல்லாது விடுதலைப் புலிகளை ஆதரித்த மக்கள் மத்தியிலும் பெரும் சர்ச் சையைஏற்படுத்திஇருந்தது.இதனால் வேட்பாளர் சிறிதரனுக்கு மக்கள் மத்தியில் பலத்த எதிர்ப்பு கிழம்பிய

02 பக்கம் பார்க்க

# facebook

## முகநூல் முடிச்சுக்கள் .... 2

## Face Book Quiz

**Alex Varma**

### பாத்துப் போடுங்கோ புள்ளடியை...

கடைசியா ஒண்டு சொல்லுறன். உழுற மாடு ஊருக்குள்ள உழும். புலன்பெயர் புலிப் பினாமிகளினர் கலப்பைலதான உழும் எண்டா அது உழப்போவது தமிழர்களின் தாயகத்தை அல்ல மக்களின் வாழ்வாதாரத்தை. யாழ்ப்பாணத்தில ஒரு சீற் கிடைக்கும எண்டு சொல்லுறாங்கள்...

அம்மாவாணை 17 ஆம் திகதி உங்களுக்கு வியளன் போய் சனி மாறுது எண்டு நினைச்சு புள்ளடியைப் போடுங்கோ...

அடுத்த கலவரம் வந்தா கறுப்புக் போவணமும் கிடையாது. சொல்லிப் போட்டன். பிறகு அமரிக்ன் உதவி செய்திட்டான். இந்தியன் இறங்கி அடிச்சுப் போட்டான். எண்டு ஒப்பாரி வைக்ககஜேந்திரன்நாட்டிலஇருக்காது. 40'000 சவப்பெட்டிதயார்பண்ணுங்கோஎண்டுசொன்ன வர் படகில ஏறி பறந்திடுவார். வெளிநாட்டுக் குஞ்சுகளுக்கு வியாபாரம் சூடு பிடிக்கும். வீடு, கடை மண்டபம் எண்டு வாங்கப் பிளான் வைச் சிருக்பிறவைக்கு குரு உச்சத்தில நிண்டு விளை யாடும். பாத்துப் போடுங்கோ புள்ளடியை...

**Parameswaran Subramaniyam**

### பாதை மாறிய கூட்டமைப்பு

தமிழ்த் தேசியத் கூட்டமைப்பு எதற்கு யாரால் உருவாக்கப்பட்டது என்பதை அறிவீர் கள்இ ஆனால் கூட்டமைப்பு இப்போது பாதை மாறி வேறு வழியில் பயணிக்கத் தொடங்கி யுள்ளது.

சுமந்திரன் போன்றவர்களை விலக்கி வைக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். கூட்ட ம்மப்பின் பேரில் போட்டியிட்டாலும் சுமந்தி ரனை புறக்கணிக்க வேண்டும். எதிரி வந்தாலும் அவன் என்ன செய்வான் என்பது நிச்சயம் தெரியும் ஆனால் இவர்களைப் போன்றவர்கள் வருவது அதைவிட மோசமானது. மக்களோடு மக்களாக போராடும் அனந்தி அக்கா போன்ற வர்களை புறக்கணித்துவிட்டு இவர்களை கொண்டுவருவது மிகவும் ஆபத்தானது. சுமந் திரனை தோல்வியுறச் செய்ய வேண்டும்.

**Jathi Jathindra**

### பலமான பின்தளம்

தெற்கில் மகிந்த ராஜபக்சவை எதிர்த்து களமிறங்குவதற்குஎவரும்இல்லாதவொருசூழ லில்தான் அதுவரை மகிந்தவின் வேலைத்திட் டங்களுக்கு மிகவும் ஒத்தாசையாக இருந்த மைத்திரிபாலசிறிசேனஅவருக்குஎதிராககளமி றங்க முன்வந்தார். இது ஒரு பலமான பின்தளம் இல்லாமல் ஒருபோதும் சாத்தியப்பட்டிருக்க முடியாது. இதனை இன்னொரு வகையில் சொல் வதானால் அதுவரை மகிந்தவின் முன்னால் ஒரு பூனைக்குட்டியாக அடங்கிக் கிடந்த மைத்திரி பால சிறிசேன ஒரு புலியாக ஆக்கப்பட்டார். ஒரு திரைமறைவு வேலைத்திட்டம் இல்லாமல் இது ஒரு போதுமே சாத்தியப்பட்டிருக்க முடி யாது. பலரது திரைமறைவு செயற்பாடுகள் வெற்றிபெற்ற போதிலும் கூட அந்த வெற்றி இன்னும் முழுமையடையவில்லை.

சுமந்திரனை தோல்வியுறச் செய்ய வேண் டும்.

### ஒரு நசலும் சனங்களுக்கு செய்ய மாட்டியள்

01 சர்வதேசம் எமது ம்க்களுக்கு நிரந்தர தீர்வு வழங்க தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஊடாக மக்கள் ஆணை வழங்கவேண்டும்: எம்.ஏ.சுமந்திரன்

02 எமது தேசிய தலைவரின் கட்டளைக் காக நாம் முள்ளிவாய்க்கால் வரை சென் றோம்...! வடக்கு கல்வியமைச்சர் குருகுலராஜா.

சுறுக்கரின் அவதானம் :

அப்ப மோனை நீங்கள் ஒரு நசலும் சனங்களுக்கு . செய்ய மாட்டியள் . எண்டு சொல்லுறியள் . இவங்கடை குசும்பு கூடித்தான் போச்சுது .யானை செத்தாலும் ஆயிரம் பொன் எண்டிறது சரியாத்தான் கிடக்கு.

**Rahu Rahu Kathiravelu**

### கண்ட நாய்களுக்கும் கை கொடுத்திருக்க மாட்டேன்

புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரு.வெற்றி அடைந்த பின்னர் கூட்டமைப்பில் தேர்வு செய்யப்பட்ட பாராளுமன்றஉறுப்பினர்கள்தமிழீழதேசியத்தலைவரைச்சந்திக்கச் சென்று அவரது வாசல்தளத்தில் காத்திருந்தனர்.

அங்கே பொட்டம்மான் உள்ளிட்ட தளபதிகளும் காத்திருந் தனர்.

அப்போது அங்கே வந்த பிரபாகரன் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் கை கொடுத்து விட்டு உள்ளே செல்லும்படி கூறிவிட்டு அவர்கள் உள்ளே சென்றதும் அருகில் இருந்த பொட்டம்மானைப் பார்த்து 'எல்லாம் உன்னால் வந்த வினை! செய்ய வேண்டியதை (மண்டையில் போடுவது) ஒழுங்காய் செய்திருந்தால் நான் கண்ட நாய்களுக்கும் கை கொடுத்திருக்க மாட்டேன்' என்று சொன்னாராம்.

இதைக் கேட்ட பொட்டம்மான் முகம் கறுத்த நிலையில் செய்வதறியாது நின்றாராம்.

பிரபாகரன் அன்று பொட்டம்மானுக்கு கொடுத்த வேலையை (மண்டையில் போடுவது) ஒழுங்காய் செய்திருந்தால் இப்போது கண்ட கண்ட நாய்கள் எல்லாம் தெருத் தெருவாகக் குலைத்துக் கொண்டு நிற்பதையும் தடுத்திருக்கலாம்.

கூட்டமைப்பு உருவாக்கப்படுவதற்கு முதல் அதில் அங்கம் வகித்தவர்கள் புலிகளின் பிஸ்டல் குழுவினரால் மண்டையில் போட பட்டியலாக்கப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**Gowripal Sathiri Sri**

### திலீபனுக்கு நினைவுத் தூபி

இந்தத் தடவை தேர்தலில் வெற்றி பெறும் தமிழ் கட்சிகளோ அல்லது தேசியக் கட்சிகளின் தமிழ்பிரதிநிதிகளோ யாரும் பிரபாகரனுக்கு சிலை வைக்க வேண்டாம் .

முடிந்தால் திலீபனுக்கு ஒரு நினைவுத் தூபியை கட்டி விடுங்கள் அது போதும் நம் வலிகளை வரலாற்றுக்கு சொல்ல.

இல. 372. பிரதான வீதி. யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அற்புதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
A Special Edition of "Thinamurasu"